# உதயன்

31 °C | °F
தெளிவான
வானம்

சுடர் 30 கதிர் 279 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 15. செவ்வாய்க்கிழமை 01.09.2015


## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவில் ஜனாதிபதி தலையிடார்

கொழும்பு, செப். 1
எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவு செய்யும் விவகாரத்தில் தலையிடப் போவதில்லை என்று, ஜனாதிபதி மைத்திரி

பக்கம் 24.....

# கருணாவின் கருத்தால் இராணுவம் குழப்பம்

### பிரபாகரனின் சாவு குறித்து சட்ட ஆலோசனை பெறவேண்டும் என்கிறார் ராணுவப் பேச்சாளர்





கொழும்பு, செப்ரெம்பர் 1
தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்தும் அதன் தலைவர் பிரபாகரனின் சாவு தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் முன்னாள் துணைத் தலைவரும், கிழக்கு மாகாணத் தளபதியும், முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) வெளியிட்டுள்ள கருத்துகளால் இராணுவத் தரப்பில் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.
இது குறித்து அறிந்து கொள்ள சட்ட ஆலோசனைதான் பெறவேண்டும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர்

பக்கம் 24.....

## கல்விச் சமூகத்தவரை தூக்கியெறிந்துள்ளது தமிழ்க் கூட்டமைப்பு

### யாழ். கல்வியியலாளர் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 1
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேசியப் பட்டியல் ஆசன விடயத்தில், கல்விச் சமூகத்தவரை தூக்கியெறிந்துள்ளது என்று யாழ்ப்பாணக் கல்வியியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.
அந்த அமைப்பின் தலைவர் இ.இரட்ணம் அதன் செயலாளர் பேராசிரியர் க.தேவராசா ஆகியோர் கையெழுத்திட்டு வெளியிட்டு வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
தேர்தலில் போட்டியிட விரும்பாத, கல்விமான்களும் – நிபுணத்துவம் வாய்ந்தவர்

பக்கம் 24.....

## சர்வதேச விசாரணை கோரி அடம் பிடித்துப் பயனில்லை

### உள்ளக விசாரணை மூலமே தீர்வு என்கிறது ஐ.தே.க.



கொழும்பு, செப்.1
சர்வதேச விசாரணை கோரி அடம்பிடிப்பதில் பயனில்லை. பலமான உள்ளக விசாரணை மூலம் அனைத்துப் பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.
சர்வதேச விசாரணை நாட்டுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கோரிக்கைக்காகச் சர்வதேச விசாரணை எம்மால் நடத்த முடியாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

பக்கம் 24.....

## ஜனாதிபதி இன்று முக்கிய முடிவாம்

கொழும்பு, செப்.1
நாடாளுமன்றச் செயற்பாடு குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இன்று ஜனநாயக ரீதியான தீர்மானத்தை எடுப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் இந்தக் கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பிலும், இந்த நாட்டில் பெரும்பாலானவர்கள் எதிர்பார்க்காத தீர்மானம் ஒன்றை ஜனாதிபதி இன்று மேற்கொள்வார் என அவர் குறிப்பிட்டார்.

பக்கம் 24.....

## இலங்கைக்கு ஆதரவான தீர்மானத்தை மீளப் பெறுக

### அமெரிக்காவுக்கு 100 மணிநேர அவகாசம் வழங்கின தமிழக மாணவ அமைப்புக்கள்

சென்னை, செப்.1
இலங்கைக்கு ஆதரவான தீர்மானத்தை அமெரிக்கா எதிர்வரும் 100 மணித்தியாலங்களுக்குள் மீளப்பெறாவிடின் அந்த நாட்டுக்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்வோம் எனத் தமிழக மாணவ அமைப்புக்கள் அறிவித்துள்ளன
அத்துடன் அமெரிக்காவின் பங்களிப்பில் தமிழகத்திலுள்ள அனைத்து வணிக நிறுவனங்களுக்கும் எதிராகப் போராட்டம் நடத்துவோம் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.
இலங்கையில் நடந்ததாக கூறும் மனித உரிமை மீறல்கள் பற்றிய விசாரணையை இலங்கையே விசாரிக்கவேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைபாட்டை 100 மணி நேரத்தில் திரும்பப்பெற வேண்டியும் இலங்கையில் நடந்த இனப் படுகொலைக்கு எதிராக சர்வதேச விசாரணையை

பக்கம் 24.....

## 8ஆவது நாடாளுமன்றம் இன்று காலை கூடுகிறது

### ஜனாதிபதி கொள்கை விளக்க உரை

கொழும்பு, செப்.1
இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றம் இன்று கூடுகின்றது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பி னர்கள் தாம் விரும்பிய ஆசன வரிசையில் அமர முடியுமென நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் டபிள்யு.பி.டி. தசநாயக்க அறிவித்துள்ளார்.
சபாநாயகர் தெரிவுக்குப் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசன வரிசைகள் நிரந்தரமாக உறுதி செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளதாவது:–
இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இலங்கையின் 8ஆவது நாடாளுமன்றத்தின் சம்பிரதாய

பக்கம் 24.....

## கொலைச் சந்தேகநபரை சுட்டுப் பிடித்தது பொலிஸ்

### வடமராட்சியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 1
கொலைச் சந்தேகநபரைக் கைது செய்யச் சென்ற போது அவர் பொலிஸாரைத் திருப்பித் தாக்கியதோடு தப்பியோடவும் முற்பட்டார். உடனே அவரைத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு காயப்படுத்திக் கைது செய்தனர் பொலிஸார்.
பருத்தித்துறையில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. துப்பாக்கிக் குண்டு பாய்ந்து காயப்பட்ட கொலைச் சந்தேகநபர் தற்போது யாழ்.

பக்கம் 24.....

## முடிவடைந்துவிட்டது சர்வதேச விசாரணை

### அதனை மீண்டும் கோருவதில் பயனில்லை என்கிறார் சுமந்திரன்

யாழ்ப்பாணம், செப். 1
சர்வதேச விசாரணை ஏற்கனவே நடந்து முடிந்துள்ளது. இன்னொரு முறை சர்வதேச விசாரணை நடத்தக் கோருவதில் அர்த்தமில்லை. நடந்து முடிந்த சர்வதேச விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை, சர்வதேசப் பங்களிப்புடனான பொறிமுறையூடாக நடத்துமாறே நாம் கோரிக்கை விடுத்துள்ளோம். அவ்வாறு இடம்பெறும் என்று நம்புவதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த ஏனைய மூன்று கட்சிகளும் இணைந்து நேற்று முன்தினம் சந்திப்பு ஒன்றை

பக்கம் 24.....

## 50 கிலோ கஞ்சாவுடன் மாதகலில் 2 பேர் கைது

### வவுனியாவுக்குக் கடத்தவிருந்தவேளை

யாழ்ப்பாணம், செப். 1
மாதகல் கடற்கரைப் பகுதியில் வாகனத்திலிருந்து நேற்று 50 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. அதனை வவுனியாவுக்குக் கொண்டுசெல்ல முற்பட்ட 2 பேரும் வாகனத்துடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இளவாலைப் பொலிஸார் நேற்று

பக்கம் 24.....

## உள்ளகப் பொறிமுறைக்கென சர்வதேச தொழில்நுட்ப உதவி

### பெறப்படும் என்கிறார் மங்கள



கொழும்பு, செப். 1
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்குச் சர்வதேசத்தின் தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும் என்று, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
வெளிவிவகார அமைச்சராக மீளவும் பதவியேற்றுக் கொண்ட பின்

பக்கம் 24.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பௌத்தர்களின் புனித உற்சவமான எசல மஹா பெரஹரா வெற்றிகரமாக நிறைவு பெற்றதைக் குறிக்கும் அறிக்கை சமர்ப்பிக்கும் நிகழ்வு, நேற்றுமுன்தினம் பிற்பகல் கண்டியில் நடைபெற்றது. அறிக்கையை தியவதன நிலமே நிலங்க தெல, கண்டியில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து சம்பிரதாயபூர்வமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்தார். அதையடுத்து ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அரச மரமொன்றும் ஜனாதிபதியால் நடப்பட்டது. அத்துடன் பெரஹராவில் கலந்துகொண்ட கலைஞர்க ளுக்கு சான்றிதழ்களையும், கேடயங்களையும் வழங்கினார். (ற)

## சுகாதார சீர்கேட்டுடன் நல்லூரில் இயங்கிய உணவக உரிமையாளர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், செப்.1

நல்லூர் ஆலய சூழலில் அமைந்துள்ள உணவகங்கள் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் நேற்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் சுகாதார குறைபாடுளுடன் இயங்கி வந்த ஐந்து உணவகங்களுக்கெதிராக பொதுச் சுகாதார பரிசோதகர் மு. விஜயகுமாரால் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த உணவக உரிமையாளர்கள் தமக்கெதிரான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டதையடுத்து அவர்களுக்கு நீதிமன்றால் தலா 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் ஆகக் குறைந்த சுகாதார தேவைப்பாடுகள் இன்றி இயங்கி வந்த இரண்டு உணவகங்களுக்கு சீல் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

(ற-103)

## பராமரிப்பின்றிய பஸ் தரிப்பிடத்தால் கலாசாரச் சீர்கேடுகள் அரங்கேற்றம்

### சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை

வவுனியா, செப்.1

வவுனியா நேரியகுளம் (பாரதிபுரம்) வீதியில் உள்ள பயணிகள் பஸ் தரிப்பிடம் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கும் பொதுமக்கள், அது கலாசாரச் சீர்கேடுகளுக்கும் வழிகோலுகின்றது என்றும் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறித்த பஸ் தரிப்பிடம் பல ஆண்டுகளாகப் பராமரிக்கப்படாது கைவிடப்பட்டுள்ளதால், இளைஞர்களால் மது அருந்தவும், காதலர்களின் கேளிக்கை இடமாகவும் மாறியுள்ளது என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பல தடவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கை



யும் எடுக்கப்படாதுள்ளது என்று தெரிவிக்கும் மக்கள் இதனால் வெயிலில் பஸ்ஸுக்குக் காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது என்றும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்து பயணிகள் குறித்த பஸ் தரிப்பிடத்தைப் பயன்படுத்துவதற்கு ஆவன செய்து தர வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-402)

## நல்லூரில் ஆயுள்வேத கண்காட்சி: சிகிச்சையும் பெறலாம்

யாழ்ப்பாணம், செப்.1

நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவையொட்டி கோயில் முன்பாக யாழ்.மாநகர சபைக்கு அருகில் – நல்லூர் பிரதேச செயலகத்தை அண்மித்துள்ள சித்த மருத்துவப் பிரிவில் பொதுமக்களுக்காக மூலிகைக் கண்காட்சி நடத்தப்படுகின்றது.

அதில் மருத்துவ ஆலோசனை, இலைக்கஞ்சி விநியோகம் என்பனவும் இலவசமாக வழங்கப்படுகின்றது. அதில் கலந்து பயன்பெறுமாறு யாழ்.மாநகர சபை சித்த மருத்துவப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கண்காட்சி 25 ஆம் திருவிழா வரை தினமும் முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை இடம்பெறும் என்றும் அதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் யாழ். மாநகர சபை பிரதம சித்த மருத்துவப் பொறுப்பதிகாரி வைத்தியர் திருமதி அருந்ததி சிவசுப்பிரமணியம் கேட்டுக்கொண்டுள்ளார்.

தினமும் முற்பகல் 11 மணிக்கு போசாக்குப் பானம் இலைக்கஞ்சி இலவசமாக வழங்கப்படும். மூலிகைக் கண்காட்சியில் பயன்தரு மூலிகைக்களை இனங்காண்பதுடன் அவற்றின் பயன்பாட்டினையும் அறியக் கூடியதாக இருக்கும். பாடசாலை மாணவர்களுக்கு இந்தக் கண்காட்சி பயனுள்ளதாக அமையும்.

சலரோக நோயாளிகளுக்கான மதுமேகச்சூரணம் மற்றும் வாத நோய்களுக்கு ஏற்ற எண்ணை வகைகளையும் பெற்றுக் கொள்ளலாம். சருமப் பராமரிப்பு, இள நரை, கூந்தல் வளருவதற்கான சிகிச்சையும் அங்கு வழங்கப்படும் என்று வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அழகுக் கலை அறிமுகமும் இங்கு வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-4)

## ஆன்மீக வளர்ச்சியே ஆத்ம திருப்தியளிக்கும்

### பெரஹராவின் இறுதி நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு, செப்.1

அனைத்து துறைகளிலும் நாம் வளர்ச்சியடைந்தாலும், ஆன்மீக வளர்ச்சியே ஆத்மீக திருப்தியளிக்கும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வரலாற்று சிறப்புமிக்க கண்டி எசல பெரஹராவின் இறுதி நிகழ்வு நேற்று முன்தினம் மகாவலி கங்கையில் இடம்பெற்ற நீர்வெட்டு சடங்குடன் நிறைவுக்கு வந்தது. அதன்பின்னர் கண்டியில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விசேட வைபவத்தில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

கண்டி பல்லேகலயில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள சர்வதேச பௌத்த மையத்தை, மேலும் விஸ்தரித்து பௌத்த தர்மத்தை உலகளாவிய ரீதியில் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எமது நாட்டில் வாழும் மக்களின் எதிர்காலத்திற்கு அவசியமான பொருளாதாரத்தை மேம்படுத்தி, சுதந்திரமானதும் ஜனநாயகமானதுமான நாட்டில் நவ்லாட்சியை சக்திமிக்க ஒன்றாக மாற்ற வேண்டும்.

அத்துடன் புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்தி பல்வேறு கண்டுபிடிப்புகளை மேற்கொண்டு நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல வேண்டும். ஆனால் இவை எல்லாவற்றிலும் மேலாக, இறுதியாக எமக்கு கிடைக்கும் ஆன்மீக வளர்ச்சியே மிகவும் முக்கியமானது.

ஆகவே நல்லாட்சியுடன் கூடிய ஜனநாயக நாட்டில், பௌத்த தத்துவத்தை ஊக்குவிப்பதே எமது எதிர்பார்ப்பாகும். – என்றார்.

(ற)

## நாடாளுமன்ற உறுப்பினர் சாந்திக்கு வற்றாப்பளையில் வரவேற்பு நிகழ்வு

முல்லைத்தீவு, செப்.1

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான சாந்தி ஶ்ரீஸ்கந்தராஜாவுக்கு நேற்று முள்ளியவளை வற்றாப்பளை பொது நோக்கு மண்டவத்தில் பொதுமக்களால் வரவேற்பு நடத்தப்பட்டது.

வற்றாப்பளை கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் ம.விக்கினேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினரை வரவேற்று வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய நிர்வாகத் தலைவர் பொ.குகதாசன், கேப்பாபிலவு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பரமேஸ்வரன், வற்றாப்பளை கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர் க.அரசரட்ணம் மற்றும் கேப்பாபிலவு வற்றாப்பளை மாதர் கிராம அபிவிருத்திச் சங்க தலைவர்கள் ஆகியோர் உரையாற்றினர்.

அத்துடன் கேப்பாபிலவு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. கேப்பாபிலவில் உறுதியுள்ள தமது காணிகளையும் விடிவிக்கப்படாத வயல் நிலங்களையும் விடுவித்து தம்மை தமது சொந்தக் கிராமத்திலேயே மீள் குடியமர்த்த வேண்டும் எனவும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலும் அவர்களின் பாவனையிலுள்ளதுமான கேப்பாபிலவு பிரதான வீதியை விடுவித்து தமது இலகுவான பயணத்திற்கு வழி செய்ய வேண்டுமெனவும் அந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அங்கு கருத்துத் தெரிவித்த சாந்தி ஶ்ரீஸ்கந்தராஜா:–

என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கும் எமது கட்சித் தலைமைக்கும் நான் நன்றியுடையவராக இருக்கும் அதே வேளையில் முள்ளிவாய்க்கால் போரில் எமது எமது மக்களின் இழப்புக்களை துயரங்களை நேரில் பார்த்தவள் என்ற வகையிலும் நானும் அதில் என் காலை இழந்தவள் என்ற வகையிலும் வலிகளை நான் அறிவேன்.

வலிபடும் மக்களின் துயர் தீர்க்க என்னால் இயன்ற அளவு பாடுபடுவேன். மக்களுடைய நிலங்கள் அவர்களுக்கு கிடைப்பதற்கு உரிய தரப்புக்களோடு தொடர்பு கொள்வதோடு அதற்காக குரல் கொடுப்பேன். – என்றார்.

(ற-102)

## கட்டாக்காலி மாடுகளை பிடிப்பதற்கு சாவகச்சேரி நகர சபை நடவடிக்கை

### அவற்றை உடனடியாக ஏலத்தில் விற்கவும் முடிவு

தென்மராட்சி, செப்.1

பொதுச் சந்தைப் பகுதியில் கட்டாக்காலியாக காணப்படும் மாடுகளைப் பிடிப்பதற்கு சாவகச்சேரி நகரசபையினர் ஏற்பாடுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

பிடிக்கப்படும் மாடுகள் எந்தக் காரணம் கொண்டும் மீள வழங்கப்படமாட்டாது எனவும் [illegible]ணடியாக கால்நடை மரு[illegible] பரிந்துரை யின் பிரகாரம் ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தைப் பகுதியில் கட்டாக்காலியாக அலையும் மாடுகள் பகல் இரவு வேளைகளில் சந்தையில் கட்டி வைக்கப்படும் மரக்கறி வகைகள் மற்றம் பழவகைகள் போன்றவற்றை தினமும் அழித்து வருகின்றன என வியாபாரிகளால் முறைப்பாடுகள் [illegible] இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நகரசபையால் கடந்த ஒரு மாதமாக கால் நடைகளைக் கட்டி வளர்க்குமாறு ஒலிபெருக்கி மூலம் தொடர்ந்து அறிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும் மாடுகளை வளர்ப்போர் எதுவித நடவடிக்கையும் எடுக்காதுள்ளனர். அதைய டுத்து அவற்றை விசேட கால்நடைகள் பிடிப் போர் மூலம் பிடித்து விற்பனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

## நாய் குறுக்கே பாய்ந்து இளைஞர் விபத்து

வீதியின் குறுக்கே ஓடிய நாயிடம் இருந்து தப்ப முயன்ற இளைஞர் வீதியோரம் இருந்த கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானர். அவரது வலது கால், கை முறிந்ததுடன் பலத்த காயங்களுக்கும் உள்ளானார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கொடிகாமத்தில் நடந்துள்ளது. கொடிகாமம் வடக்கைச் சேர்ந்த எம்.தர்சன் (வயது–18) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நலன்புரி நிலையங்களை புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு

## நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம், செப். 1
யாழ்ப்பாணத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்கு, நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்கள் மிகமோசமான நிலையில் உள்ளன. அதையடுத்து குறித்த நலன்புரி நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மீள்குடியேற்ற அமைச்சால் 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இந்த நிதியில், உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 8 நலன்புரி நிலையங்களும், கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 3 நலன்புரி நிலையங்களும், தெல்லிப்பழை மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட தலா 6 நலன்புரி நிலையங்களும், சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 2 நலன்புரி நிலையங்களுமாக 25 நலன்புரி நிலையங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.
இந்த நிதியில் புனரமைப்புக்கான தகரம் மற்றும் மரம் என்பன வழங்கப்பட்டுள்ளன. நலன்புரி நிலையங்களுக்கு அவை நேரடியாக வழங்கப்பட்டுள்ளதுடன், இந்த வேலைகளை மேற்கொள்வதற்கான கூலிப் பணமும் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
(ற-5)

## வெள்ளவத்தையில் இருந்து தினமும் நல்லூருக்கு பஸ்

யாழ்ப்பாணம், செப் 1
நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவை முன்னிட்டு வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். சாலை முகாமையாளர் செ.குலபாலச்செல்வம் தெரிவித்துள்ளார்.
இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் இந்தச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது. தினமும் இரவு 8.30 மணிக்கு வெள்ளவத்தைப் புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பமாகி புத்தளம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ற-4)

## கட்டிளம் பருவ சுகாதார கருத்தரங்கு

தென்மராட்சி, செப்.1
வரணிப் பிரதேச இளைஞர் யுவதிகளுக்கான கட்டிளம் பருவ சுகாதாரக் கருத்தரங்கு நேற்று வரணி கிராமிய வைத்தியசாலையில் நடைபெற்றது.
வேள்ட் விஷன் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட கருத்தரங்கில் 30க்கு மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டனர்.
(ற-9)

## ஓடு பிரித்து திருட்டு

நெல்லியடி, செப்.1
வீட்டு உரிமையாளர்கள் செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு குடும்பத்தாருடன் சென்றிருந்த சமயம் வீட்டின் ஓடு பிரித்து உள்நுழைந்த திருடர்கள் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் களவாடப்பட்டுள்ளன.
இமையாணன் , கேணியடியைச் சேர்ந்த நா.முத்துராசா என்பவரது வீட்டிலேயே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த சனிக்கிழமை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது
வீட்டு அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த 2 பவுண் சங்கிலி மற்றும் ஒரு சோடி காப்பு என்பனவே களவாடப்பட்டுள்ளன .
இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-108)

## கடந்த எட்டு மாதங்களில் 19, 551 பேருக்கு டெங்கு

கொழும்பு, செப்.1
இலங்கையில் கடந்த எட்டு மாதங்களில் டெங்குத் தொற்றால் 19 ஆயிரத்து 551 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.
டெங்கால் பாதிக்கப்பட்டவர்களில் சுமார் 50.26 வீதம் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டின் நான்காவது வாரத்தில் இதன் எண்ணிக்கை மிகவும் உயர்ந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
டெங்கு காய்ச்சலில் இருந்து தம்மை காப்பாற்றிக் கொள்வதற்கு வழமையான சுற்றுப்புற சூழல் சுத்தகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருக்குமானால், மருத்துவ கவனிப்பைப் பெற்றுக்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.
(ற)

## முண்டான் மீன்களின் பருவகாலம் ஆரம்பம்



மட்டக்களப்பு, செப்.1
முண்டான் அல்லது வெள்ளையாப் போடி என்று அழைக்கப்படும் மீன்கள் மட்டக்களப்பு, போரதீவுப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பொறுகாமம் கிராமத்திலுள்ள குளங்களில் தற்போது அதிகளவில் பிடிப்பட்டு வருகின்றன.
ஓகஸ்ட் மாதம் முதல் செப்ரெம்பர் மாதம் வரை இதன் இதன் பருவகாலமாகும். இந்த மீன்களைப் பிடிப்பதற்காக இரவு வேளைகளில் வலைகள் கட்டிவிடப்படுகின்றன. வலைகளில் அகப்படும் மீன்களை காலை வேளைகளில் வலைகளிலிருந்து பெண்கள் பிரித்தெடுக்கின்றனர்.
ஒரு கிலோ வெள்ளையாப்போடி மீன் 100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. அல்லது சில்லறையாக ஒரு கொத்து அல்லது நான்கு சுண்டுகள் என்ற அடிப்படையில் 200 ரூபாவுக்கு இந்த மீன்கள் விற்பனை செய்யப்படுவதாக குளங்களில் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் தெரிவித்தனர்.
(ற)

## வேணன் அணைக்கட்டு உட்பட 4 அணைக்கட்டுகள் புனரமைப்பு

### நிர்மாணப் பணிகள் நேற்று ஆரம்பமாகின



யாழ்ப்பாணம், செப். 1
தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்ட காரைநகர் வேணன் அணைக்கட்டை நிரந்தரமாகப் புனர்நிர்மாணம் செய்யும் நடவடிக்கைகள், வடக்கு மாகாண விவசாய அமைச்சால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
வடமாகாண விவசாய அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த வேலைகள் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.
மழைநீரை வீணாகக் கடலினுள் கலக்கவிடாது தேக்கி நிலத்தடிநீரை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் வேணன் அணைக்கட்டு உருவாக்கப்பட்டது. கடந்த ஆண்டு விசமிகள் சிலர் வேணன் அணைக்கட்டைச் சேதமாக்கியதால், தேக்கப்பட்டிருந்த மழைநீர் கடலுடன் கலந்தது. இது, விவசாய அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து ஏறத்தாழ 7 ஆயிரம் மணற்பைகளின் உதவியோடு சேதமாக்கப்பட்ட அணைக் கட்டுப்பகுதி அப்போது தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்டது.
தற்போது அணைக்கட்டை நிரந்தரமாகவே புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கென வடமாகாண விவசாய அமைச்சின் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியில் இருந்து 3 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இந்த அணையைப் புனரமைப்பதன் மூலம் வலந்தலை, பிட்டியோடை, ஊரி, மொந்திபுலம் கிராம மக்களைச் சேர்ந்த 500 விவசாயக் குடும்பங்கள் பயன் அடையும் எனவும், 250 ஏக்கர் அளவில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
புனரமைக்கும் பணிகளை, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் நேற்று ஆரம்பித்து வைத்தார்.
வேணன் அணைக்கட்டுப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை புங்குடுதீவு பெரியகிராய் குளம், திருநெல்வேலி பரவைக்குளம், செம்மணி கோப்பாய் வெள்ளநீர்த் தடுப்பணைஆகியவற்றை புனரமைக்கும் பணிகளும் ஆரம்பமாகியுள்ளன. அவற்றுக்கு வடமாகாண விவசாய அமைச்சின் நிதியிலிருந்து 11.2 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்படும் இப்புனரமைப்பு வேலைகள் யாவும் எதிர்வரும் கார்த்திகை மாதத்துக்கு முன்பாக முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.
(ற-5,4)

## பாடசாலை மாணவர்களுக்கான கல்வி ஒழுக்கத்தோடு இணைந்திருக்க வேண்டும்

### வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதர் தெரிவிப்பு

அச்சுவேலி,செப்.1
பாடசாலை மாணவர்களுக்கான கல்வி, ஒழுக்கத்தோடு இணைந்ததாகவும் உயர் விழுமியங்களை நோக்கியதாகவும் இருக்க வேண்டும். மாணவர்கள் பாடசாலைகளில் கற்றுக்கொள்ளும், கண்டுகொள்ளும் ஒழுக்க விழுமியங்கள் அவர்களின் தனிப்பட்ட உயர்வுக்கும், சமூக மேம்பாட்டுக்கும் உறுதுணையாக இருக்கின்றன. மாணவர்கள் தோல்வியை வெற்றியின் முதற்படியாக கொண்டு முன்னேற வேண்டும். –
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதர்.
அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றெசானியோ தலைமையில் நடைபெற்றது. அதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு பிரதம செயலாளர் தொடர்ந்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–
அண்மைக் காலத்தில் நடைபெறும் சமூகச்சீர்கேடுகள், ஒழுக்கக் குறைபாடான செயற்பாடுகள் கவலை தருகின்றன. தலை குனிவை ஏற்படுத்தியுள்ளன. முப்பது வருட போர் நிலைமையால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்ட சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகள், ஒழுக்கக் குறைபாடுகள் சீர்செய்யப்பட வேண்டும். தமிழர்களின் தனித்துவம், பெருமை பாதுகாக்கப்பட வேண்டும்.
மாணவர்கள் பாடசாலைகளில் கற்றுக்கொள்ளும் ஒழுக்கத்தோடு கூடிய கல்வி அவர்களை [illegible] நிலைப்படுத்துவதோடு சமூகத்தையும் மேல்நிலைப்படுத்தும். அச்சுவேலி புனித திரேசாள் கல்லூரிக்கு தனித்துவமான பெருமை உண்டு. அதனை மாணவர்கள் எதிர்கால வாழ்விலும் கடைப்பிடித்து கல்லூரியின் பெயரை பாதுகாக்க வேண்டும்.
ஆழ்கடலில் முத்தெடுப்பவர்கள் தங்களை நெருக்கடிக்கு, துன்பங்களுக்கு உள்ளாக்கி பெறுமதிமிக்க முத்துக்களை பெற்று உயர்கின்றனர். அதேபோன்று தான் மாணவர்களின் கற்றலுக்கான பருவம் ஒழுக்கத்தோடு கூடிய கல்வியால் உயர வேண்டும். அதையே குறிக்கோளாகக் கொண்டு கல்வியை தொடர வேண்டும். கல்விக்கு முடிவில்லை. வாழ்நாள் முழுவதும் கற்கவேண்டும். சமூக மேம்பாட்டுக்கான கருமங்களில் முன்னின்று உழைக்க வேண்டும். சமூகத்தில் நாம் [illegible] வேண்டும். – என்றார்.
(ற-11)

## கர்ப்பிணித் தாய்மாருக்கான சத்துணவுப் பொதி வழங்கல்

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கர்ப்பிணிகளுக்கான ஜூன் மாதத்திற்குரிய உணவுப் பொதி நாளை முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக விநியோகி க்கப்படவுள்ளன என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.
அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட கர்ப்பிணிகளுக்கான மாதாந்தம் 2 ஆயிரம் ரூபா பெறுமதியான போசனைப் பொதி வழங்கும் செயற்திட்டத்தின் கீழ், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 593 பேர் பயன்பெற்று வருகின்றனர்.
இவர்களுக்கான ஜூன் மாதத்திற்குரிய போசாக்குப் பொதி, நாளை முதல் எதிர்வரும் 12 ஆம் திகதி வரையில், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் திருநெல்வேலி மற்றும் பூம்புகார் கிளை, நல்லூர் 12 ஏ கிளை, தட்டாதெரு 5 ஆம் கிளை, யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அரியாலை கிளை மற்றும் 20 ஆம். இலக்க கிளை ஆகியவற்றின் ஊடாக விநியோகம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
(ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டுபிடிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

## சென்னையில் நேற்று பெருமெடுப்பில் நடத்தப்பட்டது



சென்னை, செப்.1

இலங்கையில் காணாமல் ஆக்கப் பட்ட தமிழர்களைக் கண்டுபிடிக்க கோரி சென்னை ஐ.நா. அலுவல கம் முன்பாக நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட் டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையால் ஓகஸ்ட் 30ஆம் திகதி சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாகக் கடைப் பிடிக்கப்படுகிறது. அதையொட்டி இலங்கையில் போரின் போதும், அதற்கு பின்னரும் காணாமல் போகச் செய்யப்பட்டவர்களை மீட் கக் கோரி சென்னை அடையாறில் உள்ள ஐக்கிய நாடுகள் அலுவல கம் முன்பாக தமிழக வாழ்வுரி மைக் கட்சியின் தலைவர் பண் ருட்டி தி.வேல்முருகன் தலை மையில் நேற்று மாபெரும் கண் டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதில் திராவிடர் விடுதலை கழகத் தின் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ் தேச விடுதலை இயக்கத்தின் தோழர் தியாகு, நாடு கடந்த தமி ழீழ அரசின் தோழமை மையத்தின் பேராசிரியர் சரசுவதி, காஞ்சி மக் கள் மன்றத்தின் மகேஷ் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக இந்த கோரிக்கையை வலியுறுத்தி ஐ.நா. ஆணைய அலு வலகத்தில் மனு ஒன்றும் கொடுக் கப்பட்டது. (ற)

# அரசின் உள்ளக விசாரணையில் துளியேனும் நம்பிக்கை இல்லை

## மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் தலைவர் தெரிவிப்பு

கிளிநொச்சி, செப்.1

நாங்கள் வலியுறுத்தி கூறுவது உள் ளக விசாரணையில் ஒரு துளியள வும் நம்பிக்கை இல்லை சர்வதேச தரத்திலான விசாரணையூடாக எங்களுடைய பிள்ளைகளை கண்டு பிடிப்பதற்கான ஒரு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். மீண் டும் மீண்டும் எங்களுடைய மக் களை காட்டி கொடுக்கின்ற செயற் பாடுகளிலே எங்களுடைய தமிழ் தலைவர்களும், சிங்கள தலைவர் களும் செயற்பட்டு கொண்டிருப் பது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாக இருக்கின்றது. இதை நாங்கள் எந்த விதத்திலும் அனு மதிக்க முடியாது. – இவ்வாறு மன் னார் மாவட்ட பிரஜைகள் குழு வின் தலைவர் இமானுவேல் செப மாலை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மன்னாரில் நடத் தப்பட்ட சர்வதேச காணாமல் போனோர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

கடந்த இரண்டு வருடங்களாக நாங் கள் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் பயணித்து வருகின் றோம். ஆரம்பத்தில் இந்த தாய்மார் கள் தனிமையாக தங்களுடைய உறவுகளை தேடினார்கள். ஆட்சி யாளர்களினாலும் இராணுவத்தின ராலும், புலனாய்வு பிரிவினராலும் ஏமாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டார் கள், பாலியல் ரீதியாக துன்புறுத் தப்பட்டார்கள், இலஞ்சம் கோரப் பட்டார்கள், தொடர்ந்தும் ஏமாற் றப்பட்டார்கள். நாங்கள் எல்லா இடமும் சங்கங்களை உருவாக்கி பல்வேறு ஆர்ப்பாட்டங்களை செய் தோம். மனித உரிமை ஆணை யாளர் திருமதி நவநீதம்பிள்ளை வந்த வேளையிலும் இன்றும் பல வெளிநாட்டு பிரதிநிதிகள் வந்த வேளையிலும் இந்த பிரச்சினை களை வெளிக்கொணர வேண்டும் என்பதற்காக நாங்கள் பல ஆர்ப் பாட்டங்களை செய்தோம். நோக் கம் என்னவென்றால் காணாமல் போன இந்த உறவுகள் கண்டறி யப்படவேண்டும் என்பது தான் ஒரே நோக்கமாக இருந்தது.

ஆனால் இன்று வரை எந்த ஒரு பிள்ளையோ, கணவனோ கண் டுபிடிக்கப்படவில்லை. இன்றுவரை எந்த இராணுவத்தினரோ அல்லது பிடித்துக் கொண்டு போன எந்த ஆட்சியாளர்களோ விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை. ஆட் கொணர்வு மனுக்களை பதிவு செய் தோம். அது இழுத்தடிக்கப்படுகின் றது. மனுக்களை கொடுத்தார்கள், கடிதங்களை கொடுத்தார்கள், அறிக் கைகளை எழுதினார்கள் எதற் குமே பதில் கிடைக்கவில்லை.

வெளிநாடுகளும் சரி, இங்குள்ள அரசுகளும் சரி, கூட்டமைப்பிலே இருக்கின்ற ஒரு சில நாடாளு மன்ற உறுப்பினர்களும் சரி இந்த ஆட்சியாளர்களோடு இணைந்த உள்ளக விசாரணைக்கு ஒத்துப் போய்கொண்டிருக்கின்றனர். மீண் டும் மீண்டும் எங்களுடைய மக் களை காட்டிக் கொடுக்கின்ற செயற் பாடுகளிலே எங்களுடைய தமிழ் தலைவர்களும், சிங்கள தலைவர் களும் செயற்பட்டுக் கொண்டிருப் பது மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாக இருக்கின்றது.

நாங்கள் விரக்தியின் விழும்பில் நிற்கின்றோம். உள்ளக விசாரணை வேண்டும் என்று சொல்பவர்கள் அதில் யாரை விசாரிக்கப்போகின் றார்கள்? இந்த ஆட்சியிலே இருக் கின்ற எந்த அரசு கடத்தல்களை செய்யவில்லை?. எந்த அரசு எங் களுடைய பிள்ளைகளை கொல்ல வில்லை? எந்த அரசு அநீதிகளை செய்யவில்லை? எந்த அரசு மனித உரிமை மீறல்களை செய்யவில்லை? ராஜபக்சவை உள்ளக விசார ணைக்கு உட்படுத்தினால் ரணில் செய்தவற்றை யார் விசாரிப்பது?

காணாமல் ஆக்கப்பட்டோர் விட யத்தில் உலக வல்லரசு நாடுகளும் தமிழர்களாகிய எங்களைக் கைவிட்டு விட்டது என்ற எண்ணமும் எங்க ளுக்கு தோன்றுகின்றது. நாங்கள் வலியுறுத்திக் கூறுவது உள்ளக விசா ரணையில் ஒரு துளியளவும் நம் பிக்கை இல்லை சர்வதேச தரத்தி லான விசாரணையூடாக எங்களு டைய பிள்ளைகளை கண்டு பிடிப் பதற்கான ஒரு பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். – என் றார். (ற–21)

## உரமானிய படிவங்கள் விநியோகம்

வரணி, செப்.1

வரணி வடக்கு விவசாய சம்மேள னத்தின் உரமானிய படிவங்கள் விநியோகம் இன்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் செயலாளர் இல்லத்தில் இடம்பெறும் என தெரி விக்கப்பட்டுள்ளது. விரைவில் அவற்றை விவசாயிகள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது.

அதேவேளை வரணி மாசேரி விவ சாய சம்மேளனம் தமது பிரதேச விவசாயிகளுக்கான குறித்த உர மானியம் தொடர்பான விண்ணப் பப்படிவங்கள் நாளை பிப. 3 மணிக்கு மாசேரி கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் வைத்து விநியோகிக் கப்படும் என சம்மேளனச் செயலா ளர் அறிவித்துள்ளார். (ற–122)

# பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு தொழில் மேம்பாட்டுக்கான உதவிகள்



கிளிநொச்சி, செப்.1

வடமராட்சியை சேர்ந்த 17 பெண் த்லைமைத்துவ குடும்பங்களின் வாழ்வாதார தொழில் மேம்பாட் டுக்கான உதவி வழங்கல் நிகழ்வு அண்மையில் வடமராட்சி தாளை யடி அந்தோனியார் ஆலய மண்ட பத்தில் நடைபெற்றது.

சுவிஸ் ரிசினோ வாழ் மக்களின் (சுவிஸ் எஸ்.ரி.ஏ) நிதி உதவியில் எஸ்.ரி.ஏ சொலிடறிற்றி பவுண் டேசன் அமைப்பின் ஊடாக வடம ராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தாளையடி கிராமத் தைச் சேர்ந்த 17 பெண் தலைமைத் துவம் கொண்ட குடும்பங்களுக் இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வீட்டுத் தோட்டம் மேற்கொள்ளும் 8 குடும்பங்கள், கோழிவளர்ப்பு மேற்கொள்ளும் 5 குடும்பங்கள், உணவுத்தயாரிப்பு மேற்கொள் ளும் 3 குடும்பங்கள், மிளகாய்த் துள் பொதி செய்து விற்கும் 1 குடும் பம் என மொத்தம் 17 குடும்பங் களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் புனித அந்தோனி யார் ஆலய அருட்தந்தை வண.ம. ஜேசுரட்ணம் அடிகளாரும், நிறு வன திட்ட பணிப்பாளர் திரு.வே.வாம தேவன், கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் திரு. யோ. யோகநாதன், செயலாளர் திரு.பெ.ஜிவதாஸ், ஆலய செயலாளர் திரு.எ. சிங்கரா யர், மாதர் சங்க உறுப்பினர்கள், பயனாளிகளும் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற–21)

## முள்ளியவளை வீதி வடிகால்கள் சீர்கேடான நிலையில்

முல்லைத்தீவு, செப்.1

முள்ளியவளை வீதி வடிகால் வாய்க் கால் சுகாதாரத்துக்கு கேடு விளை விக்கக்கூடிய நிலையில் இருப்ப தால் சுகாதாரப் பகுதியினர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முள்ளியவளை சந்தி அம்மன் ஆல யத்திற்கு அண்மையாக வர்த்தக நிலையங்கள் அமைந்துள்ள வடி கால்களில் நீர் நிற்பதுடன் குப்பை கள், கழிவுகள் என்பன சேர்ந்து சுகா தாரத்துக்கு கேடாகக் காணப்படு கின்றது.

காதாரப் பகுதியினர் நேரில் பார் வையிட்டு ஆவன செய்வதுடன் நோய்கள் ஏற்படாது முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (ற–500)

## தர்மலிங்கத்தின் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.1

முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 30ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 7மணிக்கு தாவடியில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் நடைபெறவுள் ளது. நினைவுத் தூபியில் மலரஞ் சலி நிகழ்வை தொடர்ந்து அஞ்ச லிக் கூட்டமும் நண்பகல் 12மணிக்கு ஏழாலை கண்ணகை அம்மன் ஆலய மண்டபத்தில் அன்னதான நிகழ்வும் இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–ரி2)

# பெண்களுடன் கீழ்த்தரமாக நடந்தோரை தப்ப விட்டு வேடிக்கை பார்த்தது பொலிஸ்

## குற்றஞ்சாட்டுகின்றனர் குருமன்காட்டுப் பகுதி மக்கள்

வவுனியா, செப்.1

வவுனியா, குருமன்காட்டுப் பகுதி யில் பெண்களுடன் கீழ்த்தரமாக நடக்க முற்பட்ட கும்பல் ஒன்றைத் தப்பியோட விட்டுப் பொலிஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் தனர் என்று பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 7.30 மணியளவில் நடந்தது என்றும் அவர் கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நெடுங்கேணியில் இருந்து வந்த தந்தை மற்றும் 2 மகன்கள், 4 மகள்கள் ஆகியோர் குருக்கள் புதுக்குளத்தில் உள்ள தமது வீட்டுக் குச் செல்வதற்காக குருமண்காட் டில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் காத் திருந்தனர். எனினும் நீண்ட நேரம் பஸ் வராமையால் தந்தை அங் குள்ள ஓட்டோ தரிப்பிடத்துக்கு ஓட்டோ ஒன்றை வாடகைக்கு அமர்த்தச் சென்றுள்ளார். அந்தச் சமயம் 10 பேர் கொண்ட இளை ஞர் குழு ஒன்று மதுபோதையில் அங்கு வந்துள்ளது. அவர்கள் பஸ் தரிப்பிடத்தில் நின்றிருந்த பெண் களுடன் கீழ்த்தரமான முறையில் நடக்க முற்பட்டுள்ளது. அதை அந் தப் பெண்களின் சகோதரர்கள் தடுக்க முற்பட்டபோது அந்தக் கும் பல் அவர்களைத் தாக்கியது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் துரத்தில் இருந்து பொலிஸ் காவலரணுக்கு ஓடிச் சென்ற அந்தப் பெண்கள் இதுகுறித்து முறையிட்டுள்ளனர். தம்மை தாக் கியவர்களையும் அடையாளம் காட்டி அங்கு கூடியவர்களின் உதவியுடன் மூவரை பொலிஸாரிடம் பிடித்தும் கொடுத்துள்ளனர் என்றும் அதை யடுத்து 119 அவசர பொலிஸா ருக்கும் அழைப்பை ஏற்படுத்திச் சம்பவத்தை தெரியப்படுத்திய நிலை யில் சுமார் 20 நிமிடங்கள் கழித்து சம்பவ இடத்திற்கு அவசர பொலி ஸார் வந்துள்ளனர். பிடித்து வைக் கப்பட்டிருந்த இளைஞர்கள் மூவ ரும் அதை அவதானித்து அங்கிருந்து தப்பியோடினர் என்று தெரிவிக்கப் பட்டது.

இதுகுறித்து அங்கிருந்தவர்கள் தெரி வித்ததாவது:–

பொலிஸாரிடம் நாங்கள் அவர் களில் மூவரை பிடித்துக்கொடுத்த போதும் பொலிஸார் அவர்களு டன் ஏதோ இரகசியம் கதைத்ததை நாம் அவதானித்தோம். அதன் பின் னர் அவசர பொலிஸார் வருவதை அவதானித்த காவலரணில் இருந்த பொலிஸார் எனது கண்ணுக்கு முன்பாக அவர்கள் மூவரையும் செல்லுமாறு தெரிவித்தார்.

நாம் பிடித்துக்கொடுத்து 20 நிமி டங்களுக்கு மேலாகியும் அவர்களி டம் இருந்து அடையாள அட்டை இலக்கத்தையோ ஆளடையா ளத்தை உறுதிப்படுத்தும் எந்தச் செயற்பாட்டையும் பொலிஸார் மேற்கொள்ளவில்லை.– என்று தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப் பாடு ஒன்றைப் பதிவு செய்யவுள்ள தாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரி வித்தனர். (ற–)

## விவசாயிகளுக்கு கலந்துரையாடல்

அச்சுவேலி,செப்.1

வாதரவத்தை பிரதேசத்தில் நெற் பயிர்ச்செய் கையில் ஈடுபடும் விவ சாயிகளுக்கான கலந்து ரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு வாதரவத்தை பொது நோக்கு மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

வாதரவத்தை விவசாய சம்மேள னத்தின் தலைவர் க.சுந்தரவேல் தலைமையில் நடைபெறும் கலந்து ரையாடலில் புத்தூர் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தி யோகத்தர், உதவிப் பெரும் பாக உத்தி யோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளின் சந்தே கங்களுக்கு விளக்கம் அளிக்கவுள் ளனர்.

நெற்பயிர்ச் செய்கை நிலம் தொடர் பான பதிவுகள்உறுதிப்படுத்தல்காலப் போக நெற் பயிர்ச்செய்கைக்கான விதைநெல் விநியோ கம், மானிய உரப்பசளை விநியோகம் தொடர் பான ஏற்பாடுகள் மேற் கொள்ளப் படவிருப்பதால் நெற்பயிர்ச் செய் கையில் ஈடுபடும் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டியுள்ளனர். (ற–11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு விசாரணை சர்வதேசத்தின் சதியே

## ஜி.எல்.பீரிஸ் கூறுகின்றார்




கொழும்பு, செப்.1
இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றம் தொடர்பில் உள்நாட்டு விசாரணைக்கு அரசு இணங்கியுள்ளமையானது சர்வதேசச் சதி என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்.
தற்போதைய அரசு சர்வதேசத்தின் கைப்பாவையாக மாறியுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.
ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இலங்கை இனப்பிரச்சினைக்கு இன அடிப்படையில் கோட்டாக்களை அறிமுகப்படுத்தி அனைத்துத் துறைகளிலும் அதைக் கடைப்பிடித்தாலே போதுமானது என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசமைப்புக்கு முரணான வகையில் செயற்படுகின்றார் என்று குறிப்பிட்டுள்ள பீரிஸ், ஜனாதிபதித் தேர்தலையடுத்து ரணில் விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டமை அரசமைப்புக்கு முரண் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.
தேர்தல் காலத்தில் இரு கட்சிகளின் பொதுச் செயலாளர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டமை, மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக கடிதம் அனுப்பியமை என்பவையும் அரசமைப்புக்கு முரணானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ற)

## சுயாதீனமாக செயற்படவுள்ளது டியுவின் கட்சி

கொழும்பு, செப்.1
நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து சுயாதீனமாகச் செயற்படவுள்ளோம் என்று சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.
அந்தக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என்று அதன் செயலாளர் டியு குணசேகர தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா கம்யூனிட்ஸ் கட்சி இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டது.
அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சந்திரசிறி கஜதீர அம்பாறை மாவட்டத்தில் 54 ஆயிரத்து 251 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவானார். அவரை நாடாளுமன்றில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து சுயாதீனமாக செயற்படுமாறு கட்சி ஆலோசனை வழங்கியுள்ளது என்று டியு குணசேகர குறிப்பிட்டுள்ளார். (ற)

## தேசிய அரசு யோசனைக்கு கட்சி தாவல்களே காரணம்

கொழும்பு, செப்.1
கட்சி தாவல்களே தேசிய அரசு அமைக்கும் தீர்மானத்தை எடுப்பதற்கு முக்கிய காரணமாக இருந்தது என்று தெரிவித்துள்ளார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.



கட்சித் தாவல்கள் காரணமாகவே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தேசிய அரசில் இணைத்துக் கொள்ளவில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர் கட்சித் தாவல்களில் ஈடுபடுவோரை இணைத்துக் கொள்ளக்கூடாது என்பதே மக்களினது விருப்பம் என்றும் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு நகர நிர்மாணப் பணிகளைப் பார்வையிடுவதற்கான கண்காணிப்புப் பயணத்தின்போது ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
தேசிய அரசு அமைப்பதற்கான யோசனை எதிர்வரும் 3 ஆம் திகதி நாடாளு மன்றில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்த பிரதமர், அன்றைய தினம் அமைச்சரவையின் எண்ணிக்கை குறித்தும் தீர்மானிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.
அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அமைச்சரவையின் எண்ணிக்கை 30 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் தேசிய அரசில் அமைச்சரவை எண்ணிக்கையை 45 வரை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு நாடாளுமன்றின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அவசியமாகும். (ற)

## வாய்க்கு வந்தவாறு உளறுகிறது ஜே.வி.பி.

### சாடுகின்றார் சாந்தினி பண்டார

கொழும்பு, செப்.1
ஜே.வி.பியினர் வாய்க்கு வந்தபடி உளறுகின்றனர். அவர்கள் கடந்த காலங்களில் அரசொன்றை அமைக்கும் அளவுக்குச் சத்தமிட்டனர். ஆயினும் அவர்களால் நான்கு ஆசனங்களை மட்டுமே பெற முடிந்தது. – இவ்வாறு சாடியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் சாந் தினி பண்டார.
ஏதேனும் சொல்ல வேண்டும் என்பதற்காக அவர்கள் பல குற்றச்சாட்டுக்களை அடுக்குகின்றனர் என்று தெரிவித்துள்ள அவர் எம்மைப் பற்றியும் தேசிய அரசு பற்றியும் ஜே.வி.பியினர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் மூலம் மக்கள் அவர்களை நிராகரித்துள்ளமையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள சாந்தினி பண்டார, எமக்குக் கிடைத்துள்ள 106 ஆசனங் களுடன் சுதந்திரக் கட்சியின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டு வலுவான அரசை அமைத்து மக்களுக்கு சேவையாற்றுவோம் என்றும் தெரிவித்துள்ளார்.
சிங்களமொழி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## ஜனாதிபதியை சந்திக்க கம்மன்பிலவுக்கு அழைப்பில்லை



கொழும்பு, செப்.1
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதிக்கும் – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்சித் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்புக்கு பிவித்துரு ஹெல உறுமயக் கட்சியின் தலைவர் உதய கம்மன்பிலவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
தேசிய அரசு மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். அந்தக் கலந்துரையாடலுக்கே கம்மன்பிலவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சில கட்சிகளை இணைத்துக் கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் புதிய கூட்டணியில் போட்டியிடும் முயற்சிகளில் உதய கம்மன்பில தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றார். அதன் காரணமாகவே ஜனாதிபதியுடனான கலந்துரையாடலுக்கு அவருக்கு அழைப்பு விடுக்கப்படாதிருந்திருக்கலாம் என அரசியல் நோக்கர்கள் கூறுகின்றார்.
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தீவிர விசுவாசியான உதய கம்மன்பில நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் [illegible] இரண்டாவது இடத்தைப் பெற்று நாடாளுமன்றுக்குத் தெரிவாகியுள்ளார். (ற)



## 14 ஆம் திருவிழா

### நல்லூர் கந்தையனே வருக

நல்லூரில் அமர்ந்திருக்கும் கந்தையா
நம் இனத்தின் நிலை கொஞ்சம் கேளையா !
இளைய தலைமுறையைப் பாரை யா
இதுதான் எம் இனத்தின் முடிவையா !

கஞ்சாக் கசிப்பு கரோயின் என்னும் குடுவுக்குக்
கொஞ்சமும் பஞ்சம் இல்லை எம் நாட்டில் இப்போது !
வஞ்சமில்லா இளையோரின் வாழ்க்கைக்கு இன்று
நஞ்சாக உள்ளதே கொடிய போதை அமுதம் !

திட்டமிட்டு அரக்கர்களால் செய்யும் வியாபாரம்
மட்டமாக்கி எம்மினத்தை அழி க்கும் அதிகாரம் !
சட்டத்தைக் கையில் வைத்து சாதனை படிப்போரின்
கொட்டத்தை அடக்க வருவாய் நல்லைக் குமரையா !

போதை அசுரனின் கோரப் பசியினால்
பாதை தவறிப் பயணிக்கும் எம் இளையோரை
வாழ வழிகாட்டும் ஞானம் அளித்திட
வேழமுகன் அண்ணனே நல்லூர் கந்தையனே வருக !

*சாந்தையூர் ஆ .த.குணத்திலகம்*

### வரமெல்லாம் தந்திடுவான் வடிவேலன்

மாமயில் ஏறிய மயில் வாகனனே நல்லை
நகர் பதியுறையும் குமரா வா
சித்தர்கள் உனை வணங்க சினம் எல்லாம் தணிந்தாய்
சிலரது மனங்களில் நீக்கமற நிறைந்தாய்

வந்திடு வந்திடு குறைகள் நீ களைய
வரமெல்லாம் தந்திடு வடிவேலா
இனமத பேதமின்றி கருணை செய்வேலா
இங்கெழுந்தருளாது எங்கு நீ போவாய்.

*கலாவித்தகர் திருமதி மலர்விழி கனகசபை.*

### தீர்வொன்று தருவாய் திருமுருகா!

எடுப்பு
சரவணபவனே சண்முகநாதா உனைச்
சரணமென்றடைந்தோம் சங்கரன் புதல்வா
(சரவணபவனே...)

தொடுப்பு
கலியுக வரதா! திருநல்லை உறையும்
வடிவேல் அழகா! வருவாய்! அருள்வாய்!
திருநடம் புரியும் சிவனின் மைந்தா!
தமிழின் தலைவா! மாலவன் மருகா!
(சரவணபவனே...)

முகப்பு
முருகா எமக்குக் கதியது நீயே!
தருவாய் வேலா ஏற்ற தீர்வினை!
(சரவணபவனே...)

*ப. மகேந்திரதாசன்*

LITRO GAS



இன்று 01.09.2015
செவ்வாய்க்கிழமை
பதின்நான்காம் திருவிழா

நல்லூர் உற்சவகால Litro Gas
விலைத்தள்ளுபடி

ஆகஸ்ட் 17ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 17ஆம் திகதி வரையான உற்சவகாலத்தில் தாங்கள் கொள்வனவு செய்யும் 12.5kg லிற்றோ வெற்றுசிலிண்டர் 3400 ரூபா மட்டுமே, அத்துடன் 5kg வெற்று சிலிண்டர் 2250 ரூபா என்பதையும் வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
S.V. முருகேசு லிற்றோ காஸ்
நிறுவனத்தின் நல்லூர் கந்தன்
அருள்பாலிக்கவேண்டி நிற்கின்றோம்

~~4980/=~~
விசேட விலை
3400/=



~~2585/=~~
விசேட விலை 2250/=

இச்சலுகையினை தங்களுக்கு அருகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட லிற்றோ காஸ் முகவரிடம் பெற்றுக் கொள்ளலாம். மேலும் விசேடமாக இந்த உற்சவ காலத்தில்

S.V. முருகேசு
இல.106, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரியில் அமைந்துள்ள எமது லிற்றோ காஸ் விநியோக நிறுவனத்திலும் நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்

தொடர்புகளுக்கு: 021 4925830 078 5646505 கையிருப்பு உள்ளவரை மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வழக்கத்தை விட அதிகமாக உழைக்க நேரிடும். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் சுபச் செலவு செய்வீர்கள். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**இடபம்:** நிதான புத்தியுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். பகைவர்கள் இடம் மாறிப் போகின்ற நன்னிலை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் செயற்பட்டு, நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய நுட்பம் மூலம் இலாபம் உயரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கடகம்:** மற்றவர் விடயத்தில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் முயற்சிக்கேற்ப இலாபம் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**சிங்கம்:** உங்களின் வளர்ச்சி கண்டு, பலரும் பொறாமை கொள்வர். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் காண்பீர்கள். சுய கௌரவம் பாதுகாக்க பணம் செலவு செய்ய நேரிடும். மாணவர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவர்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் புதிய முயற்சியில் ஈடுபட்டு ஆதாயம் காண்பீர்கள். வழக்கு விவகாரத்தில் சாதகமான தீர்வு கிடைக்கும். அரசியல்வாதிகள் நீண்டதூரப் பயணம் மேற்கொள்வர்.

**துலாம்:** நேர்மையைப் பின்பற்றி நற்பெயர் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். சுப விடயம் குறித்த பேச்சில் முன்னேற்றம் உண்டாகும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**தனுசு:** மனசாட்சிக்கு முக்கியத்துவம் தந்து செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பண வரவை விட குடும்பச் செலவு அதிகரிக்கும். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும்.

**மகரம்:** கடந்த கால உழைப்பால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் அமோக இலாபம் கிடைக்கும். மனைவியின் கருத்துக்கு மதிப்பளித்து நடப்பீர்கள். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு ஏற்படும்

**கும்பம்:** நண்பரிடம் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும்.

**மீனம்:** சிறிய முயற்சியிலும் பெரிய வெற்றி கிடைக்கும். விலகிச் சென்ற நண்பர், விரும்பி அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் வரும். வீட்டு உபயோகப் பொருள் வாங்கி மகிழ்வீர்கள்.



# சிம்புவின் அச்சம் என்பது மடமையடா

## உற்சாகத்தில் ரசிகர்கள்

சிம்பு – கௌதம் வாசுதேவ் மேனன் கூட்டணியில் வெளியான விண்ணைத் தாண்டி வருவாயா படத்தின் வெற்றியை அடுத்து இந்தக் கூட்டணி இரண்டாவது முறையாக இணைந்துள்ள அச்சம் என்பது மடமையடா படத்தின் படப்பிடிப்புகள் முடிவடைந்து, தற்போது இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது இப்பட்த்தின் டீசர் வெளி யிடப்பட்டது. டீசரை பார்த்த பெரும்பாலோனார் விண்ணைத் தாண்டி வருவாயா படத்தின் இரண்டாம் பாகத்தை போன்று இந்தப் படம் உருவாகியுள்ளதாகக் கூறுகின்றனர். ஏ.ஆர்.ரகு மான் இசையில் உருவான இந்தப் படத்தின் பாடல்களை விரைவில் வெளியிட உள்ளனர். மேலும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளனர் படக்குழுவினர்.

# பேஸ் புக்கில் பிடித்தவை...






புருசனுக்கு முடி நரைச்சா பொண்டாட்டிக்குச் சந்தோசம். பொண்டாட்டி குண்டானா புருசனுக்குச் சந்தோசம். காரணம், இனி இந்த வடையை எந்தக் காக்காவும் தூக்காது.

தன்னைவிட தனது வாழ்க்கைத் துணைக்கு அறிவும், திறமையும் அதிகம் என்று தெரிந்தபின் பெண் சந்தோசம் கொள்கிறாள்....



ஆண் சந்தேகம் கொள்கிறான்!

## என்னதான் நல்லது செய்தாலும்.....!

புதிதாகக் கல்யாணம் செய்த தம்பதியினர் வீதியோரத்தில் நடந்து கொண்டிருந்தனர். திடீரென்று ஒரு நாய் குரைத்துக் கொண்டு ஓடி வந்தது. அவர்கள் இருவரையும் கடிக்கப் போகிறது என இருவரும் நினைத்தார்கள். நல்ல உள்ளம் கொண்ட அந்த கணவர் தனது மனைவியைத் தூக்கி வைத்துக் கொண்டார். நாய் கடித்தால் தன்னை மட்டும் கடிக்கட்டும் தனது மனைவி தப்பி விடுவாள் என நினைத்தார். ஓடி வந்த நாய் அந்தச் செயலைப் பார்த்ததும் திரும்பிச் சென்றது. பின்னர் மனைவியை இறக்கி விட்ட கணவன் தன்னுடைய நற்செயலுக்காக மனைவி தனக்கு முத்த மழை பொழிவாள் என்று எதிர் பார்த்தார். அடுத்த கனமே மனைவி கோபத்துடன் எல்லோரும் நாய் வந்தால் கல்லைத் தூக்கி எறிவார்கள். ஆனால் தனது மனைவியையே தூக்கி எறியும் கணவனை இப்போது தான் பார்க்கிறேன் என்றாள்.





# செல்பி எடுப்பதால் தலையில் பேன் புதிய ஆய்வில் தகவல்

கமரா மூலம் தன்னைத்தானே போட்டோ எடுத்துக் கொள்வதுதான் 'செல்பி' எனப்படுகிறது. பெரும்பாலும் டிஜிற்றல் கமரா அல்லது கமரா உள்ள மொபைல் போன்கள் மூலம் 'செல்பி' எடுக்கப்படுகிறது. இன்றைக்கு 'செல்பி' ஒரு தொற்று நோய் பால எல்லா இடங்களிலும் பரவி விட்டது. அதிலும் குறிப்பாக இளம் வயதினரிடையே அது ஒரு புற்று நோய் போல விரைந்து பரவுகிறது. ஸ்மார்ட் போன்கள் செல்பி ஆசைக்கு எண்ணை வார்க்கின்றன, சமூக வலைத்தளங்கள் அதைப் பற்ற வைக்கின்றன. சமூக வலைத்தளங்களில் கண் சிமிட்டும் தனது செல்பிகளுக்குக் கிடைக்கும் லைக்குகளும், பார்வைகளும் இளசுகளை செல்பி எனும் புதை குழிக்குள் தொடர்ந்து இழுத்துக் கொண்டே இருக்கின்றன.

அதிகமாக 'செல்பி' எடுக்கும் மனநிலை உளவியல் பாதிப்பு என உறுதிப்படுத்துகிறது அமெரிக்க உளவியல் அமைப்பான ஏ.பி.ஏ., 'செல்பி' எடுப்பதால் தலையில் பேன்கள் பரவும் அபாயம் இருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது உலகம் முழுவதும் 'செல்பி' மோகம் அதிகரித்துள்ளது. எந்தவொரு நிகழ்ச்சியாக இருந்தாலும் செல்போனில் 'செல்பி' எடுத்துக் கொள்கின்றனர். அப்போது இள வயதினர் தங்களது தலைகளை ஒருவருடன் ஒருவர் சாய்த்து போஸ் கொடுக்கின்றனர்.

இதனால் அவர்களுக்கு ஒருவர் தலையில் இருந்து மற்றொருவர் தலைக்கு பேன்கள் பரவுகின்றன. இந்தத் தகவலை குழந்தைகள் நல வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். தங்களிடம் சிகிச்சைக்கு வருபவர்களிடம் இது போன்ற பேன் தொல்லை இருப்பதாகக் கூறுகின்றனர். எனவே 'செல்பி' எடுக்கும்போது போஸ் கொடுப்பவர்கள் தலைகளை ஒட்டி வைத்து கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளனர். தங்களிடம் சிகிச்சைக்கு வருபவர்களில் சிறுவர்களை விட சிறுமிகளுக்கே பேன் தொல்லை அதிகம் இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஓட்டோ மோதி குடிதண்ணீர் கட்டுச் சேதம்

தென்மராட்சி, செப்.1
வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ வீதியோர குடிதண்ணீர் கட்டை மோதிச் சேதப்படுத்தியது. இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி, தனங்களப்புப் பகுதியில் நடந்துள்ளது.
இரவுவேளை அங்குள்ள கடை ஒன்றில் உணவு அருந்துவதற்காக ஓட்டோவின் முகப்பு வெளிச்சத்தை அணைத்து விட்டு வீதியோரம் ஓட்டோவை நிறுத்த முற்பட்டபோதே ஓட்டோ குடிதண்ணீர் கட்டுடன் மோதியுள்ளது. அதில் ஓட்டோவும், குடிதண்ணீர் கட்டும் சேதமடைந்தன.
சேதமடைந்த குடிதண்ணீர்க் கட்டு நகர சபையால் மறுநாள் புனரமைக்கப் பட்டு குடிதண்ணீர் விநியோகம் சீர் செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# நெடுங்கேணி பகுதியில் யானைகளின் அட்டகாசம்

வவுனியா, செப்.1
வவுனியா மாவட்டம் நெடுங்கேணிக்கு உட்பட்ட பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகின்றது என்று பொதுமக்கள் கவலை வெளியிட் டுள்ளனர்.
குளவிசுட்டான், ஈட்டி முறிச்சான், தெகடிற் படந்தாள் போன்ற பகுதிகளில் பகலிரவு நேரங்களில் யானைகளால் பயிர்கள் அழிவு ஏற்படுவதுடன், மக்கள் நடமாடவும் அஞ்சுகின்றனர். தற்போது யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதால் நேரகாலத்தோடு வீடுகளில் தஞ்சமடைய வேண்டிய நிலையும், இரவு நேரங்களில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ள னர். (ற-500)

# நல்லூரில் நாளை விவசாயக் கண்காட்சி

யாழ்ப்பாணம், செப். 1
சூழலியல் விவசாயத்தை நோக்கி என்னும் தொனிப்பொருளில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஏற்பாடு செய்துள்ள கண்காட்சி நாளை புதன்கிழமை மாலை 5 மணிக்கு, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் இந்தக் கண்காட்சி, நல்லூர் மஹோற்சவ காலம் முழுவதும் நடைபெறவுள்ளது.
இது தொடர்பில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
அளவுக்கு மிஞ்சிய செயற்கை உரங்களினதும், இரசாயனக் களை கொல்லிகளினதும் பயன்பாட்டினால் உடல்நலம் பாதிக்கப்படுவதோடு, நிலத்தடிநீரும் மாசுபட்டு வருகிறது. விவசாய இரசாயனங்களின் வரம்பு மீறிய பாவனையால் ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு சூழலுக்கு இசைவான பயிர்ச்செய்கை முறைகள் தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் நோக்கோடு இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்தக் கண்காட்சியில் இரசாயன உரவகைகள் மற்றும் பீடைகொல்லிக்கு மாற்றீடாகப் பயன்படுத்தக்கூடிய சேதனப் பசளைகள், சேதன பீடைநாசினிகள், ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவம், நிலத்தடிநீர் முகா மைத்துவம், பண்ணை இயந்திரங்கள், அருகிவரும் பயிர்களும் பழங்களும், பாரம்பரியப் பயிரினங்கள், காளான் வளர்ப்பு போன்றவற்றுடன் தொடர்பான காட்சிப்படுத்தல்கள் இடம்பெற உள்ளன. அத்தோடு, நடுகைப் பொருள்கள், சுதேச உணவுப் பொருள்கள் மற்றும் இயற்கைப் பழர சமென்பானங்கள் ஆகியவற்றை விற்பனை செய்வதற்கும் ஒழுங்கு கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.- என்றுள்ளது. (ந-5,4)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.1
நாரந்தனை கிழக்கு, நொச்சிபுலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலய பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக நிகழ்வு எதிர்வரும் 5 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
அன்றையதினம் காலை 7 மணி தொடக்கம் மாலை 9 மணிவரை மஹாகும்பாபிஷேகம், தசமங்கல தரிசனம், பிரசாதம் வழங்கல் என்பன இடம்பெறும்.
கும்பாபிஷேக கிரியை நாளைமறு தினம் 3 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாவதுடன், 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள் ளனர். (ந-ரி2)

# அலங்கார உற்சவம் நிறைவு

யாழ்ப்பாணம்,செப்.1
வட்டுக்கோட்டை மூன்றாம்பனை ஸ்ரீ ஞான வைரவர் பெருமானின் அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு நவோத்திர சகஸ்ர (1008) சங் காபிசேகமும் விசேட பூசைகளும் நடைபெறும். தொடர்ந்து மாலை 7 மணிக்கு சாயரட்டைப் பூசையைத் தொடர்ந்து திருவூஞ்சல் சகிதம் பூந்தண்டி கையில் திரு வீதியுலா இடம்பெறும். (ஐ)


**பன்னாலை- தெல்லிப்பழை**
**திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்**
**வருடாந்த மஹாற்சவ விஞ்ஞாபனம்**
**மன்மத வருடம்(2015)**

விசேட உற்சவகால நிகழ்வுகள்

* ஆவணித்திங்கள் 16ஆம் நாள்(02.09.2015) புதன்கிழமை
  மு.ப 10.30 மணிக்கு கொடியேற்றம்
  பி.ப 5.00 மணிக்கு மஹாயாகாரம்பம்
* ஆவணித்திங்கள் 23ஆம் நாள் (09.09.2015) புதன்கிழமை
  பி.ப 3.00 மணிக்கு வேட்டைத்திருவிழா
* ஆவணித் திங்கள் 25ஆம் (11.09.2015) வெள்ளிக்கிழமை
  பி.ப.8.00 மணிக்கு சப்பறம்
* ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் (12.09.2015) சனிக்கிழமை
  மு.ப 8.45 மணிக்கு தேர்
* ஆவணித் திங்கள் 27 ஆம் நாள் (13.09.2015) ஞாயிற்றுக்கிழமை
  மு.ப 10.00 மணிக்கு தீர்த்தம்
* ஆவணித் திங்கள் 28 ஆம் நாள் (14.09.2015) திங்கட்கிழமை
  மு.ப 9.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம்.
* தினமும் காலை 8.30 மணிக்கும் ,மாலை 5.30 மணிக்கும் பூஜை ஆரம்பமாகி,தொடர்ந்து உற்சவம் நடைபெறும்

முக்கிய அறிவித்தல்:-
கொடியேற்றம் பொது உபயம் ஆகையால் அடியார்கள் அனைவரும் தங்களால் இயன்றளவு பொருளுதவியை நேரில் கொண்டு வந்து கொடுக்கும்படி அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

அடியார்கள் அனைவரும் வருக!
ஐங்கரன் அருளைப் பெறுக!

பன்னாலை
தெல்லிப்பழை

பிரம்மஸ்ரீ. ம. மகேந்திர சர்மா
ஆதீன கர்த்தா



**சேவை நலன் பாராட்டு**



திருமதி
சறோஜினி தேவி
லோகானந்தம்
(யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க பாடசாலை)
31.08.2015 உடன்
ஓய்வுபெறும் எமது பாடசாலை
ஆசிரியரை சீரும்
சிறப்பும் பெற்று பல்லாண்டு
காலம் நீடூழி வாழ
வாழ்த்துகின்றோம்.
பாடசாலைச் சமூகம்.



**உவகையுடன் வாழ்த்துகின்றோம்**



எமது நீண்ட கால நண்பரும் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளரும் ஆகிய "செங்கைப் புரவோன்"
**இராசையா குவேந்திரநாதன்**
அவர்களின் சமூகப்பணிக்காக கோண்டாவில் கிழக்கு ஸ்ரீஅற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக்கழகமும் இணைந்து 29.08.2015 அன்று இடம்பெற்ற கட்டடத் திறப்பு விழாவின் போது "பொன்மணப் பேரொளன்" என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்காக நாமும் எமது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.
உரிமையாளரும் ஊழியர்களும்,
விஷ்ரா விஷன் கம்பியூ,
யாழ்ப்பாணம்.



**25 ஆம் ஆண்டு திருமண வாழ்த்து**



திருமண பந்தத்தில் இணைந்து (01.09.2015) இன்று
வெள்ளிவிழாக்காணும்
லண்டனில் வசிக்கும்
திரு- திருமதி சதீஸ்குமார்
செல்வராணி
தம்பதியினரை பூவும்
மணமும் போலவும், மணியும்
ஓசையும் போலவும்,
நிலவும் ஒளியும் போலவும்
நிலையாக நிலைத்து நீடூழி
வாழ மனதார
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
பிள்ளைகள்:- சயந்தன், வினிசியா, ஜெரன்சிகா லண்டன், கந்தசாமி குடும்பம் - கட்டுடை, சக்திவேல் குடும்பம் - ஜேர்மனி, சுதாகரன் குடும்பம் - ஸ்பெயின், உதயகுமார் குடும்பம் - ஜேர்மனி, முகுந்தன் குடும்பம் - ஜேர்மனி, முருகானந்தன் குடும்பம் - கட்டுடை.



**முதலாவது பிறந்தநாள் வாழ்த்து**
**01.09.2015**





நயினை ஸ்ரீநாகபூஷணி, சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகைகளின் அருளினால் இன்று (01.09.2015) செவ்வாய்க்கிழமை தமது முதலாவது பிறந்ததினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடும்
கலாநிதி ம.பாலகைலாசநாத சர்மா
ஸ்ரீமதி பா.மஹாலஷ்மி
தம்பதிகளின் அன்புப் புத்திரர்கள்
செல்வன் பா.ஸ்கந்தா,செல்வன் பா.முகுந்தா
சகல செல்வங்களும் பெற்று சிறந்த உயர்கல்வி பெற்று சீரும் சிறப்புமாக நீடூழி வாழ வேண்டுமென மனதார வாழ்த்தும்

பா.சுப்பிரமணிய சர்மா (ஸ்கந்தா)
பா.மகேஸ்வரநாத சர்மா (முகுந்தா)

தாத்தா - பாட்டி சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள், ஸ்ரீமதி ம. சீதாலஷ்மி தம்பதிகள்,
பிரம்மஸ்ரீ ம.நந்தசுத சர்மா, ஸ்ரீமதி ந.ஜெயந்தகலா தம்பதிகள் - பெரியப்பா, பெரியம்மா
செல்வி ந.மகேஸ்வினி, செல்வி ந.நிஷேவிதா - அக்காமார்
சிவஸ்ரீ ச.சர்வேஸ்வரக்குருக்கள் - மாமா, ஸ்ரீமதி ச.காதம்பரி தம்பதியினர் - மாமி,
செல்வன் ச. தேஜோவதனசர்மா(மச்சான்)
ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோவிலடி, சுதுமலை, மானிப்பாய்.
021 225 5641


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி க.சரஸ்வதி
அவர்களின் அன்புத் தந்தை
**கருப்பையா பெருமாள்**
அவர்கள் 26.08.2015 காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், சக உத்தியோகத்தர்களும்
பிரதேச செயலக
ஊழியர் நலன்புரிச்சங்கம்,கண்டாவளை

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**லீலறோஜினி**
(புவனம்)
**இராஜகோபாலு**

மண்ணில்
12.12.1944


விண்ணில்
19.08.2008

திதி: திருதியை (01.09.2015)

**ஆண்டுகள் ஏழு சென்றாலும்
எங்கள் நெஞ்சில் அழியாத சித்திரமாய்
நிறைந்திருக்கும் எங்கள் அன்புத் தாயின்
ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.**

மீனாட்சி அம்மன் கோயிலடி.
சங்கத்தானை, சாவகச்சேரி. **குடும்பத்தினர்.**

## 8ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் நடராசலிங்கம்
**கேமளன்** (மயூறன்)
(புடைவைக்கடை உரிமையாளர்)

அன்னை மடியில்
14.08.1981

முருகனின் அடியில்
31.08.2007

திதி: திருதியை

நினைவாக வாழ்ந்தோம் அப்பா பாசமான உங்கள் உருவம் நீறாகிப் போனதென்று
நினைக்க மனம் இல்லையப்பா சாகாமல் இருப்பது சாத்தியமில்லை தான்
ஆனால் வாழாமல் பாதியில் சென்ற தென்னப்பா கண் முன்னே வாழ்ந்தது கனவாகிப் போச்சப்பா
எட்டிப் பார்த்தால் எட்டவும் முடியவில்லை தட்டிப் பார்த்தால் தட்டவும் முடியல்ல
அரக்கன் செய்த கொடுமையால் நாம் இன்று வாடுகின்றோம் – அப்பா....!

**மயூரபதி, 83/1 டச்சு றோட்,
சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**
(எழுது மட்டுவாழ்)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்தி அழைப்பும்



மலர்வு
01.07.1946

உதிர்வு
04.08.2015

கடந்த 04.08.2015 செவ்வாய்கிழமை
சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்
**திருமதி
சறோஜினி ஜெயலிங்கம்**
அவர்களின்

ஆத்மசாந்தி நிகழ்வு இன்று (01.09.2015)
செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்
கரையிலும் 03.09.2015 வியாழக்கிழமை பகல் 11.00
மணியளவில் 271/5 நாவலர் ஒழுங்கையில்
அமைந்துள்ள அன்னாரது இல்லத்திலும்
நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள்
குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்
பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன்
அழைக்கின்றோம்.

**271/5 நாவலர் லேன்,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.**

**மகன்- அமிர்தராஜ்
சகோதரி- கௌரிகுணநாதன்**

## விபத்தில் தம்பதியினர் காயம்

வீதியில் பயணித்த கார் எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதியதில் அதில் பயணித்த தம்பதியினர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை கொடிகாமம் – பருத்தித்துறை வீதியில் வரணியில் நடந்துள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த கொடிகாமத்தைச் சேர்ந்த யோகராசா சுந்தரேசன் (வயது–32) இவரது மனைவியான சுந்தரேசன் பிரபாளினி ( வயது– 30 ) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். அவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ந–9)

## இதய அஞ்சலி

மதவடி லேன் கட்டுடையை வதிவிடமாகக் கொண்ட எமது சக
பணியாளர் **திருமதி கமலாம்பிகை உருத்திரலிங்கம்**
அவர்களின் பாசமிகு தந்தையார்
**கிட்டிணன் கதிரவேலு**
அவர்கள் 02.08.2015 பிரிவுக்குள்ளான துயரத்தில் நாமும் பங்கெடுத்து
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து நிற்கின்றோம். அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பணியாளர் நலன்புரிசங்கம்,பணிப்பாளர்கள்
யா.மா.சி.ம. உ.வி. வை சேவைக் கூட்டுறவுச் சங்கம்
K.K.S றோட்,
கோக்குவில்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்லர் வேல்சாமி**
(விற்பனை முகாமையாளர்
மில்க்வைற்சோப்)

மலர்வு
29.09.1934

உதிர்வு
11.09.2014

பாசத்தின்
உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
பாசத்தால்
அரவணைத்து
வழிகாட்டிய எங்கள்
தாத்தாவே!
உங்கள் நினைவுகளில்
மிதக்கின்றோம் தாத்தா

**குடும்பத்தினர்.**

**சிவன் அம்மை கோம் நெற்
965, காங்கேசன் துறைவீதி
யாழ்ப்பாணம்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 02 |
| 12 | 08 |
| 1930 | 2015 |

**அமரர் கோவிந்தர் இரத்தினசபாபதி**
**(ஓய்வு பெற்ற பிரதம இலிகிதர் - நீர்ப்பாசனத் திணைக்களம்)**

எங்கள் தந்தையாய் நாம் ஏற்றம் பெற
ஏணிப்படியாய் உழைத்தீர்கள்
உற்றவரின் தோழனாய் சுற்றத்தின்
காவலனாய்
ஊர் போற்ற வாழ்ந்தீர்கள்
கண் முன்னே வாழ்ந்த காலங்கள்
கனவாகிப் போனாலும்.........
எம்முன்னே எங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு மறைந்து - நீங்கள்
விண் னோக்கி சென்றாலும்.........
கண்விட்டு மறையாமல் - நீங்கள்
எம் முன் எந்நாளும் வாழ்வீர்கள்

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (01.09.2015) செவ்வாய்க்கிழமை
மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதனால்
அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து
நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் அனைவரையும் கலந்து
கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
இவ் அறிவித்தலை இந்த அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சுன்னாகம் தெற்கு, சுன்னாகம். **குடும்பத்தினர்.**

## பொலிஸாருடன் முரண்பாடு: இருமாதத்தின் பின்னர் பிணை

தென்மராட்சி, செப்.1

பொலிஸாரைக் கடமை செய்யவிடாமல் தடுத்தனர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 7 பேரையும் பிணையில் செல்வதற்கு கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரி நீதிமன்று அனுமதி அளித்தது.

கடந்த ஜூன் மாதம் 19ஆம் திகதி மிருசுவில், தவசிகுளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகக் கிடைத்த தகவலையடுத்து அங்க சென்ற கொடிகாமம் பொலிஸாரை கடமை செய்யவிடாமல் தடுத்ததுடன் அவர்கள் மீது கற்களை வீசித் தாக்குதலும் நடத்தப்பட்டிருந்தது. அதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் அந்தப் பகுதியைச் செர்ந்த 10 பெண்கள் உட்பட 23 போரைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியபோது விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. அவர்களில் 16 பேர் பிணையில் விடுவிக் கப்பட்டிருந்த நிலையில், எஞ்சியிருந்த 7 பேரும் கடந்த வியாழக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் இவர்களை கடுமையான எச்சரிக்கை செய்து பிரதி வெள்ளிக்கிழமைகளில் அந்தப் பகுதி கிராம அலுவலர் அலுவலகத்தில் கையொப்பமிடவேண்டும் என்ற நிபந்தனையுடன் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல அனுமதித்தார். (ந–9)

## இருநூறுக்கு மேற்பட்டோர் பயன்பெற்ற மருத்துவமுகாம்

வரணி, செப்.1

சங்கானை லயன்ஸ் கழகம் வரணி நாவற்காடு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனு சரணையுடன் திக்கில் கந்தசுவாமி ஆலய சுற்றாடலில் அமைந்துள்ள பொது மண்டபத்தில் அண்மையில் இலவச ஆயுள்வேத மருத்துவ முகாமும், இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றன.

இந்த முகாமில் சுமார் 200க்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து பயன்பெற்றனர். சுமார் 150க்கு மேற்பட்டோர் இலவச மூக்குக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

லயன்ஸ் கழக தலைவர் லயன் கே.ஜீ.றஜீவன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. வலயத்தலைவர் லயன் பெண்மணி சதவானந்தி, மருத்துவர்கள், லயன் மகேந்திரராஜா, லயன் ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோர் இந்த மருத்துவ முகாமில் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு சேவைகளை வழங்கினர். (ந–122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டு, ஆட்டு இறைச்சிகள் ஒரே கடையில் விற்பனை

*பிரதேச சபையிடம்முறையிட்டும் பயனில்லை என மக்கள் விசனம்*

யாழ்ப்பாணம், செப்.1

சாவகச்சேரியில் உள்ள இறைச்சி விற்பனை நிலையம் ஒன்றில் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று பொதுமக்கள் கூறு கின்றனர். சாவகச்சேரி, தனங்களப்புப் பகுதியில் உள்ள இறைச்சி விற்பனை நிலையம் ஒன்றிலேயே இவ்வாறு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. இது குறித்து சுகாதாரப் பகுதியினரும், நகர சபையினரும் அக்கறையற்று உள்ளனர் என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சாவகச்சேரி நகர சபையால் இந்த ஆண்டு இறைச்சிக் கடைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டபோது மூன்று கடைகளையும் ஒருவரே குத்தகைக்கு எடுத்துள்ளார் என்றும் கொல்களத்தில் வெட்டப்படும் மாடு மற்றும் ஆட்டு இறைச்சியை ஒரே கடையில் வைத்து விற்பனை செய்வதுடன், ஒரே கத்தியைப் பயன்படுத்தி மாட்டிறைச்சியும் ஆட்டிறைச்சியும் வெட்டி விற்பனை செய்யப்படுகின்றன என்றும் பொது மக்கள் தெரிவித்தனர்.

நகரசபையால் மாடு, ஆடு, கோழி இறைச்சியை விற்பனை செய்வதற்கு தனித்தனிக் கடைகள் வழங் கப்பட்டபோதிலும்குத்தகை எடுத்தவர் ஒரே கடையில் இரு இறைச்சிகளையும் விற்பனை செய்வது குறித்து கவலை தெரிவித்த பொது மக்கள் நகர சபையால் வழங்கப் பட்ட ஆட்டிறைச்சிக்கடைக்கட்டடத்தில் இறைச்சிக் கோழிகள் வளர்ப்புக் கூடு வைத்துள்ளார் எனவும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக சாவகச்சேரி நகர சபைச் செயலாளர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோருக்கு பல தடவைகள்முறையிட்ட போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். (ந–)

# சந்நிதி தேர்த் திருவிழாவில் 15 பவுண் நகைகள் திருட்டு

கரணவாய், செப்.1

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற செல்வச்சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவின் போது சுமார் 5 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுடைய நகைகள் திருடப்பட்டுள்ளன என்று ஆலயச் சூழலில் அமைந்திருந்த வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில்முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்த்திருவிழாவின் போது ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டிருந்தனர். அதைப் பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். ஆலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த 8 பெண்களின் கழுத்தில் அணிந்திருந்த 15 பவுணுக்கு மேற்பட்ட நகைகளே இவ்வாறு அறுக்கப் பட்டுள்ளன. அறுக்கப்பட்ட எட்டுப் பேருடைய நகைகளின் (சங்கிலி) பெறுமதி சுமார் 5லட்சம் ரூபாவுக்கு மேற்பட்டது எனவும்– இந்தத் திருட்டு முயற்சியில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டுள்ளதாகவும் வல்வெட்டித் துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இந்தத் திருடர்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பெயர் புத்தளத்தைச் சேர்ந்த இரண்டு யுவதிகளையும் மட்டக்களப்பைச் சேர்ந்த ஆண் ஒருவரையும் வல்வெட்டித் துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய போது அவர்களை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா.கணேசராசா உத்தரவிட்டுள்ளார். (ந–108)

# வடமராட்சியில் சிறுவர் பூங்கா அமைத்துத் தரக்கோரிக்கை

மாங்குளம், செப்.1

வடமராட்சிப் பகுதியில் சிறுவர்கள் விளையாடுவதற்கான பூங்கா ஒன்றை அமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மாலை நேரத்தில் மழலைகளின் உடல், உள வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும், சிறந்த பொழுதுபோக்காக அமைவதற்கும் சிறுவர் விளையாட்டுப் பூங்காக்கள் பேருதவியாக அமைகின்றன. இதனால் அவர்களின் மூளைவளர்ச்சியும், அவர்களின் உடல் மற்றும் சமூக ஒத்துழைப்பு என்பனவும் வளர்ச்சியடைகின்றன.

யாழ்.நகரை அண்டிய பகுதியிலேயே சிறுவர் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் வெவ்வேறு பிரதேசத்திலுள்ளவர்கள் விளையாட்டுப் பூங்காவை அனுபவிப்பதற்கு நேரமும், பொருளாதாரமும் பெருமளவில் செலவழிகின்றது.

எனவே ஒவ்வொரு பிரதேச சபைக்கும் உட்பட்ட இடங்களில் ஒவ்வொரு சிறுவர் விளையாட்டுப் பூங்காவை அமைத்துத் தரு மாறும் வடமராட்சி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ந–422)

# சுகாதாரமற்ற உணவு விற்பனை: மூவருக்கு நீதிமன்றில் அபராதம்

அச்சுவேலி, செப்.1

புத்தூர் நிலாவரைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு உணவுப் பொருள்களை அடிப்படை சுகாதார அமைப்பு முறைகளுக்கு புறம்பான நிலையில் வைத்து விற்பனை செய்த மூன்று வியாபாரிகளுக்கு மல்லாகம் நீதிமன்றத்தால், தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அலுவலர்கள் நிலாவரையில் உணவுப்பொருள் விற்பனை செய்யும் நிலையங்களை அவதானித்து உரிய அடிப்படை விதிகளுக்கு அமைய உணவுப்பொருள்களை வைத்து விற்பனை செய்யுமாறு ஆலோசனை கூறி கால அவகாசம் வழங்கி இருந்தனர்.

ஆயினும் மூன்று வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அடிப்படை சுகாதார விதி முறைகளை பின்பற்றத் தவறியமையால், மல்லாக நீதிமன்றத்தில் வழங்குத் தாக்கல் செய்திருந்தனர்.

மேற்படிவழக்கு விசாரணையை அடுத்து கடந்த வியாழக்கிழமை மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. இதில் இருவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களாவர். (ந–11)


**பணிப்பெண் தேவை**

யாழ் நகரில் படுக்கையில் இருக்கும் வயாதிப பெண்ணை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை.

தொடர்பு: 077 851 1847

**வாடகைக்குண்டு**

நாவற்குழி A9வீதியில் சங்கன் நிறுவனத்துக்கு அருகில் 42x28 அளவு கொண்ட கடைக்கட்டடம் சகல தேவைகளுக்கும் பாவிக்கக்கூடியது. வாகன தரிப்பிட வசதியுண்டு. மேல் மாடி வீடாகவோ காரியாலயமாகவோ பாவிக்க முடியும் .இரண்டுக்கும் தனித்தனிப் பாதைகளுடன் வாடகைக் குண்டு.

தொடர்பு: 077 771 1071






செல்லம் Dts 10.30, 2.30, 6.30 065 2240064

ராஜா யாழ்ப்பாணம் Dts 10.30, 2.30,6.30, 9.30. p.m 021 2227332

சினிசிட்டி Dts 10.30, 2.30, 6.30, 9.30 தொ.பே 077 3101080

சினிவேர்ல்ட் Dts 10.30 2.30, 6.30, 9.30 தொ.பே 011 2330017

சரஸ்வதி Dts 10.30, 2.30, 6.30, 9.30 திருகோணமலை Tel 026 2222221

**உருளைக்கிழங்கு செய்கையில் இவ்வருட (2015) ஈடுபடவுள்ள விவசாயிகளின் கவனத்திற்கு !**

இவ் ஆண்டு காலபோகம் உருளைக்கிழக்கு செய்கை மேற்கொள்ளவிருக்கும் விவசாயிளுக்கு பின்வரும் விதைகிழங்கு இனங்களை நாம் கொள்வனவு செய்து விநியோகிக்கவுள்ளோம். அனைத்து விவசாயிகளும் தங்களது தேவையை உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் விற்பனை கூட்டுறவு சங்க அப்பகுதி பிரதேச உறுப்பினர்களிடம் (08.09.2015 இற்கு முன்னர்) பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இறக்குமதி செய்யவுள்ள விதைகிழங்கு வருமாறு: றெட்லசோடா,கல்வைற்,சசி,அனோவா

இ. தேவேந்திரம்
தலைவர்
யாழ் மாவட்ட உருளைக்கிழக்கு
உற்பத்தியாளர் விற்பனை, கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்


**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர்கள்**



வி. தர்மலிங்கம்
மு. ஆலாலசுந்தரம்
ஆகியோரின்



**30 ஆவது நினைவுதின அஞ்சலிக் கூட்டம்**

காலம் :- 02.09.2015 புதன்கிழமை பி.ப 4 மணி
இடம் :- இலங்கைத் தமிழரசுக்கட்சி தலைமைப் பணிமனை 30 ,மாட்டின் வீதி யாழ்ப்பாணம்
தலைவர்:- திரு.பொ. கனகசபாபதி, தலைவர் இ.த.அ.க. யாழ் மாவட்டகிளை

பாராளுமன்ற உறுப்பினர்கள்,மாகாணசபை உறுப்பினர்கள் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அஞ்சலி உரை நிகழ்த்த உள்ளனர். அனைவரும் கலந்து கொண்டு அமரர்களுக்கு அஞ்சலி செலுத்த வருமாறு அழைக்கின்றோம்.

இலங்கை த.அ. கட்சி
யாழ் மாவட்டக்கிளை.


Mega Sale

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

இன்று (01.09.2015) செவ்வாய்க்கிழமை தொடக்கம்
5% தொடக்கம் 15% வரை
தம்ரோ, பியெஸ்ரா ஏக விநியோகஸ்தராகிய எங்களிடம்

- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு Sofa செற்றிகளுடனும் 7500/= பெறுமதியான (Glass Coffee Table)மற்றும் Stand fan free
- நீங்கள் வாங்கும் ஒவ்வொரு மெத்தைகளுடனும் ஒரு தலையணை (Pillow) இலவசம்.
- Innovex TV மற்றும் Preethi Mixi, Stand Fan, Damro Washing Machine Rice Cookers ஐ அதிகூடிய விலைக் கழிவுடனும் Damro உத்தரவாதத்துடனும் பெற்றுக் கொள்ளலாம்.
- 25000/= இற்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் கொள்வனவு செய்தால் இலவசமாக விநியோக சேவை (Home Delivery) செய்யப்படும்.
- Damro, Pyestra Nilkamal, Phonix, Arpico ஆகிய பொருள்களையும் பெற்றுக்கொள்ளலாம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



JAMUNA FURNITURE 181, Navalar Road, Jaffna.
T.P. 021 222 1092, 077 757 4776

# INVITATION FOR BIDS

## University of Jaffna

**Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the University of Jaffna-2015/2016**

1. The Chairperson, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 2.00 p.m. on **17th September, 2015** from the eligible Firms.

| Contract No | Service |
|---|---|
| UJ/MB/2015/CS/**05** | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Main Campus at Thirunelvely, Jaffna – 2015/ 2016 |
| UJ/MB/2015/CS/**06** | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Ananthakumarasamy Female Hostel and Balasingam Male Hostel, University of Jaffna-2015/2016 |
| UJ/MB/2015/CS/07 | Provision of Cleaning, Janitorialand Maintenance Services for the Faculty of Medicine University of Jaffna-2015/2016 |
| UJ/MB/2015/CS/**08** | Provision of Cleaning, Janitorialand Maintenance Services for the Ramanathan Academy of Fine Arts at University of Jaffna- 2015/2016 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   - 3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 3.2 Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than **Rs. 3.0 Mn, 2.8 Mn, 2.0 Mn & 1.2 Mn for contracts No** UJ/MB/2015/CS/**05, 6, 7 & 8 respectively.**
   - **3.3** Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least **Rs. 4.5 Mn, 4.2 Mn, 3.0 Mn & 1.8 Mn for contracts No** UJ/MB/2015/CS/**05, 6, 7 & 8 respectively.**
   - 3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least 15 employees for each Bid.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.
   Contact numbers are: Phone. Tel: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, **from 02.09.2015 until 16.09.2015** from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non refundable fee of Rupees two thousand (Rs.2,000/-) for each bid. Bid Security of Rs. 45,000.00, Rs. 40,000.00, 30,000.00 and 20,000.00 for contracts No** UJ/MB/2015/CS/**05, 6, 7 & 8 respectively** in Cash or Bank Guarantee valid for 120 days from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.
6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 11.09.2014** in the board room of the University of Jaffna and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on 17.09.2015 or** be deposited in the tender box kept in the Registrar's office on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids, in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

Chairperson,
Procurement Committee,
University of Jaffna, Thirunelvely, Jaffna.
01.09.2015

# கேள்வி அறிவித்தல்

தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம், சாவகச்சேரியினால் உணவுப் பண்டங்களை நகராட்சிமன்ற பொன் விழாமண்டப நிகழ்வுகளிற்கு வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பொருத்தமான வழங்குநர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

பெறுகையின் பெயர் : பொன்விழாமண்டப நிகழ்வுகளிற்கு உணவு வழங்குநரை தெரிவுசெய்தல்.
பெறுகை இல : **NP/14/41(3)/PO/FoodSupply/**2015

நிபந்தனைகள்:
1.சமையல் செய்து வழங்கும் பகுதியானது நகராட்சிமன்ற எல்லைக்குள் காணப்படல் வேண்டும்.
2.தங்களால் வழங்கப்படும் உணவுவகைகள் அனைத்தும் நகராட்சிமன்ற பொதுச்சுகாதார பரிசோதகரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.
3.தங்களால் தயாரிக்கப்படும் உணவுவகைகள் தொடர்ச்சியாக எப்போதும் சுவைமிக்கதாகவும் தரமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.
4.எங்கள் பணிப்பிற்கிணங்க எந்த உணவு வகைகளும் வழங்கக்கூடியதாக இருத்தல்வேண்டும்.
5.உரியநேரத்திற்கு உணவு வகைகள் யாவும் தயாரித்து வழங்குதல் வேண்டும்.
6.தங்கள் கொடுப்பனவிலிருந்து 12.5 வீதம் தரகுப்பணமாக நகராட்சிமன்றத்தினால் அறவிடப்படும்.

குறிப்பு :
1.நகராட்சிமன்றம், சாவகச்சேரியினால் வழங்கப்படும் கேள்வி பத்திரங்களை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.
2.கூறுவிலைப் பத்திரங்களை 03.09.2015 ஆம் திகதியிலிருந்து 10.09.2015 ஆம் திகதிவரை மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூ 500.00 இனைச் செலுத்தி அலுவலக நேரத்தில் நகராட்சிமன்ற நிதிக்கிளையில் பெற்றுக்கொள்ள முடியும்.
3.கூறுவிலைகள் **18.09.2015 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு மூடப்பட்டு 10.30 மணிக்குத்** திறக்கப்படும். வழங்குநர்கள் அன்றைய தினம் 10.30 மணிக்கு சமூகமளித்திருத்தல்வேண்டும்.
4.கூறுவிலைகள் "செயலாளர், நகராட்சிமன்றம் சாவகச்சேரி." எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது இச் சபையில் வைக்கப்பட்டிருக்கும் கூறு விலைப்பெட்டியில் போடுதல் வேண்டும்.
5.கூறுவிலை உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் ( **NP/14/41(3)/PO/Food Supply/**2015 ) இடப்படல் வேண்டும்.
6.மேலதிக விபரங்களுக்குத் தொ.பே.இல: 021-2270806, 021-2270[illegible] [illegible]

செயலாளர், நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி, 31.08.2015

# கருத்துரையும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம், செப்.1

'ஒப்பியல் இலக்கியம் புதிய கோட்பாடுகளும் அணுகுமுறைகளும்' எனும் தலைப்பில் கருத்துரையும் கலந்துரையாடலும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட தமிழ்த்துறை விரிவுரை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வின் கருத்துரையை தமிழ்நாடு திண்டுக்கல் காந்திக் கிராம பல்கலைக்கழக பேராசிரியர் என்.ஆனந்தகுமார் வழங்கவுள்ளார் என்று யாழ்.பல்கலைக்கழக தமிழத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற–ரி2)

# தமிழ் இலக்கிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், செப்.1

தமிழக நவீன இலக்கிய போக்குகள் என்ற தலைப்பில் தமிழ் இலக்கிய கருத்தரங்கு நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை பி.ப 3.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தலைமையுரையை க.தணிகாசலமும் கருத்துரையை இந்தியாவின் திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழக பேராசிரியர் என்.ஆனந்தகுமார் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கலந்துரையாடல் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் சமூக, கலை, இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற–ரி2)

# நிர்வாக சபை தெரிவு

யாழ்ப்பாணம், செப்.1

சாந்தையார்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயிலின்சைவசமய அபிவிருத்திக் கழகத்தின், புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப் பட்டுள்ளது. புதிய நிர்வாக சபை தலைவராக இரா. செல்வ வடிவேல், உபதலைவர்களாக சி.சோமேஸ்வர பிள்ளை, பா.காசிநாதன், செயலாளராக முகுந்தன், உபசெயலாளராக செல்வி. இ.வாசுகி, பொருளாளராக சி. சிவகுமாரன், பரீட்சை செயலரும், சமய பிரசாரகரும் சு.சிறிகாந்தன், நிர்வாகசபை உறுப்பினர்களாக இ. ஜெயகபில், செல்வி.த.சூரியகலா, செல்வி.ஜெபிருந்தாஜினி, திருமதி. சு.மாதங்கி, தி.அருளம்பலம், சு.பாலசுப்பிரமணியம், நா.லோகநாதன், வி.தயாபரன், த. ஜதுர்ஷன், சி. பகீரதன், இ.தேவகுமாரன், பா.ஜெயபாலன், பா.சசிகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற–ரி4)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடம்

## கல்வியாண்டு 2013 / 2014 விரிவுரைகள்

**யாழ்ப்பாண பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழகத்திற்கு கல்வியாண்டு 2013/2014 இல் கற்கை நெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டு பதிவுகளை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் (Orientation Programme) எதிர்வரும் 07.09.2015 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு நுண்கலைப்பீடத்தில் நடைபெறும். 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான புதிய கல்வியாண்டு 2013/2014 இற்கான விரிவுரைகள் 14.09.2015 திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. மாணவர்கள் விரிவுரைகளுக்குச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**பதிவாளர்.**
**28.08.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாகாவரம் அளிக்கும் சமூக வலைத்தளம்

புதிதாக ஒரு சமூக வலைப்பின்னல் சேவை தளம் அறிமுகமாகியிருக்கிறது தெரியுமா? பேஸ்புக்குக்கு போட்டியா? என்ன இருந்தாலும் பேஸ்புக்கை மிஞ்ச முடியுமா? என்றெல்லாம் கேட்பதற்கு முன்னால் ஒரு விடயம்; இந்தச் சமூக வலைத்தளம் உண்மையிலேயே புதுமையானது! எப்படி என்றால், பயனாளிகளுக்கு டிஜிற்றல் சாகாவரம் அளிக்கும் வகையில் இந்தத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் இறந்த பிறகும் கூட அவர்கள் சமூக வலைப்பக்கத்தை உயிருடன் வைத்திருக்கும் வகையில் இந்தச் சேவை உருவாக்கப்பட்டுள்ளது. இணையப் பயனாளிகளின் டிஜிற்றல் இருப்பு அவரது சாவுக்குப் பின்னர் என்ன ஆகும் எனும் கேள்விக்கு பதிலாகத்தான் எட்டர் வலைப்பின்னல் சேவை உருவாகியிருக்கிறது. போர்த்துக்கல் நாட்டின் மென்பொருள் வல்லுநரான ஹென்றிக் ஜோர்கே இந்தச் சேவையை உருவாக்கியுள்ளார்.

அடிப்படையில் பேஸ்புக் போன்றது தான் என்றாலும் இரண்டு விதங்களில் இது மாறுபட்டது. இந்தச் சேவை செயற்கை அறிவு சார்ந்து உருவாக்கப்பட்டுள்ளதால் பயனாளிகளின் ஆளுமையைப் புரிந்துகொள்ளும் ஆற்றல் இதற்கு உண்டு. ஆக, காலப்போக்கில் இந்தத் தளம் அதன் பயனாளிகளின் குணாதிசயத்தைப் புரிந்துகொண்டு செயற்படும் தன்மை கொண்டிருக்கிறது என்று ஹென்றிக் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே இந்தத் தளம் பயனாளிகள் இறந்த பிறகும் அவர்கள் சார்பில் பதிவுகளை வெளியிட்டுக்கொண்டிருக்கும். அவர்கள் உயிருடன் இருந்தபோது இந்தச் சேவையை எப்படிப் பயன்படுத்தி வந்தனரோ அதே விதமாக சாவுக்குப் பின்னரும் தொடரச்செய்யும். இந்த வகையில் பயனாளிகளுக்கு டிஜிற்றல் சாகா வரத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. இந்தத் தளத்தை பயன்படுத்துவதும் சுவாரஸ்யமாகத்தான் இருக்கும் என்ற எண்ணத்தை அதன் அறிமுகப் பகுதி உருவாக் குகிறது.

இதில் பயனாளிகளுக்கு இடையிலான தொடர்பு இணைப்பு இருக்கிறது. இணைப்புகள் அழைப்பு மூலம் உருவாக்கப்பட வேண்டும். அழைப்புகளை ஏற்கலாம், நிராகரிக்கலாம். அதன் பிறகு பயனாளிகள் பதிவுகளை வெளியிடலாம். மற்றவர்கள் பதிவுகளைப் பார்த்துக் கருத்து தெரிவிக்கலாம் அல்லது புன்னகைக்கலாம்.

பேஸ்புக் லைக் போல இதில் புன்னகை. பேஸ்புக்கில் பதிவுகளை வெளியிடச் சுவர் என்றால் இதில் அந்தப் பகுதி கார்டெக்ஸ் எனக் குறிப்பிடப்படுகிறது. இவை தவிர நைனர்ஸ் எனும் டிஜிற்றல் ஜீவராசிகளும் இந்தத் தளத்தில் தோன்றுமாம். அவற்றைப் பயனாளிகள் தத்தெடுத்துக்கொண்டு வளர்க்கலாம். இவை எல்லாம் சேர்ந்து தான் இந்தத் தளத்தை செயற்கை அறிவின் மையமாக்குகிறது. இணைய உலகின் கவனத்தை ஈர்த்திருக்கும் இந்தச் சமூக வலைத்தளம் வேகமாகப் பயனாளிகளையும் ஈர்த்துவருகிறது.



# ஹாங் அவுட்டுக்கு புதிய இல்லம்

ஹாங் அவுட் சேவைக்காக கூகுள் புதிய இணையத்தளத்தை உருவாக்கியுள்ளது. hangouts.google.com எனும் அந்தத் தளத்தின் மூலம் ஹாங்கவுட் சேவையை பயன்படுத்திக்கொள்ள லாம். வீடியோ அழைப்பு, தொலைபேசி அழைப்பு, மெசேஜிங் ஆகிய வசதிகளை முகப்புப் பக்கத்தில் இருந்தே எளிதாக அணுகலாம். ஹாங்கவுட்டை பயன்படுத்துவதற்காக இன்னொரு வழியை அறிமுகம் செய்திருப்பதாக கூகுள் தெரிவித்துள்ளது. அதன் மூலம் ஜி–மெயில் மற்றும் ஜி–பிளஸ்சில் இருந்து ஹாங் அவுட்டை விடுவித்திருக்கிறது. பிரவுசரில் இருந்தே ஹாங் அவுட் வசதியை எளிதாகப் பயன்படுத்துவதையும் இது சாத்தியமாகுகிறது.

# டிராக்டர் சாரதி மீது கும்பல் தாக்குதல்

தென்மராட்சி, செப்.1

வடமராட்சிப் பகுதியில் வைக்கோல் பறித்துவிட்டு வந்த டிராக்டர் சாரதியை வழிமறித்த கும்பல் ஒன்று கொட்டன்கள் மற்றும் போத்தல்களால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சர சாலை வடக்கு வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில். டிராக்டரின் சாரதியும் உடன் சென்றவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

சரசாலை வடக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் தனபாலசிங்கம் (வயது–48 ), சரசாலை மத்தியைச் சேர்ந்த இரத்தின சிங்கம் சிவகாந்தன் (வயது–29 ) ஆகியோரே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

அதேவேளை, கைதடி மற்றும் சங்கத்தானை பகுதிகளில் தாக்குதல் சம்பவங்களால் காயமடைந்த இரு பெண்களும் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ற–9)



யாழ்ப்பாணம் வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் 125 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக தாய்வான் தைசுங் வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தின் இளைஞர், யுவதிகள் நான்கு நாள்கள் பயணம் மேற் கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தனர். கடந்த 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வந்த இவர்கள் மாவட்டத்தின் பல இடங்களுக்குச் சென்று பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டனர். குறிப்பாக இயக்கச்சி வை.எம்.சீ.ஏ. கிராமத்தைப் பார்வையிட்ட தாய்வான் நாட்டு இளைஞர், யுவதிகள் கிராம இளைஞர், யுவதிகள் மற்றும் சிறுவர்கள் ஆகியோருடன் இணைந்து சிரமதானம் உட்பட பல்வேறு நிகழ்வுகளை மேற்கொண்டுள்ளனர். (ற–9)

# சாந்தியின் சிந்தனைகள் அவரை வாழவைக்கும்

## மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் இரங்கல்

யாழ்ப்பாணம் ,செப் .1

விழுது நிறுவனத்தின் பணிப்பாளர் சாந்தி மனோ இராஜசிங்கத்தின் மறைவுக்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தினர் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மகளிர் அபிவிருத்தி நிலைய பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

சாந்தியின் சேவைகள் பல பரிமாணங்களைக் கொண்டது. சமூக சேவை மட்டுமன்றி, அரசியல் கருத்துருவாக்க கொள்கை வகுப்பளர்களுக்குப் புதிய வழிமுறைகளை வகுத்து காட்டியவர். நோய்வாய்பட்டிருந்த வேளையிலும், அதன் தாக்கத்தை பொருட்படுத்தாது, பல கலந்துரையாடல்களில் கலந்துகருத்துகளை பரிமாற்றினார்.

25 மேற்பட்ட அரசியல் கட்டுரைகளை எழுதி, அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தியவர்.

அவரது கருத்துகள் , சிந்தனைகள் யாவும் என்றுமே உயிரூட்டமுள்ளவையாக அவரை வாழவைக்கும்– என்றுள்ளது. (ற–ரி4)

25 ஆவது திருமண நாள் வாழ்த்துக்கள்

இன்று (01.09.2015) செவ்வாய்க்கிழமை லண்டனில் தமது 25 ஆவது திருமணநாள் காணும்

திரு. திருமதி சதீஷ்குமார் செல்வராணி

அவர்களினை சீரும் சிறப்புடனும் நீடூழி காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனின் திருவருளை வேண்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.



ஆசியை வேண்டி நிற்கும்:
கந்தசாமி மனோன்மணி குடும்பம் ( மானிப்பாய்) மகன், ஆறுமுகம் - சிவக்கொ மூத்த குடும்பம் (புங்குடு தீவு) - மகள்

பிள்ளைகள்

சகோதரர்கள்

பேரமக்கள், மருமக்கள்

லண்டன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகின் முன்னணி வீதித் திருவிழாக்களில் ஒன்றான லண்டன் நாட்டிங்ஹில் கார்னிவேல் திருவிழா நேற்று ஆரம்பமானது. அதனை லட்சக்கணக்கான மக்கள் கண்டுகளித்தனர். (ஐ)

# சவூதியில் தீ விபத்து

## 11 பேர் சாவு



ரியாத்,செப்.1

சவூதி அரேபியாவில் குடியிருப்பு வளாகம் ஒன்றில் ஏற்பட்ட பயங்கரத் தீ விபத்தொன்றில் 11 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 219 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த விபத்தில் பல நாடுகளைச் சேர்ந்தவர்கள் இறந்திருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இந்தத் தகவல் உறுதி செய்யப்படவில்லை. சவூதி அரேபியாவின் கிழக்கே உள்ள கோபார் என்ற நகரில் கட்டடத் தரைத் தளத்தில் முதலில் தீ பிடித்ததாகக் கூறப்படுகிறது. காயமடைந்தவர்களில் பலர் தீவிர பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதால் உயிரிழப்புகள் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சவூதி அரேபியாவின் பெரும் எண்ணெய் நிறுவனமான சவூதி அராம்கோவில் பணிபுரியும் பணியாளர்கள் பலர் இந்தக் குடியிருப்பில் வசித்து வந்தனர்.

கட்டடத்தில் தீ பிடித்ததும், சம்பவ இடத்தில் தீயை அணைக்கும் முயற்சியில் ஏராளமான ஹெலிகொப்டர்கள் வானிலிருந்து தண்ணீரை ஊற்றி வருகின்றன. இதன் காரணமாக அந்த கட்டடத்தின் அருகில் உள்ள கட்டடங்களில் குடியிருந்தவர்கள் பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டனர். கட்டடத்துக்குள் யாரும் தீயில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கும் வகையில் தேடுதல் பணியும் நடைபெற்று வருகிறது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. சவூதி அராம்கோ என்பது உலகின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் நிறுவனமாகும். இந்த நிறுவனத்தில் மொத்தம் 71 நாடுகளைச் சேர்ந்த 61 ஆயிரம் பேர் வேலை செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழகத்தில் அரிய புத்தர் சிலை கண்டுபிடிப்பு



சென்னை,செப்.1

தமிழகத்தின் தேனி மாவட்டத்தில் 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப்படும் புத்தர் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. முழுமையடையாமல் உள்ள இந்தச் சிலை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என அதைக் கண்டுபிடித்துள்ள தொல்லியல் ஆய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர். பாண்டிய நாடு முழுவதும் செய்து வரும் ஆய்வின் ஒரு கட்டமாக தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டிக்கு அருகிலுள்ள ரோசல்பட்டி பகுதியில் மேற்கொண்ட கள ஆய்வின் போதே இந்தச் சிலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக, பாண்டிய நாட்டு வரலாற்று ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அந்தப் பகுதியில் பௌத்தச் சின்னம் ஒன்று கிடைத்திருப்பது இதுவே முதல் முறை என்கிறார் அவர்.

இந்தச் சிலை எந்த அளவுக்கு பாண்டிய நாட்டுப் பகுதியில் பௌத்தம் தழைத்திருந்தது என்பதைக் கண்டறிவதற்கு உதவியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் கிடைத்த இதர தொல்லியல் தடயங்கள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அந்தப் புத்தர் சிலை கி.பி. ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## லிபியாவில் படகு விபத்து

### 37 பேர் சாவு




லிபியா,செப்.1

லிபியாவில் கடல் பகுதியில் சுற்றுலா பயணிகள் சிலர் படகுச் சவாரி செய்தனர். அப்போது படகு கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது.

அதில் படகில் பயணம் செய்த 37 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் பலரைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. படகில் மொத்தம் எத்தனை பேர் பயணம் செய்தனர் என்பது குறித்த தகவல் தெரியாததால் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ஐ)

## போரில் தப்பி வரும் அகதிகளுக்கு அடைக்கலம் வழங்கும் பிரான்ஸ்




பரிஸ்,செப்.1

உள்நாட்டுப் போர், கலவரங்கள் மற்றும் உயிருக்கு ஆபத்தான சூழல்களிலிருந்து தப்பி வரும் அகதிகள் மற்றும் புலம்பெயர்ந்தவர்களைப் பிரான்ஸ் நாடு கௌரவமாக வரவேற்க வேண்டும் என அந்த நாட்டின் பிரதமர் உருக்கமாகப் பேசியுள்ளார். ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வரும் புலம்பெயர்ந்தவர்களின் நெருக்கடி குறித்துப் பிரான்ஸ் நாட்டில் உள்ள லா ரோசெல்லே நகரில் கடந்த ஞாயிறு அன்று ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசிய பிரான்ஸ் நாட்டின் பிரதமரான மேனுவல் வால்ஸ், உள்நாட்டுப் போர், அடக்குமுறைகள் மற்றும் உயிருக்கு ஆபத்தான சூழல்களிலிருந்து தப்பித் தஞ்சம் கோரி வரும் புலம்பெயர்ந்தவர்களைக் கௌரவத்துடன் வரவேற்க பிரான்ஸ் தயாராக இருக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

உங்கள் நாடுகளில் உள்ள பணி செய்து ஓய்ந்துள்ள நபர்கள் மற்றும் வீடுகள் இல்லாமல் அவதிப்படும் ஏழை மக்களை எங்களிடம் கொடுங்கள், அவர்களுக்கு நாங்கள் வெளிச்சம் அளிக்கிறோம் என்ற அமெரிக்க சுதந்திர தேவி சிலையில் பொறிக்கப்பட்டுள்ள அந்த வாசகத்தை பிரதமர் குறிப்பிட்டுப் பேசியுள்ளார். எனினும், சட்டவிரோதமாக வரும் புலம்பெயர்ந்தவர்களுக்கு எதிரான கருத்துக்களையும் பிரதமர் தெரிவித்துள்ளார். தகுந்த காரணங்கள் இல்லாமல் தங்களுடைய பொருளாதார நிலையை மட்டும் உயர்த்திக்கொள்வதற்காக வரும் சட்டவிரோதக் கும்பலை இரும்புக்கரம் கொண்டு அடக்குவோம் என பிரதமர் மேனுவல் வால்ஸ் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ஆலோசனைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாக, மத்திய தரைக் கடல் வழியாக பயணம் மேற்கொண்டு உயிரிழந்த சுமார் 200 புலம்பெயர்ந்தவர்களுக்கு பிரதமர் மற்றும் பிற அமைச்சர்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தியமை குறிப்

## யேமனில் வான் படைத் தாக்குதலில் பொதுமக்கள் 30 பேர் சாவு



சனா,செப்.1

யேமனில் நடைபெற்றுவரும் ஹவுதிகள் தலைமையிலான உள்நாட்டுப் புரட்சியை முறியடிக்க, கடந்த மார்ச் மாதம் முதல் அங்கே சவூதி அரேபியா தலைமையிலான கூட்டு விமானப்படைகள் களமிறங்கி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், யேமனின் தெற்கு மாகாணமான ஹஜ்ஜாவைக் குறிவைத்து நேற்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதல்களில் குறைந்தது 30 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்கும் பணி முடிந்து விட்டதாகவும், பலரது உடல்கள் முழுவதுமாக எரிந்து போன நிலையிலும், சிறு சிறு துண்டுகளான நிலையிலும் மீட்கப்பட்டுள்ளதாகத் தாக்குதல் நடந்த இடத்துக்கு அருகில் வசிப்பவர்கள், பெரும் சோகத்துடன் குறிப் பிட்டுள்ளனர். யேமன் தலைநகரைக் கட்டுப்படுத்தும் முக்கிய நகரங்களாக கருதப்படும் தாய்ஸ் உள்ளிட்ட முக்கிய மாகாணங்களைக் கைப்பற்றும் விதமாக இந்தத் தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஜப்பானில், இராணுவச் சட்டத் திருத்தத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியே நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திருத்தங்களின்படி, ஜப்பானின் இராணுவத்துக்கு போருக்குச் செல்வதற்கு கூடுதல் சுதந்திரம் கிடைக்கின்றது. புதிய திருத்தம் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தின் மேலவையில் நிறைவேற்றப்பட்டு, நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்போதுள்ள சட்டப்படி ஜப்பான் இராணுவம் தற்காப்புக்கு மட்டுமே போரில் ஈடுபட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தனி நாணயத்தை வெளியிட்ட ஐ.எஸ்.

வொஷிங்டன்,செப்.1
ஐ.எஸ். அமைப்பினர் தங்களுக்கு எனத் தனியாகத் தங்கத்தால் செய்யப்பட்ட நாணயங்களை உருவாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஐ.எஸ். அமைப்பினர் தனி இஸ்லாமிய நாட்டை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அதன் காரணமாகப் பல்வேறு நாச செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் தற்போது அவர்கள் தங்களுக்கெனத் தங்கத்தால் செய்யப்பட்ட நாணயத்தின் புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர். மேலும் வெள்ளி மற்றும் செம்பு நாணயங்களையும் உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 21 கரட் தங்கத்தால் செய்யப்பட்ட அந்தப் புதிய ஒரு தினார் நாணயம் 4.25 கிராம் நிறையுடையது என்றும்– 139 அமெரிக்க டொலருக்குச் சமமானது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு தினார் நாணயத்தில் கோதுமைப்பயிரும் 5 தினார் நாணயத்தின் ஒரு பக்கத்தில் உலக வரை படமும் இடம்பெற்றுள்ளது. ஐ.எஸ் அமைப்பினர் தீவிரவாத அமைப்பினர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதால் அந்த நாணயங்களை அவர்களின் எல்லையைத் தாண்டி உபயோகிக்க முடியாது என்றும் கூறப்படுகிறது. அமெரிக்காவுக்கு எதிராக நாணயத்தை உருவாக்கியுள்ள அவர்கள் தற்போது தங்களுடைய வீரர்களுக்குச் சம்பளத்தை அமெரிக்க டொலரில் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)




# தீவிரவாத ஒழிப்புக்கு நிதி கிடைப்பதில் சிக்கல்

## பாகிஸ்தான் பிரதமர் கவலை

இஸ்லாமாபாத்,செப்.1
அமெரிக்காவிடமிருந்து தீவிரவாத ஒழிப்பு நிதி கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸிடம் கவலை தெரிவித்துள்ளார். தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக பாகிஸ்தானுக்கு அமெரிக்கக் கூட்டணி ஆதரவு நிதி வழங்கி வருகிறது. தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கைகளுக்காக தாங்கள் செலவு செய்த தொகையைக் கணக்குக் காட்டி, அமெரிக்காவிடம் பாகிஸ்தான் இந்த நிதியைப் பெற்றுக்கொள்கிறது. 2001 ஆம் ஆண்டு, ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா போர் தொடுத்த காலத்தில் இருந்து இந்த நிதியை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கி வருகிறது. அந்த வகையில் இதுவரை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா 13 பில்லியன் டொலர் வழங்கியுள்ளது. இறுதியாக கடந்த வருடம் ஏப் ரல், மே, ஜூன் காலகட்டத்துக்கு உரிய தீவிரவாத ஒழிப்பு நிதியாக 337 மில்லியன் டொலரை அமெரிக்கா விடுவித்தது.

ஆனால், ஆப்கானிஸ்தான்– பாகிஸ்தான் எல்லையில், தலீபான் தீவிரவாத இயக்கத்துடன் இணைந்து செயற்படுகிற ஹக்கானி வலைச்சமூகம் என்ற தீவிரவாத இயக்கத்தை ஒடுக்குவதற்கு பாகிஸ்தான் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என அமெரிக்கா அதிருப்தி அடைந்து, அடுத்த கட்ட மாக பாகிஸ்தானுக்கு நிதி வழங்குவதற்கு நாடாளுமன்றுக்குப் பரிந்துரை சான்றிதழ் வழங்க மாட்டோம் என அமெரிக்க அரசு அண்மையில் அறிவித்தது.

வழங்கும் தீவிரவாத ஒழிப்பு நிதி கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ், இஸ்லாமா பாத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியுள்ளார். அதன்போது சூசன் ரைஸிடம் பிராந்திய பாதுகாப்பு நிலவரம், குறிப்பாக இந்தியா, ஆப்கானிஸ் தானுடனான உறவுகள் குறித்து நவாஸ் ஷெரீப் எடுத்துரைத்துள்ளார். (ஐ)



## உயிரிழந்த இரட்டையர்களை தெய்வமாக வழிபடும் பழங்குடியினர்

### அவர்களின் உருவப்பொம்மைகளை பாடசாலைக்கு அனுப்பும் வினோதம்

லபீரியா,செப்.1
மேற்கு ஆபிரிக்காவில் இறந்து போன இரட்டைக் குழந்தைகளுக்கு உருவபொம்மை செய்து அவற்றை குழந்தையாக பாவிக்கும் செயல் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. மேற்கு ஆபிரிக்காவின் பெனின் பகுதியைச் சேர்ந்தவர்கள் பொன் பழங்குடியினர்.

உலகளவில் அதிக இரட்டையர்கள் பிறக்கும் இனங்களில் இவர்களும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இரட்டையர்களாகப் பிறக்கும் குழந்தைகள் சிறு வயதிலேயே இறந்துவிட்டால் அவர்களுக்கு உருவபொம்மை செய்கின்றனர். பொம்மைக்குள் இறந்த இரட்டையர்களின் ஆன்மா உள்ளது என்பது அவர்களது நம்பிக்கை. மேலும் அவ்வாறு செய்யவில்லை என்றால் தங்களின் குடும்பத்துக்குப் பல துன்பங்கள் ஏற்படும் என்றும் நம்புகின்றனர். அதன்படி இரட்டையர்களாக இருக்கும் குழந்தைகள் இறந்து போனால் அவர்களைப் போலவே உருவப் பொம்மை செய்து அந்தப் பொம்மைகளை குளிக்கவைத்து அதற்கு உணவும் அளிக்கின்றனர். சில வேலைகளில் சிறுவர்களுடன் சேர்த்து அந்தப் பொம்மைகளையும் பாடசாலைக்கு அனுப்புகின்றனர் என்றும் கூறப்படுகிறது.

மேலும் அந்தப் பொம்மைகள் உடன் இருந்தால் எந்தத் தீய சக்தியும் தங்களை நெருங்காது என்று நம்பும் அவர்கள் பொம்மைகளை எப்போதும் தங்களுடனேயே வைத்திருக்கின்றனர். எங்காவது பயணம் செய்யும் போது மட்டும் அந்தப் பொம்மைகளைக் குழந்தைகள் வளர்ப்பு இல்லத்தில் விட்டு செல்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)





## வைத்தியசாலையிலிருந்து 26 புலம்பெயர்ந்தோர் ஆஸியில் தப்பியோட்டம்

வியட்னாம்,செப்.1
ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஆஸ்திரிய மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த 26 புலம்பெயர்ந்தோர் தப்பி ஓடியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. மேற்கு ஆஸ்திரியாவில், ஜேர்மனி எல்லையை ஒட்டிய, பிரானாம் இன் நகரில், பொலிஸார் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, ஒரு பாரவூர்தி நிற்காமல் வேகமாகச் சென்றுள்ளது. இதையடுத்து பொலிஸார் அந்தப் பாரவூர்தியை துரத்திச் சென்று மடக்கியுள்ளனர். அதில் சிரியாவைச் சேர்ந்த மூன்று சிறுவர்கள் உட்பட 26 பேர் ஒளிந்துக் கொண்டிருந்தனர். அவர்களில், உடல் நிலை பாதிக்கப்பட்டு, மிகவும் மோசமான நிலையில் இருந்த, மூன்று சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மருத்துவமனையில் சேர்மதிக்கப்பட்டனர். இந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த 26 பேரும் அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டதாக, தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.(ஐ)

## ஊடகவியலாளர்களுக்குச் சிறை சர்வதேச நாடுகள்; கண்டனம்

ரொறான்ரோ,செப்.1
கனடா நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் தவறான செய்தி வெளியிட்ட காரணத்துக்காக எகிப்து நீதிமன்றம் அவருக்கு 3 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்ததற்கு சர்வதேச அளவில் கண்டனங்கள் வலுத்து வருகின்றன. எகிப்து நாட்டில் அனுமதி இல்லாமல் தொலைக்காட்சி சாதனங்களைக் கொண்டு வந்த காரணத்துக்காக ஊடகவியலாளர்கள் குற்றம் சாட்டப்பட்டு சிறை யில் அடைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக கனடா பிரதமர், தனது நாட்டு பிரஜையை விடுதலை செய்து நாட்டுக்குத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை எகிப்து அரசு விரைவில் மேற்கொள்ள வேண்டும் என எகிப்து அர[illegible]ன் நடவடிக்கைக்கு கண்டனம் [illegible]வித்துள்ளார். ஊடகங்க[illegible] இருக்கும் கருத்துச் சுதந்[illegible]தைப் பறிக்கும் இந்த அ[illegible] முறையை உடனடியாக நி[illegible] வேண்டும் என அமெரிக்க [illegible] சார்பில் வெளியிடப்பட்ட [illegible]கையில் தெரிவிக்கப்ப[illegible] ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெ.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

# தேங்காயில் கறாவல் தோற்றத்தை அவதானித்தீர்களா?

தென்னையில் பாளைகள் வந்து விரிந்தவுடன் குரும் பட்டிகள் உற்பத்தியாகும்.
ஏனைய பருவ நிலைகளில் அசேரியா குரோரோனிஸ் (Aceria guerreronis) எனும் விஞ்ஞானப் பெயருடைய மைற் (Mite) பீடை தாக்குகின்றது. இது ஆத்திரோபோடா இனத்தில் இனப்பெயர் இரியோபைட் என்னும் பாகுபாட்டைச் சேர்ந்த ஓர் உயிரி ஆகும். தேங்காய் உற்பத்தியில் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்பை ஏற்படுத்துவது பீடை ஆகும். இதனைக் கண்ணால் பார்க்க முடியாது. நுணுக்குக்காட்டியால்தான் பார்வையிட முடியும்.
குரும்பையிலிருந்து தேங்காய் வரை முகிழ் பகுதிக்குள் கூட்டமாக வெள்ளை நிறமாகக் காணப்படும். இவை 36 மாதங்கள் வரையான தென்னங்குரும்பட்டிகளின் மேற்றோல் இழையங்களை உண்ணுவதனால் தேங்காயின் மேற்பகுதி கறாவல் தோற்றமுடையதாக மாற்றமடைகின்றது. அதுமட்டுமல்லாமல் தேங்காய்களின் பருப்பு உள்ள பகுதியும் சிறியதாக மாற்றமடையும்.
மைற் தாக்கத்தின் தீவிர நிலையில் தேங்காய்கள் முதிர்வடையாமலே மரத்திலிருந்து விழும். இந்தப் பீடை காற்றினால் பரம்பலடைகின்றது. தாக்கத்தின் தீவிர நிலையில் தேங்காயின் வெளிப்புறத்தோலில் ஆழமான வெடிப்புக்கள் தோன்றி, விரும்பத்தகாத வடிவத்தைக் கொண்டிருக்கும். அது மட்டுமல்லாமல் தேங்காய் கொப்பறா உற்பத்திகளில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.
மைற் பரம்பலைக் குறைத்து சேதத்தைக் கட்டுப்படுத்தும் முக்கியமான இரு வெவ் வேறான கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்துகின்றோம். இயற்கை நாசினிகளைக் கொண்டும் நவீன முறையிலான உயிரின வியல் கட்டுப்பாடு மூலமும் கட்டுப்படுத்தலாம்.

**இயற்கை நாசினி 1**

சல்பர் பாம் ஒயில் அல்லது மரக்கறி எண்ணெய்க் கலவை விசிறல்.




ஒரு லீற்றர் கலவை தயாரிக்கத் தேவையான பொருள்கள்
1. பாம் ஒயில் 200 மி.லீற்றர்
2. நீர் 800 மி.லீற்றர்
3. சவர்க்காரத்தூள் 12 கிராம்(2 மே சைக் கரண்டி)
4. கந்தகம் (சல்பர்) ஒரு மேசைக்கரண்டி (நீரில் கரையக் கூடியது)

**தயாரிக்கும் முறை**

நீரில் சவர்க்காரத்தூள், கந்தகம் என்பவற்றை நன்றாகச் சேர்த்துக் கரைக்க வேண்டும். பின்பு இறுதியில் பாம் ஒயிலைச் சேர்த்து ஒன்றாக்கவும். இதனை ஒரு கைத்தெளி கருவியில் விட்டு வட்டிலுள்ள எல்லாக் குரும்பைகளுக்கும் தேங்காய் களுக்கும் விசிறவும்.

**இயற்கை நாசினி முறை 2**

தேவையான பொருள்கள்.
வெள்ளைப்பூடு (உள்ளி) 20 கிராம், அரைக் கப் நீர்
சவர்க்காரம் 5 கிராம், அரைக்கப் நீர்
வேப்பெண்ணை 20 மி.லீற்றர்
முதலில் வெள்ளைப் பூண்டை தோலுரித்து கிரைண்டர் அல்லது அம்மியில் இட்டு அரைக் கப் தண்ணீர்விட்டு நன்றாக அரைக்கவும். பின்பு அக்கரைசலை பருத்தித் துணியின் உதவியுடன் வடிக்கவும். இந்தக் கரை சலை வேறாக வைக்கவும். பின்பு சவர்க் காரத்தை 5 கிராம் அளவு சீவி எடுத்து அரைக் கப் நீரில் கரைக்கவும். உள்ளிக் கரைசலையும், சவர்க்காரக் கரைசலையும் ஒன்றாகச் சேர்க்கவும். இதன் பின்பு 20 மி.லீற்றர் வேப்பெண்ணெயையும் அதனுள் சேர்த்து ஒரு போத்தல் நீரில் ஐதாக்கவும். இந்தக் கலவையைக் கைத்தெளிகருவி ஒன்றினுள் இட்டு குரும்பட்டியின் எல்லாப் பருவ நிலைகளுக்கும் படத்தக் கதாக விசிறவும்.
குறிப்பு : கலவை விசிறுவதற்கு முன்பு குலையிலுள்ள எல்லா பருவ நிலையிலுமுள்ள காய்ந்த குரும்பட்டிகளை வெட்டி அப்புறப் படுத்தவும்.

**உயிரினவியல் கட்டுப்பாடு**

மைற் தாக்கத்துக்கு பராக்கி எனும் உயிரியை விடுதல் இன்னுமொரு முறையாகும். தென்னை அசேரியா மைற்றினைக் கட்டுப்படுத்த உயிரினவியல் ரீதியாக இரை கௌவியான நியுசிலஸ் பராக்கி (Neosilous barakki) என்னும் உயிரியை இன விருத்தி செய்யப்பட்டு பொலித்தீன் பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்டு தென்னைச் செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. 4 மரத்துக்கு ஒரு பைக்கற் என்ற அளவில் ஏக்கருக்கு 16 பைக்கற்றுக்கள் தேவைப்படும்.
குறிப்பு : இந்தப் பக்கற்றிலுள்ள பராக்கி எனும் உயிரியை வெயில் அதிகமாகவுள்ள நேரத்தைத் தவிர்த்து மாலை நேரங்களில் தென்னந்தோட்டங்களில் 4 மரத்துக்கு ஒரு பக்கற் என்ற அளவில் மரத்தில் ஏறி வட்டுப்பகுதி யில் பக்கற்றின் மூலைப்பகுதியை வெட்டி தடித் துண்டால் தட்டிவிடவும்.
இந்த இலகுவான முறையின் மூலம் மைற்றினைக் கட்டுப்படுத்த முடியும்.
மேலும் விவரங்களுக்கு அவ்வப்பகுதி கமநல சேவை நிலையத்தில் அமைந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை அலுவலகத்தில் தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தரைச் சந்தித்து ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.



# கலாசார மரபுரிமை பிரிவில் விருது வென்ற மொபிடெல்

தேசிய நடமாடும் தொலைபேசிச் சேவை வழங்குனர்களான மொபிடெல், அண்மையில் இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் உள்ள இந்திய ஹபிடாட் நிலையத்தில் இடம்பெற்ற கீர்த்தி மிக்க எம் பில்லியந்த் விருது வழங்கும் விழாவில் மொபிடெல் எம் ஹைட் திட்டத்துக்காக கலாசார மரபுரிமை பிரிவில் முக்கியமான விருதை வென்றுள்ளது.
இது நடமாடும் தொலைபேசிகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு உன்னதமான செவிப்புல சேவையாகும்.
எம் பில்லியந்த் விருதானது இந்தத் துறையில் தெற்காசிய பிராந்தியத்துக்கான ஒரு அங்கீகாரத்தை வழங்குகின்றது. இது டிஜிட்டல் ரீதியான சமூகங்களுக்கு இடையிலான பிளவை நீக்கும் ஒரு பாலமாக அமைகின்றது. மக்களுக்கு வலுவூட்டி பாரிய சமூக பொருளாதார சமத்துவத்துக்கும் வழி வகுக்கின்றது.
எம் ஹைட் திட்டத்துக்காக மொபிடெல் பாரிய அங்கீகாரத்தை வென்றுள்ளது. இலங்கையில் உள்ள தொல்பொருள், வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பற்றிய தகவல்களை வழங்கும் ஒரு சுற்றுலா வழிகாட்டியாக இது செயற்படுகின்றது.
இலங்கையில் முதற் தடவையாக 2011 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம், குரல் குறியீடு ஒன்றின் மூலம் இந்தத் தகவல்களை வழங்குகின்றது. மொபிடெல் தொடர்பில் 888 என்ற இலக்கத்தை அழுத்தி இந்தச் சேவையைப் பெற்றிட [illegible] தொல்பொருள் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டம் செயற்படுகின்றது. (த)

# செலான் வங்கி அனுசரணையில் இடம்பெற்ற மரிஸ் மோட்டார் பவனி



நீர்கொழும்பில் பலரின் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற மரிஸ் மோட்டார் பவனிக்கு செலான் வங்கி அனுசரணை வழங்கியிருந்தது. கடந்த மூன்று ஆண்டு காலமாக இந்தமரிஸ் மோட்டார் பவனிக்கு செலான் வங்கி அனுசரணை வழங்கி வருவதுடன், இந்தப் பங்களிப்பு படிப்படியாக வலுவடைந்துள்ளது. மேலும் இந்த நிகழ்வுக்கு பல்வேறு வழிகளிலும் செலான் வங்கி பெறுமதி சேர்த்துள்ளது.
[illegible] மோட்டார் பவனி [illegible] கத்தில் ஆரம்பித்திருந்தது. நாள் முழுவதும் வெவ்வேறு களிப் பூட்டும் மற்றும் சவால்கள் நிறைந்த போட்டிகளை இந்தநிகழ்வு கொண் டிருந்தது. நீர்கொழும்பு நகரை மையமாகக் கொண்டு இந்த போட்டி இடம் பெற்றிருந்தது. பங்குபற்றியவர் களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன. அவற்றில், வெற்றியாளர்கள், இரண்டாம் மற்றும் மூன்றாமிடங்களை பெற்ற அணியினருக்கு 6 விமான பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டிருந்தன. முதல் பத்து இடங்களைப் பூர்த்தி செய்தவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. சராசரியாக 100 வாகனங்கள் இந்தப் போட்டித் தொடரில் பங் கேற்றிருந்தன. செலான் வங்கியின் அனுசரணையில் சாரதிகளுக்கு அன்பளிப்பு பொதிகளும் வழங்கப் பட்டிருந்தன.
இந்த நிகழ்வில் லீசிங் ஊக்கு விப்புச் செயற்பாடுகளை செலான் வங்கி முன்னெடுத்திருந்தது.
இதன் மூலமாக, வங்கியினால் வழங்கப்படும் பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வையும், வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் லீசிங் சேவைகள் பற்றிய விளக்கங்களையும் வழங்கியிருந்தது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் உழைத்து சேமித்ததை தாருங்கள்!

கார்த்திகேசு இராஜேஸ்வரி ஆகிய நான் பளை அஞ்சலகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சோரன்பற்று உப தபாலகத்தில் உப தபாலதிபராக, 1996.10.05 தொடக்கம் 2014.11.14 வரை 17 வருடங்கள் பல இன்னல்களுக்கு மத்தியில் கடமையாற்றினேன்.
ஆனால் ஒன்பது மாதங்கள் ஆகியும் எனது ஓய்வூதியம் மற்றும் கொடுப்பனவுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனது துணைவரும் நோய்வாய்ப்பட்ட நிலையில் எனது பராமரிப்பில் தங்கி வாழ்கின்றார். அத்துடன் எனது மூன்று பிள்ளைகளையும் கவனிக்க வேண்டிய பொறுப்பும் எனதே ஆகும்.
சம்பளமும் இல்லை. ஓய்வூதியமும் இல்லை. நான் என்ன செய்வது என்ற கேள்விக்குறியில் எனது வாழ்க்கை வந்துவிட்டது. இதுபற்றி நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
ஆனால் என்னுடன் ஓய்வுபெற்ற வேறு திணைக்களங்களில் பணியாற்றியவர்களுக்கு திரட்டிய கொடுப்பனவுடன் ஓய்வூதியமும் கிடைத்துவிட்டது.
எனது குடும்பத்தின் நிலையை எண்ணி அவசரமான முடிவு ஒன்றை நான் எடுப்பதுக்குத் தீர்மானித்துள்ளேன்.
இன்றிலிருந்து சரியாக ஒரு மாதத்துக்குள் எனது ஓய்வூதியம் எனது கைக்குக் கிடைக்காது விட்டால், நானும் குடும்ப அங்கத்தவர்களும் மாற்று வழியொன்றை நாடுவதைத் தவிர வேறு மார்க்கமெதுவும் இல்லை.
நான் உங்கள் பணத்தைக் கேட்கவில்லை. நான் உழைத்து சேமித்துக் கொடுத்த பணத்தைத் தான் கேட்கின்றேன்.
அதன் பிற்பாடு எனது ஓய்வூதியம் யாருக்கு வேண்டும். எங்களுடைய அவலமான முடிவுக்கு உரியவர்கள் தான் பொறுப்புக் கூற வேண்டும்.

**கா.இராஜேஸ்வரி,**
ஓய்வூதியர்.

## தமிழ் தெரிந்த வைத்தியர்களை நியமித்து உதவுங்கள்

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை அமைந்திருப்பது தண்ணீருற்றுக்கு அண்மையில் உள்ள மாஞ்சோலையில் ஆகும். இந்த வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்களில் சிங்கள மொழி பேசுபவர்களே அதிகளவில் உள்ளனர்.
ஆனால். இந்த வைத்திய சாலைக்கு வரும் நோயாளர்களில் 98 சதவீதத்தினர் தமிழ் பேசுவோராக இருப்பதால் வைத்தியர் களுக்கும் நோயாளர்களுக்குமிடையே பெரிய அளவில் மொழிப் பிரச்சினை உள்ளது.
அதாவது நோயாளி சொல்வது வைத்தியருக்கும், வைத்தியர் சொல்வது நோயாளிக்கும் விளங்காவிட்டால் நோய்க்குப் பொருத்தமான மருந்தைப் பெறுவதென்பது சர்ச்சைக்குரிய விடயமாக மாறுவதைத் தவிர்க்க முடியாது.
ஒவ்வொரு வருடமும் பெருந்தொகையான தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக மருத்துவ பீடங்களில் கற்று மருத்துவர்களாக வெளியேறுகின்றார்கள். இவர்களில் சிலரையாவது மாஞ்சோலை வைத்தியசாலையில் பணிக்கு அமர்த்த முடியாமல் இருப்பது ஏன் என்று விசாரித்து அறிய வேண்டும்.
நல்லாட்சி மலர்ந்து விட்டது என்று கூறுகின்றார்கள். ஆகவே தமிழ் எம்.பி.மார் இந்த விடயத்தில் தலையிட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அதிக அளவிலான தமிழ்(பேசும்) வைத்தியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

*– கா.தவபாலன்.*




## ஆதரவு கொடுக்க வேண்டும்

வடபகுதியில் வாக்களித்தவர்களைப் பற்றிப் பலரும் பெருமைப்படுகிறார்கள். இலட்சியமே ஒரே நோக்காய் பல இன்னல்கள் ஊடே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து அந்தக் கட்சியை வெற்றிபெறச் செய்துள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பல குறைகள் விட்டாலும், இந்த நேரத்தில் ஒற்றுமையே தேவை என்பதை உணர்ந்து வீட்டுக்கு வாக்களித்துள்ளார்கள். தன்னலமற்ற உரிமைக்கு உழைக்க கைகொடுத்திருக்கிறார்கள்.
இப்பொழுது இதுவரை காலமில்லாத சாதகமான சூழ்நிலை காணப்படுகிறது. முற்போக்குச் சிந்தனையுள்ள சந்திரிகா, முடியாது என்று அடம்பிடிக்காத ஜனாதிபதி, ஒத்துப்போக நிர்ப்பந்திக்கப்பட்ட பிரதமர் நல் எண்ணமே உருவான சோபித தேரர்அவர்களை நாம் பிரயோசனப்படுத்த வேண்டும்.
திருவாளர் சம்பந்தனும், சுமந்திரனும் வெகுசிறப்பாக தமது பங்களிப்பைச் செய்வார்கள். குமார் பொன்னம்பலமும் அவரது சகாக்களும் உட்பட அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்காமல் இருக்கவேணும்.
இளம் சமுதாயத்தினருக்கு சாத்தியமில்லாத கருத்துக்களை ஊட்டிப் பல கஷ்டங்கள் ஊடே வந்த பயணத்தை நின்று திருப்புகின்றனர் சிலர்.
சுருங்கச் சொன்னால் இந்தக் கட்டத்தில் தலைமைக்குக் கட்டுப்பட வேணும். 1987 இல் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மூலம், கொடுத்தது போதாது என்று அது நிராகரிக்கப்பட்டது. கொடுத்ததை எடுத்து ஒற்றுமையாய் போராட்ட மூலமே முன்னேறலாம். உங்கள் பத்திரிகை சம்பந்தனதும் சுமந்திரனதும் பணிக்கு ஆதரவு ஏற்படுத்த வேணும்.

*– க.வாமதேவன்.*

### கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# எதிர்க் கட்சித் தலைவர் பதவி யார் கைக்கு?

ஜனவரி 8 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த எதிர்பாராத விதமாகத் தோற்கடிக்கப்பட்டு அதிரடியாக ரணில் பிரதமராக்கப் பட்டு நூறுநாள் திட்டத்தை செயற்படுத்த தேசிய அரசு அமைக்கப்பட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி எழுந்தது. தமது உரிமையை விட்டுக்கொடுக்கக்கூடாது என்பதற்காக கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தனும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு உரிமை கோரினார். இந்த சர்ச்சை அப்பொழுது தீர்த்துவைக்கப்படவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் தாமே என்று கூறிய நிமல் சிறிபால டி சில்வா நாடாளுமன்றம் கலைக்கப் படும் வரை தமது உரிமையை விட்டுக்கொடுக்க வில்லை. ஜனாதிபதியும் இது தொடர்பாக முடிவெடுக்க வில்லை.
தற்போது பொதுத் தேர்தலின் பின்னர் மீண்டும் அதே பிரச்சினை உருவாகியிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசு அமைக்க உடன்பட்டிருப்பதால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மீண்டும் சர்ச்சைக்குரிய ஒன்றாக மாறிவிட்டது. ஊடகங்களில் பிரதான இடத்தை இந்த விவகாரம் பிடித்துவருகிறது. தேசிய அரசில் சேராது எதிர்க்கட்சி வரிசையில் இருக்கத் தீர்மானித்துள்ள மகிந்த ஆதரவு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர்கள்தான் எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு உரிமை கோருகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்து வருகிறார்கள். தமது உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப் புத் தலைவர் சம்பந்தனும் தற்பொழுது அப்பதவிக்கு உரிமை கோரியுள்ளார்.
கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அதிகளவான ஆசனங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு இரண்டாவதாக அதிக ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுக்கொண்டது. இந்நிலையில் இரு கட்சிகளும் இணைந்து தேசிய அரசை நிறுவவும் (உண்மையில் ஐ.தே.கவும், ஸ்ரீல சு.கவும் இணைவது தேசிய அரசு அல்ல. மனோகணேசன் கூறியிருப்பது போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கம் வகிக்காத நிலையில் இதனை தேசிய அரசு என்று அழைப்பது கேலிக்கூத்து) அமைச்சுப் பதவிகளைப் பகிர்ந்துகொள்ளவும் இணக் கம் தெரிவித்துள்ள நிலையில் பொதுத் தேர்தலில் 16 ஆசனங்களுடன் அடுத்தபடியாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே அப்பதவி வழங்கப்படவேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு கூட்டமைப்பு ஆசைப்படவில்லை. அப்படியான ஒரு விருப்பம் இருந்திருந்தால் இது தொடர்பான சர்ச்சை கிளம்பியவுடனேயே கூட்டமைப்பு உரிமை கோரியிருக்கும். கூட்டமைப்பு தனக்குள்ள உரிமையை வெளிப்படுத்தவே உரிமை கோருகிறது என்பதே யதார்த்தம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிளவுபட்டு ஒரு பிரிவினர் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் அவர்களும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களே. கட்சி ஒன்று ஆசன வரிசையில்தான் மாற்றம். இதுவே உண்மை.
இப்பிரச்சினையைத் தீர்க்கும் அதிகாரம் தற்பொழுது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த தடவைபோன்று இம்முறையும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி விவகாரத்தில் ஜனாதிபதி உறுதி யாகச் செயற்படுவார்போன்று தெரியவில்லை. ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் போட்டியிட்டு மண் கௌவியவர்கள் தற்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் கண்வைத்துள்ளனர். அப் பதவியைப் பெறுவதற்குப் போராட்டம் நடத்துகிறார்கள். ஜனாதிபதியிடம் தூது செல்கின்றனர். எதிர்க்கட்சி எம்.பிக்கள், எதிர்க்கட்சித் தலைவரைத் தெரிவுசெய்ய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தேசிய சுதந்திர முன்னணித் தலைவர் விமல் வீரவன்ச கூறுகிறார்.
ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடிய இந்த விவகாரத்தில் அரசமைப்புச் சட்டங்களுக்கு அமைய செயற்பட வேண்டியது அவசியமாகும். தேசிய அரசு அமைக்கப்படும் பட்சத்தில் மேலும் பின்னடைவுகளைச் சந்திக்கும், பலமிழக்கும் மகிந்த ஆதரவு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பிக்களின் போராட்டம் ஜனாதிபதிப் பதவியில் இருந்து எதிர்க்கட்சித் தலை வர் பதவிக்கு இறங்கியுள்ளது. இது வெட்கக் கேடானது. எதிர்க்கட்சி எம்.பிக்களிடம் முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்காது ஜனாதிபதி துணிச்சலாகத் தனது முடிவை அறிவிக்க வேண்டும். அது சட்ட ரீதியானதாகவும் நியாயமானதுமாக இருக்க வேண்டும்.

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைக்குமா கூட்டமைப்புக்கு?

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி யாருக்குப் போய்ச்சேரும் என்பது இன்று தெரியவந்துவிடும். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூலம் எப்படியாவது பிரதமர் பதவியில் அமர்ந்துவிடலாம் என்று படாதபாடுபட்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, அந்தக் கனவு பலிக்காத நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும்கூட வேண்டாம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு, சாதாரண உறுப்பினராக சபையில் அமர்வதற்கு முடிவெடுத்திருப்பதாகத் தெரியவந்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களில் பலரும், அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரையை ஏற்றுக்கொண்டு ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையிலான ஐ.தே.க. அரசில் இணைந்து கொள்ள உள்ளனர். அந்தக் கட்சியின் உறுப்பினர்களில் ஒருவர் என்ற முறையில் ராஜபக்சவும் அரசில் இணைந்து செயற்பட வேண்டும்.

அவ்வாறு நிகழுமானால், அது அவருக்கு ஒரு தர்மசங்கடமான நிலைமையையே ஏற்படுத்தும்.

தமக்கு எதிரான பல்வேறு குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுவதற்கும், விசாரணைகளை எதிர்கொள்ளும் உறவினர்கள், சகபாடிகள், பங்காளிகள் அனைவரையும் விடுவிப்பதற்கும் பிரதமர் பதவி, அவருக்குப் பெரும் உதவியாக இருந்திருக்கும். சீனாவின் தயவில் பெரும் தொகை முதலீடுகளைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் வழி பிறந்திருக்கும்.

அவையாவும் தவிடுபொடியான நிலையில், தம்மைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தக் கங்கணம் கட்டிக் கொண்டுள்ள ஒரு கட்சித்தலைவரின் கீழ், வெறும் சாதாரண உறுப்பினராகச் செயற்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதை அவர் விரும்புவாரா என்பதை இப்போது கூறஇயலாது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்து தமக்கு ஆதரவான சிலரை இணைத்துக்கொண்டு புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கும் நிலையில் இருக்கிறாரா என்பதும் வெளிப்படையாகத் தெரியவில்லை.

தம்மீதும் குடும்பத்தினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவித்துக்கொள்ளவே, பிரதமர் ரணிலோடும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோடும் அவர் இரகசியத் தொடர்புகளை மேற்கொண்டதாகவும் உறுதிப்படுத்தப்படாத செய்திகள் ஏற்கனவே வெளியாகி இருந்தன.

இந்தப் பின்புலத்திலேயே, எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான சர்ச்சைகள் கிளம்பியுள்ளன. வழமையாகவே இனவெறுப்பை வெளிப்படுத்தி வருகின்ற பலர் அந்தப் பதவி தங்களுக்கு வரவேண்டும் என்று கூறிவந்தார்கள். இன்னும் சிலர் எந்தக்காரணம் கொண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அது வழங்கப்படலாகாது என்றார்கள். இப்பொழுது வழக்கமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருபவரான முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ அந்தப் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு முறைப்படி கிடைத்தால் ஆட்சேபனை கிடையாது என்கிறார்.

பொதுவில் தேர்தலில் பெரும்பான்மை உறுப்பினர்களை பெறுகின்ற கட்சியே அரசமைக்க உரித்துடைமை கொண்டிருக்கும்போது, எதிர்த்தரப்பில் பெரும்பான்மை கொண்டுள்ள கட்சிக்கே எதிர்க்கட்சித்தலைவர் பதவி வழங்கப்படுவது நியாயமாகும். ஆக, ஐ.தே.கவும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அரசமைக்கும் நிலையில் எதிர்த்தரப்பில் பெரும்பான்மையைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டுவதே நியாயம்.


இந்த நிலையில், அந்தப் பதவிக்கான கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்திருப்பது பொருத்தமாகவே தென்படுகின்றது. அவ்வாறு கோரிக்கை விடாத பட்சத்தில் இதில் அவர்களுக்கு அக்கறையில்லை என்று ஓரங்கட்டப்படுவது ஒருபுறமிருக்க, நாட்டின் அரசமைப்புக்கேற்ப நமக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்களை வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விடுவது தவறாகிவிடும் அல்லவா...?

இப்போதைய இணைப்பாட்சி, இரண்டு ஆண்டு காலத்துக்கே நீடிக்கும் என்பதாலும் இலங்கை அரசின் நல்லிணக்க சமிக்ஞைகளை அனைத்துலகம் உன்னிப்பாக அவதானித்து வருவதாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கிடைப்பது சாத்தியமாகத் தென்படுகின்றது.

அரசில் இணைந்து செயற்படுவதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்று செயற்படுவதற்கும் மிக நிறையவே வித்தியாசமுண்டு. எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் நலன்களுக்கு ஓங்கிக் குரல் கொடுக்க உதவும். அதனூடு தமிழ் மக்களுக்குச் சேரவேண்டிய பறிக்க முடியாத உரிமைகளை அனைத்துலகத்துக்கு விரித்து, விளக்கி புரிந்திடச் செய்யவும் இயலும்.

# உள்ளக விசாரணை தமிழர்களுக்கு விழுந்த முதல் அடி





● வந்தியத்தேவர்

> ஐ.நா. மனித உரிமை மன்றத்தின் செப்ரெம்பர் அமர்வில் இலங்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் கொண்டுவர இருக்கும் அமெரிக்க அரசின் அறிவிப்பு தமிழர்களுக்கு எதிரான ஒன்றாகவே உள்ளது. மகிந்த மீதான விசாரணை தேவையில்லை, உள்ளூரளவிலான விசாரணைபோதும் என்ற தீர்மானத்தை அது கொண்டுவரப் போகின்றது.

இலங்கையில் இடம் பெற்ற இறுதிப்போரில் மிகப்பெரிய அளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக சர்வதேசமே ஒப்புக்கொண்டுள்ளது. இது குறித்து சர்வதேச விசாரணைக்கு விரிவான முறையில் இடமளிக்கக் கோரி இலங்கைக்கு எதிராக 2014ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஐ.நா. மனித உரிமைப்பேரவையில் அமெரிக்கா சார்பில் பிரேரணை கொண்டு வரப்பட்டது. இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவில்லை என்பதை மறை முகமாக உணர்த்தும் வகையில் அது வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை. எனினும் அமெரிக்கவின் இந்தப்பிரேரணைக்கு இருபத்து மூன்று நாடுகள் தமது ஆதரவை வழங்கியிருந்தன.

அமெரிக்காவின் இந்த நடவடிக்கையை அனைத்துத் தமிழ் சமூகமுமே நன்றியோடு ஒப்புக்கொண்டது. இறுதிப்போரில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற சம்பவங்கள் எவராலுமே ஏற்றுக்கொள்ள முடியாதவை. அப்போதைய ஜனாதிபதி மகிந்த தமிழினத்தை அழிக்க வேண்டும் என்ற முனைப்புடன் நடத்திய போர் இது. போர் நெறி முறைகளுக்கு மாறாக இடம்பெற்ற இந்தப் போரில் சரணடைய வந்தவர்கள் கூட படையினரின் மூர்க்கத்தனத்துக்கு இரையாகியிருந்தனர். போர் முடிவுற்றதும் அது குறித்த சர்வதேச விசாரணை தேவை என்பதை தமிழ் மக்கள் வலியுறுத்தியதில் சர்வதேச விசாரணைக்கான முன்னெடுப்புக்கள் இடம்பெற்றன.

எனினும் சர்வதேச விசாரணையை தென்பகுதி அரசியல்வாதிகள் முற்றாக விரும்பவில்லை என்பது ஒன்றும் புதுமையல்ல. போர்க்குற்றம் எவ்வளவு மோசமானது ஓர் இனத்தையே பாதித்துள்ளது என்பதைத் தெரிந்து வைத்திருந்தாலும்கூட, தமது அரசியல் சகாக்களான முன்னைய அரசுத் தலைவர், அவருக்கு ஆதரவளித்தவர்கள், முக்கிய படை அதிகாரிகள் பெரும்பான்மை இனத்தவர்கள் என்பதால் போர்க்குற்றங்களில் இருந்தும் சர்வதேச விசாரணைகளில் இருந்தும் சம்பந்தப்பட்டவர்களை பாதுகாப்பதற்காக இன்றைய அரசுத்தலைவர்கள் சர்வதேச விசாரணையை எதிர்க்கத்தான் செய்வார்கள். ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் சமயத்திலும் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகள் இடம்பெற ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்பதை வலியுறுத்தியே பரப்புரை நடவடிக்கைகள் இடம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. மோசமாக இடம்பெற்ற போர்க்குற்றம் குறித்த விசாரணையை நடத்த மனித உரிமை ஆணையம் தீர்மானித்த போது அதற்கு முழுமையான காரணமாக இருந்த அமெரிக்கா இப்போது தனது அணுகுமுறையை மாற்றிக்கொண்டு ஆரம்பத்தில் இருந்த நிலையில் இருந்து தற்சமயம் பின்வாங்கியுள்ளது. அதற்குக் காரணம் மகிந்தவின் தோல்வியும் மைத்திரியின் வெற்றியுமே ஆகும். மகிந்த அரசு சீன சார் புத்தளத்தில் நின்றதனாலேயே அமெரிக்கா கடந்த அரசில் இடம் பெற்ற போர்க்குற்ற விசாரணைகளில் தமிழ் மக்கள் சார்பான நிலைப்பாட்டை எடுத்திருந்தது. தற்சமயம் மைத்திரிபால சிறிசேனவின் சீன அரசுச் சார்பு சிறிது தளர்வு கொண்டுள்ளதால் அமெரிக்கா இலங்கை அரசுக்கு சார்பாக தமிழர்களுக்கு மாறான வகையில் சர்வதேச விசாரணைகளுக்கு எதிராகத் திரும்பியுள்ளது. அமெரிக்க சீன ஆதிக்கப் போட்டியில் தமிழர்கள் பகடைக் காய்களாக்கப்பட்டுள்ளனர். முன்னர் இடம்பெற்ற போர் படுகொலைகளுக்கு இந்தியா, அமெரிக்கா போன்றவையும் தமது பங்களிப்பை வழங்கத் தவறவில்லை என்பது ஒன்றும் மறுக்க முடியாததல்ல.

ஐ.நா. மனித உரிமை மன்றத்தின் செப்ரெம்பர் அமர்வில் இலங்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் கொண்டு வர இருக்கும் அமெரிக்க அரசின் அறிவிப்பு தமிழர்களுக்கு எதிரான ஒன்றாகவே உள்ளது. மகிந்த மீதான விசாரணை தேவையில்லை. உள்ளூரளவிலான விசாரணை போதும் என்ற தீர்மானத்தை அது கொண்டு வரப் போகின்றது. இலங்கை விவகாரம் தொடர்பில் அனைத்துலக விசாரணை மிகவும் அவசியம் என வலியுறுத்தி மனித உரிமை ஆணைக் குழுவில் மூன்று பிரேரணைகளைச் சமர்ப்பித்திருந்த அமெரிக்கா இப்போது இலங்கை அரசைத் தனது சார்பாக வைத்திருக்க வேண்டும் என்பதற்காக ஏற்கனவே சமர்ப்பித்திருந்த நேர்மையான கோரிக்கையைப் புறந்தள்ளியபோதும் தான் தமிழ் மக்களைக் கைவிடவில்லை என தமிழர்கள் கருதவேண்டும் என்பதற்காக உள்ளக விசாரணை குறித்த அறிக்கையில் கூறப்படும் பரிந்துரைகளை நிறைவேற்றவேண்டும் என இலங்கை அரசிடம் கோரியுள்ளது. இப்போது பிரச்சினைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் சர்வதேச விசாரணை ஏற்கனவே முடிவு செய்யப்பட்டது போன்று இடம்பெற வேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களுக்கு உரிய நீதி கிடைக்கும். தமிழர்கள் சர்வதேச விசாரணையையே வலியுறுத்துகின்றனர். தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும் சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமே தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்கும் என நம்புகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது விடயத்தில் சர்வதேச விசாரணையே தமது கோரிக்கை எனத் தெரிவித்த போதும், அமெரிக்க அறிவிப்பை அடுத்து தமது இறுக்கமான பிடியில் இருந்து சற்றுத் தளர்ந்துள்ளது போன்றே தென்படுகின்றது. தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலர் சர்வதேச விசாரணையையே வலியுறுத்தி வருவதாகக் கூறிவரும்போதும் தலைவர்கள் மட்டத்தில் தளர்ச்சியே தென்படுகின்றது. தமிழ் மக்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக போர்க்குற்ற விசாரணையில் விட்டுக்கொடுப்பை முன்வைத்து அரசிடம் நல்ல பிள்ளைகளாக நடந்து தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நோக்கில் இந்த அடக்கி வாசிப்போ தெரியவில்லை.

எது எப்படியானாலும் தமது சகாக்களைக் காப்பாற்ற எடுக்கப்பட்ட விடயமே இந்த உள்ளக விசாரணை. அதற்காக அமெரிக்காவையும் விலை கொடுத்து வாங்கியுள்ளனர். சர்வதேச விசாரணையின் ஊடாக தமக்குச் சரியான நீதி கிடைக்கும் என்று நம்பிக்கொண்டு ஆதரவளித்த தமிழர்களுக்கு விழுந்த அரசின் முதலாவது அடி உள்ளக விசாரணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மதுவிலக்குப் போராட்டங்கள்... ஜெயலலிதாவை வீழ்த்தப்போகும் எதிர்க்கட்சிகளின் இறுதி அஸ்திரமா?

காங்கேசனூர்
ஆர். விஜய்

**ஆர்.** கே.நகர் இடைத் தேர்தல் வெற்றி முதல்வர் ஜெயலலிதாவுக்கும், அ.தி.மு.கவினருக்கும் 2016 இல் நடைபெறப்போகின்ற சட்ட மன்றத் தேர்தல் வெற்றி பற்றி அளவு கடந்த நம்பிக்கையைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எவருமே அசைக்க முடியாத இடத்தில்தான் தாம் உள்ளோம் என்று அ.தி.மு.கவினர் நினைத்துக் கொண்டிருக்கையில் தான் எவரும் எதிர்பாராத விதமாக தமிழகத்தில் வெடித்துள்ள மது விலக்குப் போராட்டங்கள் முதல்வர் ஜெயலலிதாவை ஆட்டம் காணவைத்து விட்டது என்ப தில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. இதனை விட்டால் வேறுவழி ஜெயலலிதாவை வீழ்த்த இல்லை. கிடைக்காது என்று கருதி சகல எதிர்க் கட்சிகளும் களத்தில் குதித்து மது விலக்கு போராட்டங்களை முன்னெடுத்திருப்பது தான் தமிழக அரசியலின் தற்போதைய சூடான விடயம்.

**ஏன் இந்த மதுவிலக்கு?**

உலக அளவில் மனிதனையும் – மனித வாழ்க்கையையும் சீரழித்துக் கொண்டிருக்கின்ற ஒரு விடயம் என்றால் அது போதைக்குள் உள்ளடங்கும் மதுப்பாவனையே ஆகும். ஆனால் இது மேற்குலக நாடுகளில் கனவான் தன்மையோடு (?) தான் இடம்பெற்று வருகின்றது. ஆனால் கீழைத்தேச நாடுகளில் இந்த மதுப் பழக்கம் தரம் இறங்கித் தாழ்ந்து கிடக்கிறது. அதுவும் தமிழ் நாடு போன்ற அன்றாட வருமானத்துக்கே அல்லாடும் வர்க்கத்தினரிடம் இந்த மதுப்பாவனை போய்ச் சேர்ந்திருப்பதுதான் கொடுமையிலும் கொடுமை. உழைக்கும் பணத்தை அப்படியே மதுபானக் கடைகளில் கொட்டி, குடும்பம் பற்றியோ, மனைவிபற்றியோ, பிள்ளை கள் பற்றியோ சிறிதும் சிந்திக்காமல் குடித்து முடித்து விட்டு போதாக் குறைக்கு மனைவியின் சேமிப்பு, அவளது தாலி எனக் கைவைக்கும் அவலம் தமிழ் நாட்டில்தான் அதிகம் காணும் காட்சிகளாக இருக்கின்றன. அது மட்டுமல்ல மதுப்பாவனையின் உச்சமாக இரண்டு, மூன்று வயதுச் சிறுவர்களுக்கும் மதுவைப் பழக்கும் காட்சி இணையத் தளங்களில் வெளிவந்திருப்பதுதான் மதுவிலக்குப் போராட்டங்கள் தமிழகத்தில் சூடு பிடிக்கக் காரணங்கள் ஆயின. கொந்தளிப்பையும் உருவாக்கின.

> மதுவிலக்குப் போராட்டங்களை கையில் எடுத்து எதிர்க்கட்சிகள் அவற்றை அரசியலாக்கி வருகையில் தனக்கு குழிபறிக்கப்படுகிறது என்று தெரிந்திருந்தும் அதனைச் சாதுரியமாக முறியடிக்க முயலாமல் காவல்துறையினரை காட்டுத்தர்பார் செய்ய அனுமதித்திருப்பது தான் ஏன் என்று புரியவில்லை. காவல்துறையினரும் மக்கள் மீது கட்ட விழ்த்து விட்டுள்ள காட்டுத்தர்பார் காட்சிகள் மனங்களைப் பதற வைக்கிறது.

**சசிபெருமாளும் - பா.ம.கவும்**

ஆரம்பத்தில் தமிழகத்தில் மது விலக்குப் பற்றி அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கருத்துக்கள், வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டனவே ஒழிய பெரிய அளவில் இப்படியான, இப்போது நடைபெறும் போராட்டங்கள் போல நடைபெறவில்லை. ஆனால் இந்த மது விலக்குக் கோரிக்கைகளும் போராட்டங்களும் வலுக்கக் காரணமானவை காந்தியவாதி சசி பெருமாளின் இறப்பும், பாட்டாளி மக்கள் கட்சியின் மது எதிர்ப்பு பரப்புரைக் கூட்டங்களும் தான். சசிபெருமாள் ஒரு காந்திய வாதி. வீட்டில் சமைப்பதற்குக்கூட உணவுப்பொருள்கள் இல்லாவிட்டாலும், அவர் அதைப்பற்றி கவலைப்படுவது இல்லை. எங்கு நாட்டுக்காகப் போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுகிறதோ அங்கே அவரைக் காண முடியும். அதிலும் குறிப்பாக காந்தியின் மது ஒழிப்புக் கொள்கையை இடைவிடாமல் வலியுறுத்தி வந்தவர், உண்ணாவிரதம் கூட இருந்தவர். இப்படிப்பட்ட காந்தியவாதியான சசிபெரு மாள் மதுவிலக்குப் போராட்டம் ஒன்றுக்காக தொலைத்தொடர்புக் கோபுரத்தில் ஏறிநின்ற போது மர்மமான முறையில் கொல்லப்பட்டமைதான் தீக்குச்சியைத் தட்டிப் போட்டது போல தமிழகத்தில் போராட்டத்தீயை பற்ற வைத்திருக்கிறது.

அத்தோடு பாட்டாளி மக்கள் கட்சி, டாக்டர் அன்பு மணி ராமதாசை முதல்வர் வேட்பாளராக அறிவித்து தொடங்கிய பரப்புரைச் சூறாவளியும் தான் மதுவிலக்குக் கோரிக்கையை வலுப்பெறச் செய்தது. ஏனெனில் பாட்டாளி மக்கள் கட்சியின் பரப்புரைமையமாக விளங்கியதே இந்த மது விலக்குப் பரப்புரைதான். இதை முதலில் ஜெயலலிதாவோ ஏனைய எதிர்க்கட்சிகளோ பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக பா.ம.கவின் அளவுக்குமீறிய ஆசையே இது என்று நமட்டுச் சிரிப்பு சிரித்தன. ஆனால் போகப் போக பா.ம.கவின் பரப்புரை மேடைகளின் முன்னால் திரண்ட மக்கள் கூட்டம் கண்டு அனைவருமே திகைத்து நிற்கையில் தான் சசிபெருமாள் கொலை அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அவல் கிடைத்தது போலாகி களத்தில் இறங்கிவிட்டன. (உண்மையில் சசிபெருமாளின் கொலையும் பாட்டாளி மக்கள் கடசியின் போராட்டங்களும் தான் மது விலக்குப் போராட்டங்களின் அத்தி பாரம் என்றால் அது மிகை யில்லை.)

**எதிர்க்கட்சிகளின் போராட்டங்கள்**

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதனை அரசியல் ஆக்கிய கட்சி என்றால் அது தி.மு.கதான். மது விலக்குப் போராட்டங்களுக்கு மக்களே வீதிகளில் இறங்கிவிட்டதால் கலைஞர் மு.கருணாநிதி ஓர் அறிவிப்பை வெளியிட்டார். தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் பூரண மதுவிலக்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று. அதுமட்டுமல்லாது சசிபெருமாளின் இறுதிச் சடங்குக்கு தன் மகனும் தி.மு.கவின் பொருளாளருமான மு.க. ஸ்டாலினையும் அனுப்பி வைத்து தன் பங்குக்கு வாக்குகளை இழுக்க முற்பட்டுள்ளார். மேலும் வைகோவின் சொந்த ஊரான கலிங்கப்பட்டியில் அவரது தாயார் தலைமையில் நடைபெற்ற மது விலக்குப் போராட்டமும் தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்ற வணிகர்களின் கடையடைப்பும் மதுவிலக்கை வலியுறுத்திய எதிர்க்கட்சிகளின் போராட்டங்கள் ஆகும். இதற்கிடையில் தே.மு.தி.கவினர் விஜயகாந் தலைமையில் நடத்திய போராட்டமும், பா.ஜ.க. தன்பங்குக்கு தனித்து ஓகஸ்ட் 11 இல் நடத்திய மது ஒழிப்புப் போராட்டதும் ஜி.கே.வாசன் தொடங்கியுள்ள ஒரு லட்சம் கையெழுத்துப்பெறும் போராட்டமும் எதிர்க்கட்சிகளின் இய லாத்தனத்தையும் இதைவிட்டால் ஜெயலலிதாவை வீழ்த்த வழியில்லை என்று அவர் கள் யோசிப்பதையும் எடுத்துக் காட்டுகின்றன. சில வேளை களில் இந்தச் சம்பவங்களே ஜெயலலிதாவின் வீழ்ச்சிக்கும் வழி கோலுவதற்கான காரணமாகவும் அமையலாம்.


**ஜெயலலிதாவின் பிடிவாதம்**

மதுவிலக்குப் போராட்டங்களை கையில் எடுத்து எதிர்க்கட்சிகள் அவற்றை அரசியலாக்கி வருகையில் தனக்கு குழிபறிக்கப்படுகிறது என்று தெரிந்திருந்தும் அதனைச் சாதுரியமாக முறியடிக்க முயலாமல் காவல்துறை யினரை காட்டுத்தர்பார் செய்ய ஜெயலலிதா அனுமதித்திருப்பதுதான் ஏன் என்று புரியவில்லை. காவல் துறையினர் மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள காட்டுத்தர்பார் காட்சிகள் மனங்களைப் பதற வைக்கிறது. ஜெயா மீது மக்கள் வெறுப்புக் கொள்ளவும் காரணமாகவும் அமைகிறது. அதிலும் மாற்றுத் திறனாளிகள் மீது நடத் திய தாக்குதல், வைகோவின் தாயார் கலிங்கப்பட்டியில் நடத்திய போராட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் இவை எல்லாம் ஜெயலலிதாவின் பிடிவாதக் குணத்தையே கோடுகாட்டுகின்ற நிகழ்ச்சிகள். ஏனெனில் மது விலக்கு என்பது முடியாத காரியம் இல்லை. அண்டை மாநிலமான கேரளாவில் கூட மதுவிலக்கு படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இந் தப் பிரச்சினையை ஜெயலலிதா நினைத்தால் ஓரிரு நாளிலேயே முடிவுக்குக் கொண்டு வரலாம். எப்படியெனில் மது விலக்கை நடைமுறைப்படுத்துவோம். அதுவும் படிப்படியாக என்று ஓர் அறிக்கை விட்டாலே போதும். கட்சிகளும், மக்களும் அமைதியாக விடுவார்கள். அல்லது அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி முடிவு எடுப்பது. ஆனால் இந்த இலகுவான வழியை விட்டு ஜெயாவின் அரசு அடக்குமுறைகளைக் கையாள்வது மக்கள் மத்தியில் பல சந்தேகங்களை எழுப்பியுள்ளது. அவற்றுள் ஒன்று மது விலக்கை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்தால் அது தங்களுக்குப் பாராட்டைப் பெற்றுத் தராது என்றும், அது வேறு ஒரு கட்சிக்கு வாய்பாகி விடும் என்று நினைப்பது அத்தோடு மதுவுக்கான வரி விதிப்பால் பெறும் 30 ஆயிரம் கோடிகளை இழக்க விரும்பவில்லை என்பது இது உண்மையானால் இந்தப் பிரச்சினை இன்னமும் தொடருமானால் மக்கள் போராட்டங்களும் தொடர்ந்தால் 2016 சட்டமன்றத் தேர்தலில் முதல்வர் ஜெய லலிதா நினைப்பவை நிறைவேறா மலே போய்விடலாம்.

கூழும் குடியும் ஒருங்கு கிழக்கும் – கோல்கொடி குழாது செய்யும் அரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாமரைப் பூவின் மருத்துவம்



தாமரை பூ போலவே அதன் தண்டுகளும் பல்வேறு மருத்துவ குணங்கள் நிறைந்தவை. தாமரைக் கிழங்குகள் என்று அறியப்படும் இதில் உடலுக்குத் தேவையான கலோரிகள் அதிக அளவில் உள்ளன. உதாரணமாக:- 100 கிராம் தாமரைக் கிழங்கில் 74 கலோரிகள் அடங்கியுள்ளது. ஏராளமான சத்துக்கள் , தனிமங்கள் மற்றும் விற்றமின்களான 'பி'6, 'சி' தாமரை கிழங்கில் நிறைந்துள்ளன. மனிதர்களின் தினசரி உணவுப் பட்டியலில் கட்டாயம் இருக்க வேண்டிய விற்றமின் சி இந்தத் தாமரைக் கிழங்கில் மிகுதியாக உள்ளது. இதனுடன் உடலுக்குத் தேவையான இரும்புச் சத்து, கந்த கச் சத்து போன்றவைகளும் அடங்கியுள்ளன.

பொதுவாகத் தாமரையைப் போலவே தாமரைக் கிழங்குகளும் கசப்பாக இருப்பதால், இதனை வேக வைத்து சூப்புகளில் சேர்த்துக் குடிக்கலாம். மேலும் தாமரைத் தண்டுகளில் செய்யப்படும் வடை சுவையாகவும் , மருத்துவ தேவைகளைச் சமாளிப்பதாகவும் உள்ளது. தாமரைக் கிழங்குத் துண்டுகளுடன் வெள்ளைப் பூண்டு இஞ்சி, மிளகாய் ஆகியவற்றைக் கலந்து எண்ணெயில் பொரித்தும் சாப்பிடலாம். குறிப்பாகப் பெண்கள் தாமரைத் தண்டின் கணுக்களைச் சாப்பிடுவது நல்லது . ஏனென்றால் கருப்பையில் இருந்து குருதி கொட்டுவதை இது கட்டுப்படுத்துகின்றது. மேலும், சிறு நீரிலும் மலத்திலும் குருதி கலந்து வருவதும், இரத்த வாந்தியும் நிறுத்தப்படுவதற்கு தாமரைத் தண்டின் கணுக்களை வெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிடலாம்.

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பிறருடைய சமயங்களில் பரிவு காட்டவேண்டும்

நாம் செல்வச் செழிப்போடு வாழ்ந்தாலும், இறந்து விட்டபின் இவை நம்முடன் வருமா? நாம் அழியும் செல்வத்தைச் சேர்க்க நினைப்பதைவிட அழியாத ஒன்றைப் பெறுவதுதான் ஆண்மைக்கு அழகு.

செல்வத்தைக் கொண்டு ஒரு மனிதனை மதிப்பவனை விட, அரசனையும், ஆண்டியையும் ஒன்றாக நினைத்து வாழும் துறவிகளின் வாழ்வே சிறந்தது.

மக்கள் எவராயினும் சகிப்புத் தன்மையோடு, பிறருடைய சமயங்களில் பரிவு காட்டவேண்டும்.

மதங்கள் எல்லாமே உண்மையானவை தாம்! ஆனால், ஒரு மதத்திலிருந்து வேறொரு மதத்துக்கு மக்களை மாறச்செய்வது பொருளற்றது. ஒவ்வொருவருக்கும் தத்தமது மதங்களில் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதே குறிக்கோளாக இருக்க வேண்டும்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 550 | 700 | 800 | 700 | 600 | 650 |
| நண்டு | 300 | 400 | 400 | 400 | 400 | 400 |
| கணவாய் | 600 | 600 | 700 | 600 | 500 | – |
| பாரை | 550 | 600 | 600 | 700 | 800 | 440 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 700 | – |
| சீலா | 250 | 500 | 400 | 500 | 500 | 350 |
| விளை | 600 | 500 | 450 | 500 | 600 | 400 |
| முரல் | 300 | 400 | 300 | 450 | 500 | – |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | – | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | 700 | 450 | – | – |
| ஒரா | 400 | 400 | 300 | 300 | – | 300 |
| திரளி | 250 | 300 | 200 | 250 | 100 | – |
| நகரை | 200 | 300 | 300 | 400 | 150 | 300 |
| சூடை | 150 | 200 | 130 | 200 | 100 | 80 |
| ஒட்டி | 300 | 300 | 300 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 350 | 300 | 150 |
| பாலை | 350 | 300 | 400 | 400 | 300 | – |
| வாளை | 100 | 200 | – | 300 | 200 | 300 |
| கொய் | 100 | 200 | 150 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 300 | – | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 50 | 60 | 60 | 80 | 50 | 30 |
| கத்தரி | 100 | 100 | 100 | 100 | 80–90 | 60 | 80 | 40–50 |
| கரட் | 140 | 160 | 120–160 | 100 | 100–150 | 200 | 120 | 100 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 40 | 40–50 | 60 | 80 | 40 |
| பயிற்றை | 100 | 60 | 60 | 80 | 80–90 | 120 | 100 | 80 |
| பாகல் | 80 | 120 | 80 | 100 | 120–140 | 200 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100–120 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 100 | 100 | 100–110 | 140 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 70 | 100 | 80–100 | 90 | 70–100 | 120 | 100 | 60–70 |
| பூசணி | 40 | 40 | 30 | 30 | 30 | 60 | 60 | 25–30 |
| தக்காளி | 90 | 120 | 80 | 60 | 70–80 | 120 | 100 | 55 |
| வாழைக்காய் | 60 | 50 | 60 | 60 | 60 | 80 | 60 | 70 |
| கீரை | 25 | 30 | 30 | 10 | 25 | 40 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 25 | 30 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 180 | 150 | 200 | 80 | 120–140 | 100 | 120 | 100 |
| புடோல் | 40 | 40 | 40 | 30 | 50–60 | 80 | 80 | 40 |
| கோவா | 70 | 100 | 40 | 60 | 70–80 | 100 | 100 | 40–50 |
| வெண்டி | 40 | 40 | 30 | 30 | 60–70 | 80 | 60 | 25 |
| போஞ்சி | 150 | 160 | 160 | – | 160 | 120 | 180 | 160 |
| லீக்ஸ் | 90 | 120 | 80 | 80 | 80 | 120 | 100 | 170 |
| தேங்காய் | 90 | 50 | 50 | 50 | 50–60 | 40 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 | 100 | 90 | 90–120 | 90 | 90–100 | 100 |
| தேசிக்காய் | 80 | 100 | 140 | 80 | 70 | 150 | 140 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 30 | 20 | 08 |
| கறிமிளகாய் | 120 | 110 | 120 | 80 | 140–160 | 140 | 150 | 100 |
| இராசவள்ளி | 200 | – | – | 160 | 90–100 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 160 | 160 | 60 | 100 | 100 | 120 | 80–90 |

## நாளை

ஆவணி-16

புதன்கிழமை

02.09.2015

*திதி: சதுர்த்தி பி.ப.03.48 வரை*

*நட்சத்திரம்: ரேவதி மு.ப.10.30 வரை*

*சுபநேரம்: 04.35–06.05 வரை*

*இராகுகாலம்: 12.05–01.35 வரை*

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 5 | | | | 3 | 6 |
| | 3 | | 8 | | | | 9 | |
| | | 7 | | | 4 | 5 | | |
| 7 | | | | 1 | 5 | | | |
| | 6 | 3 | | | | 9 | 5 | |
| | | | 2 | 3 | | | | 1 |
| | | 2 | 7 | | | 8 | | |
| | 7 | | | | 8 | | 4 | |
| 5 | 8 | | | | 9 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 9 | 4 | 8 | 5 | 6 | 1 | 2 |
| 2 | 1 | 5 | 7 | 6 | 9 | 8 | 3 | 4 |
| 8 | 6 | 4 | 2 | 1 | 3 | 9 | 5 | 7 |
| 6 | 5 | 2 | 9 | 3 | 4 | 7 | 8 | 1 |
| 7 | 3 | 8 | 6 | 2 | 1 | 5 | 4 | 9 |
| 4 | 9 | 1 | 5 | 7 | 8 | 2 | 6 | 3 |
| 5 | 2 | 3 | 8 | 4 | 7 | 1 | 9 | 6 |
| 1 | 8 | 6 | 3 | 9 | 2 | 4 | 7 | 5 |
| 9 | 4 | 7 | 1 | 5 | 6 | 3 | 2 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# P ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்

**பிறருக்கு உதவும் எண்ணம் கொண்டவர்கள்– P**

பிறருக்காகவே வாழ்நாள்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் P என்ற எழுத்தைக் கொண்டவர் கள், எதிலும் இறுதி வரை போராடிப் பார்க்கும் குண முள்ளவர்கள், இளவயதிலேயே பொறுப்புகள் தலை மேல் வந்து வீழ்வதால் குடும்பச் சுமையைத் தாங்க வேண்டிய நிலை ஏற்படும். தீட்டும் திட்டங்கள் அவ் வப்பொழுது தடைபட வாய்ப்புண்டு. ஆனால், இடை விடாது உழைப்பர். இந்த எழுத்துகளில் பெயர் தொடங்குவோர், தொழிற்சாலைகளில் பணிபுரிந்தால், உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காது. பிறர் துன் பத்தை தனக்கு வந்தது போல் நினைத்து அவர்களுக்கு உதவுவர். தற்போதைய நிலையை விட உயர வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். அன்பான இவர் களுக்கு அடிக்கடி துன்பங்கள் வந்து ஒரு மகானைப் போன்று மனதை மாற்றிவிடும். அவரவர் சூழ் நிலை யைட் பொறுத்து தெய்வீகத்தில் அதிகபட்ச நம் பிக்கை அல்லது நம்பிக்கை குறைவு கொண்ட வர்களாக இருப்பர். அனைத்துத் துறையிலும் ஆர்வமாக உழைப்பர். இவர்களிடம் மன உறுதி பெற்றவர்களை நோக்கி நல்ல நேரம் தேடிவரும். எங்கு பணியாற்றினாலும் அங்கு இவர்கள் தான் ஆதிக்கம் பெற்றிவராயிருப்பர். பல பேருக்கு உதவிக்கரமாக இருக்கும் இவர்களுக்கு, யாருமே உதவமாட்டார்கள். சட்டத்துக் குப் புறம்பான வழிகளில் சென்று பணம் பெறலாம் என்று துர்போதனை கூறும் நண்பர்கள் சில வேளைகளில் மாட்டிக் கொள்வதும் உண்டு. மனம் ஒரு நிலைப் படாமலும், முடிவெடுக்க முடியாமலும் பல காரியங்கள் சிதைந்து போகலாம். யாரு டனும் நெருங்கிப் பழகமாட்டார்கள். வாக னங்களில் செல்லும்போது அடிக்கடி சிக் கல் அல்லது விபத்தில் மாட்டிக் கொள்வர். பொருள் விரயம் அடிக்கடி ஏற்படுவதால் மனம் சஞ்சலமடையும், சாஸ்திர, சம் பிரதாயங்கள் அத்துப்படி. ஆனால், முற் போக்குவாதி போல் தன்னைக் காட்டிக் கொள்வர். இரும்பு சம்பந்தமான துறை, மருத் துவம், சினிமா, எண்ணெய், பெற்றோல், இர சாயனம் போன்ற துறைகள் இவர்களுக்கு ஏற்றவை. இவற்றில் ஈடுபட்டால் பெரும் பொருள் சேர்ப்பர். அழகான தோற்றமிருந்தும் இவர்க ளுக்கு இளவயதில் திருமணம் நடப்பதில்லை. போதை வஸ்துகளுக்கு அடிமையாகும் வாய்ப்பு சுலபமாகக் கிடைக்கும். கவனம் தேவை. ஏதே னும் ஒரு காரியத்தை பகீரதப் பிரயத்தனம் செய்து முடித்தவுடன் அடுத்த பிரச்சினை தலை தூக்கும். வாழ்வில் இன்பங்களை விடத் துன்பங்களைக் களைவதற்கே அதிக நேரம் எடுத்துக் கொள்வர். சாதாரண காரியங்களைக் கூட அதிக முயற்சி செய்தால்தான் முடிக்க முடியும். சிறந்த நிர்வாகத் திறமை பெற்ற இவர்களை மற்றவர்கள் கண்டு கொள்வதே இல்லை. இவர்கள் 8, 17, 26 திகதி களில் பிறந்திருந்தால், கடும் மன உளைச் சலுக்கு உள்ளாவதும், இளவயதில் பெற்றோரின் அரவ ணைப்பு இல்லாமல் போவதும், தொழிலில் இருப் போருக்கு நிர்வாக தொந்தரவுகளும் வழக்குகளும், கல் வித் தடைகளும் ஏற்படலாம். இந்தத் திகதி களில் பிறந்த மகான்களுக்கு இது பொருந்தாது.




# திருமணத்தை பெண்கள் தவிர்க்கக் காரணம் என்ன?

ஆண்கள், வேலை கிடைத்தால் தான் திருமணம் என்று சொல்வார் கள். அதனால் ஊர் சுற்றிக் கொண்டி ருந்த பல ஆண்கள், திருமண ஆசை யில் வேலைத் தேடிச் செல்வதுண்டு. திருமணத்துக்காக வேலை தேடும் ஆண்கள் ஒருபுறம் இருக்க, வேலைக்கு போகும் பெண்களோ, வேலையில் ரொம்ப பிசியாக இருக்கிறேன். இப்போதைக்கு கல்யாணம் செய்து கொண்டால் கணவருக்கு தேவை யான நேரத்தை ஒதுக்க முடியாது என்று கூறி திருமணத்தைத் தள்ளி வைக்கிறார்கள். சிலரோ தவிர்த்து விடுகிறார்கள். பெண்கள் திருமணத்தை தள்ளிவைக்க வேறு என் னென்ன காரணங்கள் இருக்கின் றன?

**குடும்பச்சூழல்:**

பெற்றோர்கள், பெண்களை நிறைய கடன் வாங்கி படிக்க வைக்கிறார்கள். அதனால் படித்து முடித்ததும் பெண் கள் வேலை தேட வேண்டியதாகி விடுகிறது. வேலை தேடும் முன்பே அவர்கள் திருமணம் செய்துகொண் டால், கடன் சுமை பெற்றோர்களின் தலையில் விழுந்துவிடுகிறது.

அதைத் தவிர்க்கவும், கல்யாண செலவு என்ற சுமை அழுத்தாமல் இருக்கவும் பெண்கள் திருமணத்தை தள்ளிவைக் கிறார்கள். திருமணத்துக்குப் பிறகும் வேலை தேடலாம். ஆனால் திருமணத் துக்கு முன்பே வேலை தேடிச் சம்பாதித் தால் மட்டுமே குடும்பச் சுமையைக் குறைக்க முடியும். திருமணச் செலவு களையும் சமாளிக்கலாம் என்பது ஒருசாரார் கருத்து.

**சொந்தச் சூழல்:**

ஒவ்வொரு பெண்ணின் வாழ்க்கை யிலும் தனிப்பட்ட விடயங்கள் நிறைய இருக்கின்றன. யாரையாவது காதலிக் கலாம். அவருடைய வேண்டு கோளுக் கிணங்க காத் திருக்கலாம். சில காதல் பிரச்சினையை ஏற்படுத்தும். அந்தப் பிரச்சினையை எதிர்கொள்ளும் ஆற் றல் கிடைக்கும் வரை காத்திருக்க நேரிடலாம். சில காதலர்களைப் பொறுத்த வரையில் பெண்ணுக்கு வேலை கிடைத்திருக்கும். ஆணுக்கு கிடைத்திருக்காது. அவருக்கும் வேலை கிடைக்கட்டும் என்று பெண்கள் காத் திருக்கிறார்கள். தங்களுக்கு நெருக் கமான பெண்களுக்குத் திருமணம் நடந்திருக்கும். ஆனால் அவர் கள் கணவ ரால் பல்வேறு விதமான சித்ர வதைக்கு உள்ளாகியிருப்பார்கள். ஒருவேளை இறந்து கூட போயிருக் கலாம். அதனால் தனது வாழ்க்கை யும் அவ்வாறு ஆகிவிடுமோ என்ற பயத்தால் திருமணத்தைத் தள்ளிப் போடும் பெண்களும் உண்டு.

**தகுதியான மாப்பிள்ளை:**

உயர்ந்த பணியில் அமர்ந்துவிடும் பெண்கள், தங்களுக்கு தகுதியான மாப்பிள்ளை கிடைக்காததால் திரு மணத்தை தள்ளி வைப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களை விட அதிகம் படித்தவரை, அதிகம் சம் பாதிப்பவரை திருமணம் செய்தால் தான் தங்கள் தகுதி அதிகரிக்கும் என்று கருதுகிறார்கள். படிப்பிலோ, உத்தியோகத்திலோ தன்னைவிட குறைந்த ஆணைத் திருமணம் செய்ய மறுக்கிறார்கள். திருமண வாழ்க்கை வெற்றியடைய படிப்பு, பணம், அந் தஸ்து போன்றவை மட்டுமே கார ணம் இல்லை என்பதை அவர்கள் புரிந்துகொள்ள அதிக காலம் தேவைப் படுகின்றது. பெண்களுக்கு படித்த உடன் வேலை கிடைத்துவிட்டால் நல்லது தான். அப்படி கிடைக்காத பட்சத்தில் அதற்காகக் காத்திருந்து காலத்தை விரயமாக்க வேண்டாம். நல்ல வரன் வந்தால் திருமணத்தை முடித்துக் கொண்டு வேலையைத் தேட ஆரம்பிக்கலாம். வாழ்க்கை சூழல் என்பது எல்லோருக்கும் எப்போதும் ஒன்றுபோல் சாதகமாக இருப்ப தில்லை. எதிர்கால நலன் கருதி சூழலை அனுசரித்து வாழ்க்கையை அமைத் துக் கொள்ளவேண்டும். அதுதான் அனை வருக்கும் மகிழ்ச்சியை அளிக் கும். திருமணம் என்பது பெண்களின் வாழ்க்கையில் விழும் முற்றுப்புள்ளி அல்ல. அது அவர்களது திறமைக்குக் கிடைக்கும் தொடக்கப் புள்ளியாக வும், வெற்றிப் புள்ளியாகவும் மாற வாய்ப் பிருக்கிறது. அதனால் திரு மணத்தை அதிக காலம் தள்ளிப் போடாமல் பருவத்தே பயிர் செய்து விடுவதுதான் நல்லது என்பது பலரது கருத்தாக உள்ளது.

> “ திருமணம் என்பது பெண்களின் வாழ்க் கையில் விழும் முற் றுப்புள்ளி அல்ல. அது அவர்களது திறமைக்கு கிடைக்கும் தொடக்க புள்ளியாகவும், வெற் றிப் புள்ளியாகவும் மாற வாய்ப்பிருக்கிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வர்ணம் தீட்டலாம் வாங்க




## சுண்டெலிக்கு கல்யாணம்

அப்பாப் பையன் மகன்
சுப்பாக்குட்டி
சுப்பாக்குட்டி பிள்ளை
சுண்டெலியாம்
சுண்டெலி ராசனுக்குக்
கல்யாணமாம்
சோளத்தட்டுப் பல்லாக்கு
ஊர்கோலமாம்.
பாம்பைக் கூப்பிடுங்கள்
பல்லாக்குத் தூக்கட்டும்
பல்லியைக் கூப்பிடுங்கள்
பராக்குப் பார்க்கட்டும்
தவளையைக் கூப்பிடுங்கள்
தாரை ஊதட்டும்
சேவலைக் கூப்பிடுங்கள்
கொம்பு முழங்கட்டும்
சுண்டெலிக்கும் சுண்டெலிக்கும்
கல்யாணமாம்
பூலோகமெல்லாம்
கொண்டாட்டமாம்

ஓரெலி ஓடிவந்து
ஊருக்கெல்லாம் சொல்லிச்சாம்
இரண்டெலி ஓடிவந்து
இரத்தினக் கம்பளம் போட்டுச்சாம்
மூவெலி ஓடிவந்து
முக்காலி போட்டுச்சாம்
நாலெலி ஓடி வந்து
நாதசுரம் ஊதிச்சாம்
ஐந்தெலி ஓடிவந்து
மஞ்சளை அரைச்சதாம்
ஆறெலி ஓடிவந்து
ஆட்டமாய் ஆடிச்சாம்
ஏழெலி ஓடி வந்து
ஏணி மேலே ஏறிச்சாம்
எட்டெலி ஓடி வந்து
எட்டி எட்டி பார்த்துச்சாம்
ஒன்பதெலி ஓடி வந்து
ஒய்யாரமாய் நின்னுச்சாம்
பத்தெலி ஓடிவந்து
பணியாரம் தின்னுச்சாம்




# எல்லாம் தெரியும்!



மாலை நேரம். கடல் அலையை இரசித் தபடி கடற்கரையில் அமர்ந்தான் தங்கமணி. அந்த நேரத்தில் அங்கே தர்மலிங்கம் வந்தான். நண்பனே, உன்னைப் பார்த்து வெகு நாள்களாகிறதே... எப்படி இருக்கிறாய்? என்று கேட்டான் தர்மலிங்கம். நான் நன்றாகத் தான் இருக்கிறேன். இதோ இந்தக் கடல் அலையை நான் இரசித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் என்னிடம் நீ இடையூறு செய்ய வந்திருப்பது போன்று தெரிகிறது என்றான் தங்கமணி. அடடே! இத்தனை நாள்களுக்குப் பின்னரும் உன்னுடைய குணம்மாறவில்லையே. நீ கடல் அலையை இரசிக்கிறாயே... கடல் அலையைப் பற்றி உனக் கென்ன தெரியும்? என்று கேட்டான் தர்மலிங்கம்.

என்னிடத்தில் நீ அப்படிப் பேசாதே. நான் உன்னை விடவும் ஏகப்பட்ட விடயங்களைத் தெரிந்து வைத்திருக்கிறேன். இயற்கையான இந்தக் கடல் அலையை இரசிக்கிற இரசனை உனக்குத்தான் இல்லை. ஆனால், எனக்கு இருக்கிறது. அதனை நீ என்றுமே மறவாதே என்றான் தங்கமணி. நண்பா, உனக்கே எல்லாம் தெரிவது போன்று நீ பேசிக் கொண்டிருக்கிறாய். நீ இவ்வாறு இருப்பது எனக்கு வியப்பை அளிக்கிறது. இதற்கு முன்னர் ஓரளவுக்குத்தான் ஆணவம் உள்ளவனாக இருந்தாய். இப்போது அதிகமாக ஆணவம் உள்ளவனாகக் காணப்படுகிறாய். "கற்றது கையளவு, கல்லாதது உலகளவு" என்பதை மறந்துவிடாதே என்றார் தர்மலிங்கம். இதோ பார், எனக்கு நீ அறிவுரை சொல்ல வேண்டாம். எனக்குத் தெரிந்த அனுபவ அறிவுகளில் உனக்குக் கால் பங்கு கூட தெரிய வாய்ப்பில்லை. நல்ல அனுபவசாலியான என்னிடம் நீ அடக்கத்துடன் பேசக் கற்றுக்கொள் என்றான் தங்கமணி. நண்பனே, உன்னிடம் பேசுகிற போதெல்லாம் உன்னை நீ அறிவாளியாகவும், அனுபவம் மிக்கவனாகவும் உயர்த்திக் கொண்டு பேசுகிறாய். நீ அறிவாளியாக இருந்தால் அதனைக் கண்டு நான் மகிழ்ச்சியடைவேன். ஒருவேளைநீமுட்டாளாகஇருந்து விட்டால் என்ன செய்வது? அதனை நினைக்கையில் தான் எனக்கு மிகவும் கவலையாக இருக்கிறது? என்றான் தர்மலிங்கம்.

என்னையா நீ முட்டாள் என்கிறாய்? நீ என்ன வேலை செய்யச் சொன்னாலும் அதனை நான் சிறப்புடன் செய்து காட்டுவேன். அப்போதுதான் நீ என்னுடைய அறிவையும், புத்திசாலித்தனத்தையும் புரிந்து கொள்வாய் என்று கூறினான் தங்கமணி. அப்படியானால் நீ நாளை மாலை இதே இடத்துக்கு வா. நான் உனக்கு ஒரு பரீட்சை வைக்கிறேன். உனது அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தி நீ அந்தப் பரீட்சையில் எப்படி வெற்றி பெறுகிறாய் என்று பார்க்கலாம் என்றான் தர்மலிங்கம். ஓ! தாராளமாக வைத் துக்கொள். நான் அதில் வெற்றி பெறுவேன். நீதான் வெட்கத்தால் தலைகுனிவாய் என்றான் தங்கமணி. சரி நண்பனே, நாளை மாலை யில் யார் தலைகுனியப் போகின்றனர் என்று பார்க்கலாம் என்று கூறியபடி சென்றான் தர்மலிங்கம். மறுநாள் மாலை நேரத்தில் தர்மலிங்கத்தின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்தான் தங்மணி. சிறிது நேரத்தில் அங்கே தர்மலிங்கம் வந்து விட்டான். அவனிடம் சிறிய பை ஒன்று இருந்தது. அந்தப் பையின் உள்ளே ஏதோ ஒன்று இருப்பது போன்று தெரிந்தது. வா தர்மலிங்கம் வா, நீ எப்போது வருவாய் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். கையில் பையோடு வந்திருக்கிறாயே, பையின் உள்ளே என்ன இருக்கிறது? என்று கேட்டான் தங்கமணி. உடனே தர்மலிங்கம் பையின் உள்ளே கைவிட்டு தேங்காய் ஓடு ஒன்றை வெளியே எடுத்தான். என்ன பையில் இருந்து கொட்டாங்குச்சியை எடுக்கிறாயே! என்று கேட்டான் தங்கமணி. நண்பா, இந்த கொட்டாங்குச்சியை உன்னிடம் கொடுக்கப் போகிறேன். நீ இதன் உதவியால் இந்தக் கடலில் இருக்கும் தண்ணீரை எல்லாம் இறைத்து கரையில் சேர்க்க வேண்டும் – என்றான் தர்மலிங்கம். அதெப்படி முடியும்? இந்தப் பரந்து விரிந்துள்ள கடல்நீரை சிறிய கொட்டாங்குச்சியால் இறைத்துக் கரை சேர்ப்பது சாத்தியமாகுமா? நீ நடக்காத கதையைக் கூறுகிறாய் என்றான் தங்கமணி. நண்பனே, நீதானே நேற்று என்னிடம் எதையும் செய்துவிடுவேன் என்றும், உன்னுடைய அறிவையும், அனுபவத்தையும் இன்று என்னிடம் நிரூபித்துக் காட்டுவதாகவும் கூறினாய். இந்த உலகத்தில் நீ செய்ய முடியாத செயல் எதுவுமே இல்லையென்று திட்ட வட்டமாக அறிவித்தாயே. உனது அறிவாலும், அனுபவத்தாலும் இந்தக் கொட்டாங்குச்சியால் கடல் நீரை இறைத்துக் காட்டு பார்க்கலாம் என்றான். அதனைக் கேட்ட தங்கமணியோ பதில் எதுவும் பேச முடியாமல் அமைதியுடன் நின்றான். நண்பனே, சிறிய கொட்டாங்குச்சியின் மூலமாக நீ என்னுடைய ஆணவத்தை அடக்கி விட்டாய். இப்போது நான்தான் தலை கவிழ்ந்து நிற்கிறேன் என்றான் தங்கமணி.



# ஒழுக்கத்தின் மகத்துவம்

"ஒழுக்கம் விழுப்பம் தரலால் உயிரினும் ஓம்பப்படும்" எனும் திருவள்ளுவரின் கூற்றுக்கு அணியாக சில கருத்துக்களை மாணவர்களுக்கு அறியத்தர முனைகின்றேன். ஒழுக்கம் என்பது நமது வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய சிறந்த விழுமியப் பண்பு ஆகும். இந்த ஒழுக்கமானது சமயம் சார்ந்ததாகவும் மட்டுமல்லாது நம் சமூகம் சார்ந்ததாகவும் கடைப்பிடிக்கப்படுகின்றது. காலம் காலமாக எமது முன்னோர்கள் எமக்கென்றே பல ஒழுக்க விழுமியப் பண்புகளை வகுத்துத் தந்திருக்கின்றார்கள். இவை எமது வாழ்க்கையை உயர்த்திக் கொள்ள உதவும் காரணிகளில் ஒன்றாகும். ஒழுக்க விழுமியங்களாக பின்வருவனவற்றைக் கூறலாம்.

1.பெற்றோர், பெரியோர்களை மதித்து நடத்தல்
2. இனிமையான சொற்களைப் பேசுதல்
3. முகமலர்ச்சியுடன் இருத்தல்
4. உண்மை பேசுதல்
5. பஞ்சமா பாதகங்களைத்தவிர்த்தல்
6. ஏனையோருக்கு எம்மால் இயன்றளவு உதவிகளைச் செய்தல்
7. தான தர்மங்களைச் செய்தல்
8. உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுதல்
9. வீட்டுக்கு வரும் விருந்தினரை உபசரித்தல்
10. சைவ சமய விழுமியப் பண்புகளைக் கடைப்பிடித்தல்

இது மட்டுமா இன்னும் ஏராளமான விழுமியப் பண்புகள் உள்ளன. உயிர்களிடத்தில் அன்பு பேணுதல் பற்றித் திருவள்ளுவர் அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன் பார்கண் வற்றல் மரந்தளிர்த் தற்று எனும் குறட்பாவின் மூலம் எடுத்துக் கூறியுள்ளார். மேலும் ஒழுக்கம் எய்துவர் மேன்மை எனவும் ஒழுக்கம் இல்லான் கண் உயர்வு இல்லை எனவும் கூறியுள்ளார். எனவே மனித ர்களாகப் பிறந்த நாமும் பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என இருக்காமல் சமூகத்திலே நல்லதொரு மனிதர் என்ற பெயருடன் வாழ்தலே மிகப் பெரிய சாதனை என உணர்ந்து செயற்படுவோம்.

*ப.அனோஜா*
*தரம் 11*
*வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி உறுதியால் காணி உரிமை மாற்றிய சட்டத்தரணி பிணையில்

யாழ்ப்பாணம் செப். 1
போலியான உறுதி ஒன்றை தயாரித்துக் காணியொன்றை உரிமை மாற்றம் செய்வதற்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த பெண் சட்டத்தரணி ஒருவரை யாழ்ப்பாண விசேட குற்றத்தடுப்புப் பொலிசார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

யாழ். கலட்டியில் அமைந்திருந்த காணியொன்றுக்கு 2013 ஆம் ஆண்டு போலியான உறுதியொன்றைத் தயாரித்து பெண்ணொருவர் உரிமை மாற்றம் செய்துள்ளதாக யாழ்.விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முந்தல் வீதி, கலட்டியைச் சேர்ந்த நபரொருவர் முறைப்பாடு செய்திருந்தார். அது தொடர்பில் பொலிசார் விசாரணை மேற்கொண்டிருந்தனர்.

அது தொடர்பில் நீதிமன்றில் அறிக்கையிட்டுக் குறித்த சட்டத்தரணிக்கு எதிராக யாழ்.நீதிவான் மன்றில் வழக்கும் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கு விசாரணை நடைபெற்று வரும்வேளையில் போலியான உறுதியைத் தயாரித்து நிறைவேற்றிய குற்றச்சாட்டில் குறித்த பெண் சட்டத்தரணி நேற்றுப் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். அவரை பொலிசார் வழக்கின் இரண்டாவது சந்தேக நபராக யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தினர்.

அது தொடர்பில் ஆரம்ப விசாரணை செய்து பரிசீலனை செய்த பின்னர் குறித்த சட்டத்தரணியை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிசார் நீதிமன்றில் கோரினர். எனினும் குறித்த சட்டத்தரணி சார்பில் 3 சட்டத்தரணிகள் முன்னிலையாகி அவரை விளக்கமறியலில் வைக்காது பிணையில் விடுவிக்குமாறு கோரினர். இரு தரப்பு வாதங்களையும் பரிசீலித்த நீதிமன்று குறித்த சட்டத்தரணியைத் தலா 5 லட்சம் பெறுமதியான 2 ஆள் பிணையில் விடுவித்தது.

குறித்த சட்டத்தரணி நீதிமன்ற சாட்சிகளுடனோ முறைப்பாட்டுக்காரருடனோ எவ்வித தொடர்புகளும் ஏற்படுத்தக்கூடாதென நீதிமன்றினால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். இந்த வழக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (த-4-103)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111


## மரண அறிவித்தல்

**திருமதி கொன்சலா புவனராஜேஸ் அமலரட்ணம்**
**(முன்னாள் பணியாளர் யா.ப.நோ.கூ.சங்கம்)**



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கொன்சலா புவனராஜேஸ் அமலரட்ணம் 31.08.2015 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இல. 200, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.
0212225447, 0779422970

தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

**திருமதி இராஜலட்சுமி கிருஷ்ணராஜா**



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கொக்குவில் கிழக்கு நந்தாவில் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலட்சுமி கிருஷ்ணராஜா (ஓய்வுபெற்ற உப அதிபர் - யா/வேம்படி உயர் மகளிர் கல்லூரி) நேற்று 31.08.2015 இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியினரின் ஏக புத்திரியும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - நல்லம்மா தம்பதி யினரின் மருமகளும் காலஞ்சென்ற பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா (முன்னாள் கலைப் பீடாதிபதி - யாழ் பல் கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனை வியும் கவிதா, மாறன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜனகன், ரதிவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ருதி, பவித்திரன், மைத்ரேய, கௌதம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கதிர்காமநாதரின் (ஓய்வு பெற்ற அதிபர்) அன்புச் சகோதரியும் திரு.திருமதி ஈஸ்வரலிங்கம் (ஏழாலை), திருமதி சி.கோகிலாதேவி (சுழிபுரம்) ஆகியோரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.09.2015) செவ்வாய்க் கிழமை மு.ப 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல் :-
பிள்ளைகள்.

## தேர்தல் சட்டங்களை மீறியோர் மீது வழக்கு

கொழும்பு, செப். 1
கடந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டங்களை மீறியவர்களுக்கு எதிராக, நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு தேர்தல்கள் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறியமைக்காகத் தேர்தல்கள் ஆணையாளர் நீதிமன்றம் செல்கின்றமை, இலங்கை தேர்தல் வரலாற்றில் இதுவே முதல் தடவையென மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம்.மொஹமட் தெரிவித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 1156 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், தேர்தல்விடைந்தவர்கள் மட்டுமன்றி வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தாஜுதீன் கொலை குறித்து 4 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

கொழும்பு, செப். 1
ரகர் வீரர் வசீம் தாஜுதீன் கொலையுடன் தொடர்புடைய நான்கு பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களில் மூவர் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஒருவர் தற்போது லண்டனில் வசித்து வரும் இலங்கையராவார் என புலனாய்வுத்திணைக்கள சிரேஷ்ட அதிகாரியாருவர் தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாஜுதீன் கொலையாளிகள் இத்தாலிக்குத் தப்பிச்சென்றுள்ளதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை. சம்பவம் தொடர்பில் சந்தேகிக்கப்படும் மூன்று ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு உத்தியோகத்தர்களும் நாட்டில் இருக்கின்றார்கள்.

சந்தேகநபர்கள் குறித்து கண்காணிக்கப்பட்டு வருவதுடன் எதிர்வரும் வாரங்களில் இவர்களை கைதுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

லண்டனில் வசித்துவரும் சந்தேகநபர், தப்பிச்செல்வதற்கு தூதரக அதிகாரிபொருவர் உதவி வழங்கியுள்ளார். இந்த தூதரக அதிகாரி தொடர்பிலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என எனத் தகவல் வெளியாகியுள்ளன. (த)

# சர்வதேச விசாரணையே நம்பகத்தன்மை ஆனது

**வடக்கு அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம்**

கொழும்பு, செப்.1
இலங்கை இறுதிப் போரின் போதும் அதற்கு முன்பும் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையே நம்பகத்தன்மையுடையதாக இருக்குமென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்ற இலங்கைக்கான அரசியல் விவகாரங்களுக்கு பொறுப்பான ஜப்பானிய தூதுவர் மறிக்கோ ஐமமோட்டோ உடனான சந்திப்பின்போதே அமைச்சர் மேற்படி விடயத்தை வலியுறுத்தியுள்ளார். இந்த சந்திப்பில் தூதுவருக்கு விபரித்த வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்:-

சர்வதேச சுயாதீன விசாரணையே பாதிக்கப்பட்டவர்களை திருப்திப்படுத்தும். உள்ளக விராசரணைப் பொறிமுறையில் தமிழ் மக்கள் நம்பிக்கை இழந்துள்ளார்கள். இதற்கு பல கசப்பான கடந்தகால அனுபவங்கள் உள்ளது. குற்றமிழைத்தவர்களை குற்றம் இழைக்கத்தூண்டியவர்களே விசாரிப்பது எந்தவகையில் நியாயமானதாக இருக்குமென கேள்வி எழுப்பியுள்ளார்.


போரிற்கு பின்னரான சூழ்நிலையில் பெரும் எதிர்பார்ப்புடன் நடைபெற்ற மாகாண சபைத்தேர்தலில் தமிழ் மக்கள் ஏகோபித்த ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளார்கள். இதன்மூலம் கொடியபோரின் பாதிப்பை அனுபவித்த மக்கள் மாகாணசபை மூலம் விமோசனம் கிடைக்குமென நம்பினார்கள்.

எனினும் மாகாணசபைக்கான அதிகாரங்கள் வழங்கப்படாதுள்ள நிலையில் மக்கள் பெரும் ஏமாற்றத்தை அடைந்துள்ளார்கள். இதனால் எதிர்காலத்தில் மக்கள் ஜனநாயக அரசியலில் நம்பிக்கை இழக்கும் சூழ்நிலை உருவாகக்கூடும்

மேலும் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் இளைஞர் யுவதிகளுக்கான வேலைவாய்ப்பு, உள்ளக வீதி அபிவிருத்தி, பாதிப்புக்குள்ளான பெண்கள், சிறுவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஜப்பானிய அரசு உதவிகளை வழங்கவேண்டுமென வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் கேட்டுக்கொண்டார். (த)

## மரண அறிவித்தல்

**அருளம்பலம் அருள்செல்வன்**



கொக்குவிலை பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் அருள் செல்வன் பிரான் ஸில் 30.08.2015 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் லோஜிதாவின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் அஸ்வின், தமிழரசி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள் மோகன் (நோர்வே), அருள் நீதன் (பிரான்ஸ்), விஜித்தா (சுவிஸ்), சுஜாதா (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

"மனோன்மணிவாசா"
ஆடியபாதம் வீதி, கொக்குவில்
கிழக்கு, கொக்குவில்.

குடும்பத்தினர் - 0772189874

## மரண அறிவித்தல்

**நாகம்மா பஞ்சாட்சரம்**
**(செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பு - ஓய்வு பெற்ற முளாய் Hospital Nurse)**



பிறப்பு 06.05.1929 இறப்பு 31.08.2015

இணுவிலைப் பிறப்பிடமாகவும் செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பை வதிவிடமாகவும் தற்போது கனடா - மொன்றியலில் வாழ்ந்து வந்தவருமாகிய நாகம்மா பஞ்சாட்சரம் நேற்று (31.08.2015) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் பஞ்சாட்சரம் சாந்தை சித்திவிநாயகர் உரிமையாளரின் பாசமிகு மனைவியும் சாரதாதேவி, சாவித்திரி தேவி, விக்கினேஸ்வரன், விஜயகுமாரி (யாழ்ரன் சொப்), சண்முகவேல் ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜஜேந்திரன், விக்கினேஸ்வரன், விஜயலக்சுமி, கண்ணன் (யாழ்ரன் சொப்), பேரானந்தருபி ஆகியோரின் அன்பு மாமி யாரும் கஜன், சபின், சோனியா, அர்ஜீன், ஐஸ்வர்யா, வினோ வினேஷ், விதுஷா, வித்தியா, டரன், அபிஷா, அருஷன், அபிநயா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு : சோ.நாகராசா - 0777111128
சாரதா (மகள்) - 5146853205,
சாவித்திரி (மகள்) - 5148047333, விக்கி
(மகன்) - 5148275643, கண்ணன்
(மருமகன்) - 6478914484,
சண் (மகன்) - 5147106522,
யாழ்ரன் (Toronto) - 4164949494

தகவல் :-
குடும்பத்தினர்.
செட்டிகுறிச்சி,
பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் மோசடிகள் தொடர்பில் 250 முறைப்பாடு விசாரணைக்கு

கொழும்பு, செப் 1

பெரும் ஊழல் மோசடி தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளில், 250 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஊழல் மோசடிகளை விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மார்ச் மாதம் ஆரம்பம் முதல் இது வரையான காலப் பகுதியில் மாத்திரம் 886 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் லெசில் டீ சில்வா குறிப்பிட்டுள்ளார்.

நீர்கொழும்பு களப்பு அபிவிருத்தித் திட்டத்தில் இடம்பெற்றதாகக் கூறப் படும் பெரும் மோசடி தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் நிறைவுக் கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனை தவிர விசேடமாக றக்னா லங்கா நிறுவனம், எயர் லங்கா கேட்ரிங் மற்றும் சுயாதீன தொலைக் காட்சி தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசா ரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஆணைக் குழுவின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்

முன்னெடுக்கப்படும் விசாரணைகளின் போது மக்களின் சாட்சிக ளைப் பெற்றுக் கொள்ளவும் நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஊழல்மோசடிகளைவிசாரணை செய்வதற்காக நியமிக்கப் பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசா ரணைகளுக்காக ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

**வேலையாள்கள் தேவை**
கொழும்பு - யாழ்ப்பாணம் லொறி (பாரவூர்தி) உதவியாளர்கள் தேவை.
தொடர்பு : 021 492 3724

**தேவை** விற்பனை உதவியாளர், சிட்டை எழுதுநர், கணக் காளர். (கணக்காளர் பகுதி நேரமாக வும் வேலை செய்யலாம்.)
இல.500, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
நேரில் வரவும். காலை 8.00 - 9.00 மணிவரை

**வாடகைக்கு**
யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும், படிக்கும் பெண்களுக்கு Room or Sharing room வாடகைக்கு உண்டு.
தொடர்பு : 077 174 6101

## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில்
சிறுவர் உரிமை மேம்பாட்டு
உத்தியோகத்தராக கடமையாற்றும்
திருமதி வரதீஸ்வரி
சத்தியேஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தை

**மாதர் செல்வராசா**

அவர்களின் மறைவால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்
தென்மராட்சி.

பிரதேச செயலக
உத்தியோகத்தர்
நலன் புரிசங்கம்.

# பதவி வழங்குவது குறித்து சமலுக்கு அறிவிப்பில்லை

## பொய்யான தகவல் என்கிறார் மகிந்த

கொழும்பு, செப் 1

தமது சகோதரரும் முன்னாள் சபா நாயகருமான சமல் ராஜபக்சவை எதிர்க்கட்சித் தலை வராக அல்லது அமைச்சராக நியமிக்கவுள்ளதாக தொடர்பான தகவல்கள் தவறானவை என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள அவர், எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பாகவோ, அமைச்சுப் பதவி தொடர்பாகவோ யாரும் இதுவரை சமல் ராஜபக்சவுடன் கலந்துரையாடவில்லை. அது தொடர்பான அனைத்து தகவல்களும் ஆதாரமற்றவை.

இது தொடர்பில் நான் சமல் ராஜபக்சவை தொடர்பு கொண்டு விசாரித்தேன். தனக்கு அவ்வாறான தகவல்களை யாரும் அறிவிக்கவில்லை என்று அவர் மறுத்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது. என்ன நடக் கப்போகின்றது என்பதை நாங்கள் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம்.

எமது கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குமார வெல்கமவை எதிர்க்கட்சித் தலைவராக்குவதில் விருப்பம் கொண்டுள்ளனர். ஆனால் இது தொடர்பிலும் இன்னும் இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். (த-சி)

# சமூக சேவகி சாந்தி சச்சிதானந்தத்துக்கு பெரும் எண்ணிக்கையானோர் அஞ்சலி



'விழுது' ஆற்றல் மேம்பாட்டுமையத்தின் ஸ்தாபகராகவும் அதன் நிறைவேற்றுப் பணிப் பாளராகவும் இருந்து பணியாற்றி கடந்த வியாழக்கிழமை மறைந்த சாந்தி சச்சிதானந்தத்தின் இறுதிக்கிரியை நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றது.

இறுதி அஞ்சலி நிகழ்வில் முன்னாள் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், வாசுதேவ நாணயக்கார, டக்ளஸ் தேவானந்தா, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள அலிஸாஹிர் மௌலானா, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ளவருமான மனோ கணேசன் உள்ளிட்டோரும் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பலரும், தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் கலந்து கொண்டனர்.

சாந்தியின் மரணத்தையிட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அனுப்பி வைத்திருந்த அனுதாபச் செய்தி இறுதி நிகழ்வில் வாசிக்கப்பட்டது. அதில், ஜனாதிபதி சாந்தியின் சமூக சேவைகளைப் பாராட்டியிருந்தார். அந்த அனுதாபச் செய்தியில் ஜனாதிபதிய மேலும் தெரிவித்திருந்தாவது:-

மனித உரிமை ஆர்வலரும் பெண்ணிலைவாதியுமான சாந்தி சச்சிதானந்தனின் மறைவுச் செய்தி கேட்டு மிகுந்த துயருற்றிருக்கின்றேன்.

சாந்தி சச்சிதானந்தம் சிறுபராயம் முதல் தான் சமூகத்தில் அவதானித்து வந்த சமூக அநீதிகள், ஆண் -பெண் ஏற்றத்தாழ்வுகளுக்கெதிராக தனது அறிவையும் நிறுவன சக்தியையும் பயன்படுத்தத் தீர்மானித்தார்.


கட்டடக் கலைஞர் பட்டதாரியாக அவர் இருந்த போதிலும் சமூக சேவைப் பணிகளிலேயே மரணிக்கும் வரை ஈடுபட்டார்.

தனது தலைமையின் கீழ் விழுது' எனும் மனித வள ஆற்றல் மேம்பாட்டு மையத்தை அமைத்து யுத்தம் காரணமாக விதவைகளான வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பெண்களுக்காகவும் வன்முறைகளுக்கு இலக்கான பெண்கள் பிள்ளைகளுக்காகவும் செய்த பணிகள் இன எல்லைகளைக் கடந்ததாகும்.

நிர்வாகக் கட்டமைப்புக்கள் சரியான ஜனநாயக வழிக்கு வரவேண்டுமானால் பெண் பிரதிநித்துவம் உரிய விகிதாசாரத்தில் பேணப்பட வேண்டும் என்பதை மிக உறுதியாக நம்பிய சாந்தி சச்சிதானந்தம், அந்த உயரிய நோக்கத்தை அடைவதற்காக மரணிக்கும் வரை செயலுறுதியுடன் பணியாற்றினார்.

சமூக மேம்பாட்டுக்காக சாந்தி சச்சிதானந்தம் செய்த பங்களிப்புக்களை நான் பாராட்டுகின்றேன். சாந்தி சச்சிதானந்தத்தின் மறைவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும், அவருக்குத் துணையாக தோளோடு தோள் நின்று பணியாற்றிய சகலருக்கும் எனது துயரத்தைப் பகிர்ந்து கொள்கின்றேன் - என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (த)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## ஐயாத்துரை குணசேகரம்

தோற்றம்
18 - 07-1953

மறைவு
11- 09-2014

ஆண்டொன்று மறைந்துவிட்டது அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
எங்களை நிர்க்கதியாய் அநாதையாய்ப் பரிதவிக்க
விட்டுவிட்டு எங்கு சென்றீர்கள்
காலங்கள் ஆயிரம் போனாலும்
மறக்க முடியுமா உங்கள் நினைவுகளை
எங்கள் உயிர்உள்ளவரை உங்கள்
நினைவுகள் தொடரும்
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் முதலாம் ஆண்டு சிரார்த்த நிகழ்வு இன்று (01.09.2015) செவ்வாய்க் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அத னைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
0778583863

# 31 ஆவது நினைவுநாள்



## அமரர் தர்மலிங்கம் கோபிநாத்

லண்டனில் வாழ்ந்து ஓய்வுதேடி இலங்கைக்கு வந்து
சுகம்தேடி சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நேரம்
அகாலமரணம் கோபுவை அணைத்துக்கொண்டது
அந்தக் கனத்த நினைவுடன் 31 ஆவது நாள் கிரியைகள்
நாளை (02.09.2015) புதன்கிழமை நடைபெறவுள்ளது

புதுக்குடியிருப்பு 4 ஆம் வட்டாரத்தில் அமைந்த த.இன்பவரனின் வீட்டில் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கலந்துசிறப்பிக்குமாறு மீண்டும் வேண்டுகின்றோம்.

4 ஆம் வட்டாரம்,
மு/புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியமர்வுக்கு முன்னுரிமையை வழங்குமா அரசு?

"மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளதும், காணிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படாததும் இலங்கையின் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் வறுமை காணப்படுவதற்கான காரணம்"



கடந்த 17ஆம் திகதி தேர்தலில் வென்றுள்ள அரசு அதற்கு முன்னிருந்த அரசைப்போல அதிகளவு சுமையை சுவீகரிக்கவில்லை.

எனினும், ஜனாதிபதி சிறிசேனவின் இரண்டாவது நாடாளுமன்றம் போரின் மிகவும் வேதனை மிக்க ஆறாத காயங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டியிருக்கும். இதில் 50,000ற்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்களின் விவகாரமும் முக்கியமானது. இவர்களில் பலர் இரு தசாப்த காலமாக தங்கள் வீடுகளை பார்க்காதவர்கள்.

இலங்கை இராணுவத் திற்கும் பிரிவினைவாத விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான போர் 29 வருடங்களுக்குப் பின்னர் 2009 இல் முடிவடைந்த போதிலும் சிவா அரியரத்தினம் தன்னுடைய வீட்டிற்கு எப்போது திரும்பலாம் என அரச அதிகாரிகள் தெரிவிப்பதற்காக இன்னமும் காத்திருக்கின்றார்.

ஆயிரக்கணக்கான தமிழர்களைப் போன்று அவரும் 1990 இல் வட பகுதியில் உள்ள தனது நிலத்தை இராணுவம் கைப்பற்றிய வேளை அங்கிருந்து வெளியேறியவர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்காக இராணுவம் அந்தப் பகுதிகளைக் கைப்பற்றியது.


அரசு 50,000 இடம் பெயர்ந்த மக்களுக்கு அவர்களுடைய நிலங்களை மீள வழங்கப்போவதாகத் தெரிவித்துள்ளது. எனினும், அது எப்போது இடம்பெறும் என்பதை அது தெரிவிக்க வில்லை. ஆனால், அரியரட்ணமோ காலம் ஓடிக் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கின்றார்.

நீண்ட காலமாக ஏனையவர்களின் வீடுகளில் வாழ்வது எப்படியிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா என அவர் கேள்வி எழுப்புகின்றார். அவ்வாறான நிலையில், நீங்கள் எப்போதும் வெளி ஆளே எனவும் அவர் தெரிவித்தார்.

எனக்கு வயதாகிவிட்டது. நான் எனது வீட்டில் எனது குடும்பத்தவர்களுடன் வாழவிரும்புகின்றேன். நான் எனது வீட்டிலேயே இறக்க விரும்புகின் றேன்.வேறு எங்கும் இறக்க விரும்பவில்லை என அவர் குறிப்பிட்டார்.

**தசாப்தகால பிரச்சினை**

அரியரத்தினத்தின் அனுபவம் போன்றே பலரின் அனுபவங்களும் உள்ளதை முன்னர் போர் நடைபெற்ற பகுதிகளில் பரவலாகக் காண முடிகின்றது.1983 இல் இடம்பெற்ற இனக்கலவரத்தின் பின்னர் யாழ்ப்பாணம், வன்னி மற்றும் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகள் தங்களது சொந்த நிர்வாகத்தை ஏற்படுத்தியிருந்தனர். இந்த பகுதிகளே முன்னர் போர் இடம்பெற்ற பகுதிகள். போர் நடைபெற்ற நாள்களில் இடம்பெயர்வு என்பது சாதாரண விடயமாகக் காணப் பட்டது.



போர் 2009 இல் விடுதலைப் புலிகளின் தோல்வியுடன் முடிவிற்கு வந்தது. இந்த மோதலில் 100,000 ற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதாகவும் ஐக்கிய நாடுகள் அறிக்கை யொன்று 2008 முதல் 2009 வரையான காலப் பகுதியில் 40,000 பேர் கொல்லப் பட்ட தாகவும் மதிப்பிட்டுள்ளது.

இலங்கையின் மீள்குடி யேற்ற அமைச்சு கடந்த ஜூன் மாதம் வரை 796,081 பேர் தங்கள் பகுதிகளுக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இடம்பெயர்ந்த சுமார் 50,000பேர் இன்னமும் தங்கள் பகுதிகளில் மீளகுடியேற முடியாத நிலையில் உள்ளதையும் அந்தப் புள்ளி விபரங்கள் வெளிப்படுத்தின. இவர்களில் பெரும்பாலான வர்கள் தெல்லிப்பழை இடம்பெயர்ந்தோர் முகாமைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய நிலம் இன்னமும் இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழேயே காணப்படுகின்றது.

இந்த நிலங்களை 1990 இலேயே இராணுவத்தினர் கைப்பற்றிவிட்டனர். விடுதலைப் புலிகளின் முன்னேற்றத்தைத் தடுக்கவே இராணுவம் பொதுமக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

2009 வரை யாழ். மாவட்டத்தில் இராணுவம் 11,629 ஏக்கர் நிலத்தைத் தன்வசப் படுத்தியிருந்தது. பலாலி உயர் பாதுகாப்பு வலயங்களை உருவாக்குவதற்காகவே பொது மக்களின் நிலங்களை இராணுவம் கைப்பற்றியது.

[illegible] கணக்கானவர்களும் ஒரு காலத்தில் வீடுகள் என அழைத்த பகுதிகள் அமைந்திருந் தன.

**புதிய அரசாங்கம் – புதிய கொள்கைகள்**

பலர் போர் முடிவுக்கு வந்த பின்னர் தங்கள் பூர்வீக நிலங்களுக்கு தாங்கள் திரும்பலாம் என எண்ணியிருந்தனர். எனினும், யுத்தத்தில் வெற்றிபெற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அரசு பொது மக்களின் நிலங்களை மிகவும் மெதுவாகக் கையளித்துள்ளது. தேசிய பாதுகாப்பிற்கு முக்கியமளித்த அந்த அரசு வடபகுதியில் இராணுவத்தினரின் எண்ணிக்கையை அதிகரித்தது.

ஜனவரியில் இடம்பெற்ற தேர்தலில் எதிர்பாராத வெற்றியைப் பெற்ற முன்னாள் சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேனவின் புதிய அரசு நிலங்களை மீளக்கையளிப்பதை துரிதப் படுத்தப்போவதாக உறுதியளித்தது.

எனினும், மக்களை மீள குடியமர்த்துவதற்கு முன்னர் அந்தப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றி வேறு ஒரு பகுதியில் அவற்றை ஸ்தாபிக்கவேண்டியுள்ளது. இராணுவ முகாம்களை ஏற்படுத்து வதற்கான போதிய நிலங்கள் இல்லாததால் அரசின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியேற்றுவதே எங்களுடைய முக்கிய முன்னுரிமைக்குரிய. விடயம் எனத் தெரிவித்தார் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ரஞ்சினி நடராஜபிள்ளை. இதற்கான கால அட்டவணை எதுவும் இல்லை. எஞ்சியுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் எவ்வாறு அகற்றப்படுகின்றன என்பதே இடம் பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றப் படுவதைத் தீர்மானிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

காணி சீர்திருத்தங்களை மெதுவாக முன்னெடுப்பத னால் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் வறுமையில் சிக்குண்டுள்ளனர் என நோர்வேயைச் சேர்ந்த உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த மக்கள் தங்கள் வாழ்வாதாரங்களை முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளதும், காணிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படாததும் இலங்கையின் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் வறுமை காணப்படுவதற்கான காரணம் என அந்த அமைப்பின் ஆய்வாளர் மரிட்டா ஸ்வயின் கூறியுள்ளார்.

எனினும், இந்த அமைப்பு இன்னமும் 73,700 மக்கள் இடம்பெயர்ந்த நிலையில் வாழ்வதாக அந்த அமைப்பு தெரிவிக்கின்றது. அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள எண்ணிக்கையை விட இது அதிகமானதாகும்.

இவர்களில் அநேகமானவர்கள் தங்கள் உறவினர்களின் வீடுகளில் வாழ்கின்றனர். 4,700 பேர் யாழ்ப்பாணத்தின் நீண்டகால நலன் புரி முகாம்களில் உள்ளனர்.

முன்னைய ராஜபக்ச அரசின் கொள்கைகளும் இவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நோர்வே அமைப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிறிசேன அரசின் வாக்குறுதிகள் மூன்றாவது தசாப்த கால இடம்பெயர்ந்த வாழ்க்கைக்குள் நுழையும் அரியரட்ணம் போன்றவர்களிற்கு அர்த்தமற்றதா கவே காணப்படுகின்றது. அவர்களுடைய இந்த அவலம் தற்போதைக்கு முடிவுக்கு வரும் என்பதற்கான உறுதியான அறிகுறிகள் எதுவும் தென்பட வில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு

கொண்டு வரவேண்டியும் நேற்று தமிழகத்திலுள்ள மாணவ இயக்கங்கள் மற்றும் அமைப்புகளால் சென்னை அமெரிக்கத் தூதரகத்தில் மனு மற்றும் எச்சரிக்கைக் கடிதம் கையளிக்கப்பட்டது.
இந்தக் கடிதத்திலேயே மாணவ அமைப்புக்கள் மேற்படி தெரிவித்துள்ளன.
2009 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் சர்வதேச விசாரணையையே வலியுத்திவருகின்றன. அத்துடன் கடந்த 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் சர்வதேச விசாரணையையே வலியுத்தியுள்ளார்.
எனினும் சர்வதேச விசாரணையிலிருந்து இலங்கை அரசைக் காப்பாற்றும் அமெரிக்காவின் தீர்மானத்தை நாம் எதிர்க்கின்றோம். எனவே இலங்கை அரசுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை அமெரிக்கா, 100 மணித்தியாலங்களுக்குள் மீளப்பெறவேண்டும். இல்லையேல் மாணவர் போராட்டம் ஆரம்பிக்குமென தமிழக மாணவ அமைப்புக்கள் கூட்டாக அறிவித்துள்ளன.

(த-5)

## கருணாவின்

ஜெயநாத் ஜெயவீர தெரிவித்தார்.
இறுதிப்போரின்போது, பிரபாகரன் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்றும், அவரது மனைவியும் மகளும் இராணுவத்தின் ஷெல் வீச்சில் சிக்குண்டு உயிரிழந்ததாகவும் தமிழக ஊடகமொன்றுக்கு விநாயகமூர்த்தி முரளிதரன் கூறியுள்ளார்.
அத்துடன், புலிகள் அமைப்பின் தலைவரின் செயற்பாடுகளையும் அவர் புகழ்ந்து பேசியுள்ளார். இதனால், விநாயகமூர்த்தி முரளிதரனின் செயற்பாடுகள்மீதும் அவரின் கூற்று தொடர்பிலும் பாதுகாப்புத் தரப்பு தமது கழுகுப் பார்வையைச் செலுத்தியுள்ளது.
புலிகள் அமைப்பின் துணைத் தலைவராகவும், கிழக்கு மாகாணத் தளபதியாகவும், தலைவர் பிரபாகரனின் நம்பிக்கைக்குரியவராகவும் இருந்தவரான கருணா அம்மான் 2004 ஆம் ஆண்டு புலிகள் அமைப்பிலிருந்து வெளியேறினார்.
அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்தார். அதன் பின்னர், மஹிந்த ஆட்சியிலும் அவருக்கு அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது.
புலிகளின் போர்த் தந்திரோபாயங்கள் தொடர்பிலும், போர் நகர்வுகள் பற்றியும் இராணுவத்துக்கு தகவல் வழங்கினார் எனத் தமிழர் தரப்பில் விமர்சனங்களுக்கு உள்ளாகியிருக்கும் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு, தாம் உப தலைவராகப் பதவி வகித்த சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வருவதற்கு இம்முறை வாய்ப்பு வழங்கப்படவில்லை.
இதனால் அதிருப்தியடைந்திருந்த அவர், தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும் எனத் தேர்தலின்போது பகிரங்கமாக அறிவித்தார். இதையடுத்து, தற்போது இறுதிப்போர் குறித்த தகவல்களையும் வெளியிட்டுள்ளார். இதனாலேயே பாதுகாப்புத் தரப்பு குழப்பமடைந்துள்ளது.
ஜெனிவாத் தொடர் நெருங்கும் வேளையில், இறுதிப்போர் குறித்த தகவல்களை அவர் வெளியிட்டு விடுவாரே என்று பாதுகாப்புத் தரப்பு சந்தேகம் கொண்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்நிலையில், விநாயகமூர்த்தி முரளிதரனின் இந்த அறிவிப்பு தொடர்பில் இராணுவத்தின் பேச்சாளரான பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீரவிடம் தொடர்புகொண்டு உதயன்' வினவியபோது...
ஆம். அவர் வெளியிட்டுள்ள கருத்துகள் தொடர்பில் நானும் அறிந்துள்ளேன். போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஆறு ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலேயே அவர் இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டுள்ளார். பிரபாகரன் சுட்டுக்கொல்லப்பட்டார் என அப்போது இராணுவத்தினரால் விளக்கம் அளிக்கப்பட்டது. பிரபாகரன் உயிரிழந்தார் என்பதை அவர்தான் (விநாயகமூர்த்தி முரளிதரன்) உறுதிப்படுத்தினார். இந்த நிலையில், தற்போது அவர் இவ்வாறானதொரு கருத்தைக் கூறியுள்ளார்.
இது குறித்து உண்மை நிலை அறியச் சட்ட ஆலோசனை தான் பெற வேண்டும்–என்றார்.

(த-சி)

## ஜனாதிபதி

இதன்போது செய்தியாளர் ஒருவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கப்படுமா என வினவிய போது, அதுபற்றி தமக்குக் கூற முடியாது என தெரிவித்த அவர், ஜனாதிபதி ஜனநாயக ரீதியான முடிவை எடுப்பார் எனக் குறிப்பிட்டார்.
இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளும் நேற்றுச் சந்திப்பொன்றை நடத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.
இதன்போது இரண்டு தரப்பினரும் விரோத மனப்பான்மையின்றி, தேசிய அரசில் இணைந்து செயற்படுவது குறித்து கருத்துக்கள் பரிமாறிக் கொண்டதாக சரத் அமுனுகம குறிப்பிட்டுள்ளார். அமைச்சரவை சத்தியபிரமாணத்தின் பின்னர் இரண்டு தரப்பினரும் இணைந்து ஊடக அறிவிப்பு ஒன்றை விடுப்பது என்றும் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். (த)

## 8ஆவது

அமர்வு ஆரம்பமாகும். நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் இன்றையதினம் காலை கூடிச் சபாநாயகரைத் தெரிவு செய்வர்.
சபாநாயகர் பதவிக்காக ஒரு பெயர் முன்மொழியப்படுமாயின் அவர் ஏற்றுக்கொள்ளப்படுவார். ஆனால் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டோரின் பெயர்கள் முன்மொழியப்படும் சந்தர்ப்பத்தில் தேவையேற்படின் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படலாம்.
சபாநாயகர் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்வர். அதனைத் தொடர்ந்து சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர்களைக் தெரிவு செய்வார். தேவையேற்படின் இதற்காக இரகசிய வாக்கெடுப்பொன்று நடத்தலாம்.
பின்னர் சபை அமர்வு பிற்பகல் 3 மணிவரை ஒத்திவைக்கப்படும். 03 மணியளவில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வைபவரீதியான அமர்வு ஆரம்பமாகும். இதில் ஜனாதிபதி, நாட்டுத் தலைவரென்ற வகையில் கொள்கை விளக்க உரையாற்றுவார்–என்றார். (த)

## கொலைச்

போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த சந்தேக நபர் கடந்த ஏப்ரல் 27 ஆம் திகதி அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரைக் கல்லால் அடித்துக் கொலை செய்தார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது. இதனால் அவர் இதுவரை காலமும் பொலிஸாரிடம் சிக்காமல் தலைமறைவாக வாழ்ந்து வந்துள்ளார்.
இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு குறித்த நபர் வீடு ஒன்றில் தங்கியிருந்தமை குறித்துப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலிஸார் அங்கு சென்று சுற்றி வளைத்துவிட்டனர். 2 பொலிஸார் வீட்டினுள் நுழைந்துள்ளனர். இதனைக் கண்ட சந்தேக நபர் தான் வைத்திருந்து வாளை எடுத்துப் பொலிஸாரை வெட்ட முற்பட்டுள்ளார். அத்துடன் அங்கிருந்து தப்பியோடவும் முற்பட்டார். இதன்போதே குறித்த சந்தேக நபரின் தொடையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு காயப்படுத்தியதாகவும், அவ்வாறிருந்தும் அவர் தப்பியோட முற்பட்டபோது அவரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.
காயம் சீரானதும் அவரை நீதிமன்றில் முற்படுத்த எண்ணியுள்ளதாகவும் பொலிஸார் மேலும் கூறினர். (த-4-109)

## கல்விச்

களும், கட்சியில் நீண்ட காலம் விசுவாசமாக இருப் போருக்குமாகவே, தேசி யப்பட்டியல் ஆசனம் எமது நாட்டில் அரசமைப்பில் உருவாக்கப்பட்டது. இதற் கமைய, தேர்தலுக்கு முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட் டமைப்பும் தேசியப் பட்டியல் பெயர் விவரம் ஒன்றைத் தேர்தலுக்கு முன்னர் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பித்திருந்தது.
ஆனால் தேர்தல் முடிந்த பின்னர், தேசியப் பட்டியலில் குறிப்பிட்டவர்களைப் புறந்தள்ளி, தமக்கு விருப்பமானவர்களைத் தேசியப் பட்டியலில் இணைத்துக் கொண்டமை அநாகரிகமான செயல் என்று அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

(த-5)

## சர்வதேச

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுக்கின்ற அனைத்துக் கோரிக்கைகளையும் எம் மால் நிறைவேற்ற முடி யாது. உள்ளக விசாரணைக்குத் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்
விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்த மகிந்தவே ஐ.நா மனித உரிமைகள் ஆணையகத்துக்கு அனுமதி வழங்கினார்.
சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களுக்கும் நம்பிக்கை அளிக்கும் விதமாக மகிந்த ராஜபக்ச விசாரணைகளை மேற்கொள்ளவில்லை. அதன் காரணமாகவே இலங்கை சர்வதேச விசாரணைக்கு முகம் கொடுக்க நேரிட்டது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படாது. தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான முறையில் உள்ளக விசாரணை நடக்கும் –என்றார். (த)

## உள்ளகப்

னர், வெளிநாட்டுத் தூதுவர்களை கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தியபோதே, மங்கள சமரவீர இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலு வலகத்தினால் சர்வதேச விசாரணை நடத்தப்பட்டது. இந்த விசார ணையின் அறிக்கை இந்த மாதம் இடம்பெறவுள்ள, ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் வெளி யிடப்படவுள்ளது. இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு, உள்ளகப் பொறிமுறையை பின்பற்றவுள்ளதாக இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்துள்ளது. இவ்வாறான நிலையில், உள்ளகப் பொறிமுறையினூடாக விசாரணை கள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அதற்கு சர்வதேசத்தின் தொழில்நுட்ப உதவிகள் பெற்றுக் கொள்ளப்படும் என்று மங்கள கூறினார்.
மேலும், உளவியல், உட்கட்டுமான வசதி, மீள்குடியேற்றம் போன்ற விடயங்களிலும், பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் சர்வதேசத்தின் உதவி பெற்றுக்கொள்ளப்படுமென்று அவர் தெரிவித் துள்ளார்.
போர்க் குற்றம் தொடர்பான உள்ளக விசாரணைக்கு, பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யவும் உள்ளக விசாரணை பொறிமுறையொன்று உருவாக்கப்படுமென்று வெளிவிவகார அமைச்சர் மங்கள தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

## 50 கிலோ

மதியம்மேற்கொண்ட அதிரடிச்சோதனையின்போது குறித்த கஞ்சா கைப்பற்றப்பட்டது.
மாதகல் கடற்கரையில் சந்தேகத்துக்கிடமான முறையில் ஓடித்திருந்த வான் ஒன்றைக் கடற்கரைப் பகுதியில் பொலிஸார் அவதானித்துள்ளனர். அதனைப் பொலிஸார் கண்காணிப்பில் வைத்திருந்துள்ளனர். குறிப்பிட்ட வான் கடற்கரையில் இருந்து வீதிக்கு வந்ததைத் தொடர்ந்து வானை மறித்துச் சோதனைக்கு உள்ளாக்கியபோதே அதனுள் கஞ்சா இருந்தமை கண்டறியப்பட்டது.
கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப் பொருள் குறித்த வானில் வவுனியாவுக்குக் கொண்டு செல்லவென மறைத்து வைக்கப்பட்டு இருந்துள்ளது. பொலிஸார் சோதனையிட்டு அதனைக் கண்டறிந்து கைப்பற்றினர். அவற்றைக் கைப்பற்றியதுடன் வானில் இருந்த வவுனியாவைச் சேர்ந்த இருவரையும் பொலிஸார் கைது செய்தனர். அது தொடர்பில் மேலதிக விசாரனை மேற்கொண்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்தனர். (த-4-86)

## முடிவடைந்து

நடத்தியிருந்தன. குறித்த சந்திப்பில், உள்ளக விசாரணைப் பொறிமுறையை நிராகரித்துச் சர்வதேச நீதி விசாரணையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான பொறிமுறை ஒன்றை வலியுறுத்துவது என்று தீர்மானித்துள்ளதாக, மூன்று கட்சிகளும் இணைந்து விடுத்த ஊடக அறிக்கையில் தெரிவித்திருந்தன.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வெளிவிவகாரங்களைக் கையாளும் செயலாளர் என்ற அடிப்படையில், இந்த விடயம் தொடர்பில் சுமந்திரனிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடைபெற்று முடிவடைந்துள்ளது. அந்த விசாரணையின் அறிக்கைதான், இந்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வரவுள்ளது. அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பரிந்துரைகளை, சர்வதேசப் பொறிமுறையினூடாக நடைமுறைப்படுத்துமாறே நாம் வலியுறுத்தியுள்ளோம்.
தனித்து இலங்கை அரசிடம் இந்த விடயங்களை விட வேண்டாம் என்றும், சர்வதேச கண்காணிப்பு வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளோம். இராஜாங்கச் செயலாளர் நிஷ பிஸ்வாலுடனான சந்திப்பிலும் இதனை வற்புறுத்திக் கூறியிருந்தோம். மேலும், ஐ.நா. சபையில் இலங்கையின் இணக்கத்துடன் அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையிலும், இந்த விடயம் வலியுறுத்தப்பட்டிருக்கும். மீளவும் சர்வதேச விசாரணை நடத்துமாறு கோருவதில் அர்த்தமில்லை–என்றார்.

(த-5)

## எதிர்க்கட்சித்

பால சிறிசேன உறுதி வழங்கி யுள்ளதாக, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத் தில் நடந்த சந்திப்பின்போதே, ஜனாதிபதி மைத்திரிபால இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக விமல் வீரவன்ச தெரிவித்துள் ளார்.
இந்தச் சந்திப்பின்போது, ஐக் கிய மக்கள் சுதந்திர முன்னணி தொடர்பாகவும், ஐக்கிய தேசி யக் கட்சியுடன் சிறிலங்கா சுதந் திரக் கட்சி ஏற்படுத்தியுள்ள உறவு தொடர்பாகவும் தாம் சில பிரச்சினைகளை எழுப்பியதாக விமல் வீரவன்ச குறிப்பிட்டார்.
மேலும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர் என்ற வகையில், அதனை நாடாளுமன்றத்தில் சுதந்திரமான எதிர்க்கட்சியாக செயற்படுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று ஜனாதிபதியை தாம் கேட்டுக் கொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(த-5)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளிலிருந்து நாட்டை மீட்க வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரிபால கோரிக்கை



கொழும்பு, செப். 1

நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை தீர்மானிக்கும் போதைப் பொருளில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதில் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளைச் சரியான முறையில் நிறைவேற்ற அமைச்சுக்களும் நிறுவனங்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

போதைப் பொருளை ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற விசேட சந்திப்பில் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

போதைப் பொருள் ஒழிப்பு வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் போது, அமைச்சுக்களும் நிறுவனங்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள், புதிய யோசனைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் தமக்கு அறிக்கை ஒன்றை கிடைக்க செய்யுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

போதைப் பொருளை நாட்டுக்குள் கொண்டு வரும்போது மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புகளில் ஏற்படும் சட்ட ரீதியான பிரச்சினைகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேக்கோன் உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (த)

# கே.பி. மீதான குற்றச்சாட்டுக்கு ஆதாரம் இல்லை

## சட்டமா அதிபர் நீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, செப்.1

விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளராக செயற்பட்ட கே.பி. என்ற குமரன் பத்மநாதன் தொடர்பில் இதுவரை நடந்துள்ள விசாரணைகளின்படி, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கு தேவையான எந்த ஆதாரங்களும் கிடைக்கவில்லை என்று சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

குமரன் பத்மநாதனைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முற்படுத்த வேண்டும் என்று அரசுக்கு உத்தரவிடக் கோரி, ஜே.வி.பி. கடந்த ஜனவரியில் தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணையின் போதே சட்டமா அதிபர் தரப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.அந்த மனுவில் குமரன் பத்மநாதனுக்கு எதிராக 190க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

குறித்த வழக்குநேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது, கே.பி.க்கு எதிராகத் தொடர்ந்தும் விசாரணைகள் நடந்துவருவதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணையின்படி, அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், மேலதிக விசாரணைக்காக காலஅவகாசம் வழங்குமாறும் அரச சட்டத்தரணி நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

இதன்படி வழக்கு விசாரணையை ஏதிர்வரும் ஓக்டோபர் 28 ம் திகதி வரை ஒத்தி வைத்துள்ள நீதிமன்றம், அன்றைய தினம் குமரன் பத்மநாதனுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்களை பதிவு செய்யமுடியுமா என்பது தொடர்பான அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

ஆனால், சட்டமா அதிபரின் வாதத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று மனுதாரர் சார்பில் முன்னிலையாகிய அரச சட்டத்தரணி சுனில் வட்டகல தெரிவித்தார்.

குமரன் பத்மநாதன் விடுதலைப் புலிகளின் தலைவராகச் செயற்பட்டு, இலங்கை அரசுக்கு எதிராக பெரும் சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அண்மைய காலத்தில் அரசு தெரிவித்து வந்ததாகக் கூறிய சட்டத்தரணி சுனில் வட்டகல, அவ்வாறான ஒரு நபருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை பதிவதற்கு ஆதாரங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் கூறும் கருத்துக்கள் வேடிக்கையாக உள்ளது என்று தெரிவித்தார். (த)

# காப்பாளர் மீது மிளகாய்தூள் வீசி தப்ப முயன்ற 11 சிறுமியர் கைது

கொழும்பு, செப். 1

நீதிமன்ற உத்தரவின்கீழ் சிறுவர் நன்னடத்தை இல்லத்தில் தடுத்து வைக் கப்பட்டிருந்த 11 சிறுமியர் இல்லக் காப்பாளப் பெண்மணியின் முகத் தில் மிளகாய்த்தூளை வீசிவிட்டு தப்பியோட முயன்ற சமயம் அநுராதபுரம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

தப்பியோட முயன்ற இந்தச் சிறுமிகள் 13 – 19 வயதுக்கு இடைப்பட்டவர் கள் எனவும், கடந்த வியாழக்கிழமை இவர்கள் ஒன்றுசேர்ந்து இல்லக் காப்பாளருடன் சண்டை பிடித்தனர் எனவும், சண்டை முற்றிய சமயம் அவர் முகத்தில் மிளகாய்த்தூளை வீசிவிட்டுத் தப்பமுயன்றனர் எனவும் அநுராதபுரம் பொலிஸ் சிறுவர் மகளிர் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இல்லக் காப்பாளர் தங்களைத் தொடர்ந்து சித்திரவதைசெய்து வருவதாகவும், அவர் தங்களுக்குப் போதுமான உணவைத் தருவதில்லை எனவும் பொலிஸாரிடம் தெரிவித்த சிறுமிகள், மீண்டும் அதே காப் பகத்துக்குச் செல்லமுடியாது எனவும் கூறியுள்ளதாக அநுராதபுரம் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

இச்சிறுமிகளை அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகவும் அவர்களுக்கு இல்லக் காப்பாளர் இழைக்கும் கொடுமைகளை நீதிவானிடம் தெரிவிக்கவுள்ளதாகவும் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாகவும் அந்த உயரதிகாரி தெரிவித்தார். (த)

# எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பது சபாநாயகரே

## லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, செப்.1

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரை நியமிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கே இருப்பதாக ஐ. தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற நடைமுறைகளின்படி, எதிர்க்கட்சித் தலைவர் யார் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் சபாநாயகருக்கே உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு எந்த எதிர்க்கட்சி உறுப்பினரும் நிறுத்தப்படலாம். ஆனால், சபாநாயகரே இறுதியான முடிவெடுக்கும் அதிகாரமுள்ளவர் என்றார் கிரியெல்ல.

நாடாளுமன்ற அவைத் தலைவராக லக்ஸ்மன் கிரியெல்ல நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று முதல் இலவச தபால் வசதி

கொழும்பு, செப்.1

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இலவசமாக விசேட முத்திரை தபால் வசதிகளை வழங்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாகும் என தபால் மா அதிபர் டி.எம்.பி.ஆர். அபயரத்ன தெரிவித்துள்ளார்.


தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த குறித்த வசதி மீள ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:–

கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதை தொடர்ந்து உறுபினர்கள் பதவி ரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ கடிதங்களை அனுப்ப வழங்கப்பட்டிருந்த வரப்பிரசாதமும் இடைநிறுத்தப்பட்டது.

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு இன்று இடம்பெறுவதையடுத்து மீண்டும் அவ்வசதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அனைத்து அஞ்சல் அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது –என்றார். (த)

# கொழும்பு வந்தார் ஹமீத் கர்சாய்



கொழும்பு, செப்.1

இலங்கை இராணுவம் நடத்தும் பாதுகாப்புக் கருத்தரங்கில் பங்கேற்பதற்காக ஆப்கானிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி ஹமீத் கர்சாய் நேற்றுக் கொழும்பு வந்தார்.

இலங்கை இராணுவம் ஆண்டுதோறும் நடத்தும் பாதுகாப்புக் கருத்தரங்கு இன்று கொழும்பில் உள்ள கலதாரி விடுதியில் ஆரம்பமாகவுள்ளது. இன்றும் நாளையும், வளர்ந்து வரும் உலகளாவிய அச்சுறுத்தல் சூழலில் தேசிய பாதுகாப்பு என்ற தொனிப்பொருளில் இந்தப் பாதுகாப்புக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

34 நாடுகளைச் சேர்ந்த 66 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. இந்தப் பாதுகாப்பு மாநாட்டில், ஆப்கானிஸ்தானின் முன்னாள் அதிபர் ஹமீத் கர்சாய் கலந்துகொள்ளவுள்ளார்.

தலிபான் ஆட்சியில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர், 2004 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை ஆப்கானிஸ்தானின் ஜனாதிபதியாக இருந்தவர் ஹமீத் கர்சாய் என்பது குறிப்பிடத்தக்கது.

போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர், இராணுவத்தினால் நடத்தப்படும் ஐந்தாவது பாதுகாப்புக்கருத்தரங்கு இதுவாகும். (த)

# காணாமற்போனோர் விடயத்தில் ஐ.நாவின் தலையீடு அவசியமானது

## மேல்மாகாண சபை உறுப்பினர் சண்.குகவரதன் வலியுறுத்தல்

கொழும்பு, செப். 1

காணாமற் போனவர்களின் தாய்மாரின் கண்ணீரைத் துடைத்து அவர்களுக்கு ஆறுதல் வழங்காது மெத்தனப் போக்கை கடைப்பிடித்தால் அது நாட்டுக்கு சாபமாக மாறிவிடும் எனத் தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் உபபொதுச் செயலாளரும் மேல் மாகாண சபை உறுப்பினருமான சண்.குகவரதன், இவ்விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு தலையிட்டு காணாமற்போன தமிழ் மக்களுக்கு என்ன நடந்தது என்ற உண்மையை வெளிக்கொண்டு வர வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேல்மாகாண சபை உறுப்பினர் சண்.குகவரதன் மேலும் தெரிவித்திருப்பதாவது:–

காணாமற்போனவர்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தும் ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தற்போது நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.

அண்மையில் ஒரு விசாரணை இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் பிள்ளையைப் பறிகொடுத்த தாயொருவர் தனது குறையைக் கூறி கதறி அழுகிறார். ஆனால்,அதைக் கேட்கும் அதிகாரி உணவு உட்கொண்டு' மெத்தனப் போக்கை கடைப்பிடிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. ஒரு தாயின் கண்ணீரையும் வேதனையையும் கேட்காமல் இவ்வாறு செயற்படுவதனால் நாட்டுக்கு சாபமே' கிடைக்கும்.

தாய்மாரின் கண்ணீருக்கு சக்தி உள்ளது. எனவே, அதன் சாபத்திற்கு உள்ளாகிவிடக்கூடாது. எனவே, பல வருடங்களாக – தசாப்தங்களாகக் காணாமற்போனவர்கள் தொடர்பாக தீர்வு கிடைக்காமல் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது எனத் தெரியாமல் தத்தளிக்கும் தாய்மாருக்கு ஆறுதலை பெற்றுக் கொடுக்க ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு தலையிடவேண்டும். காணாமற்போன தமது உறவுகள் உயிரோடு இருக்கின்றனரா அல்லது என்னவானது எனும் உண்மையைத் தெரிந்துகொள்வதற்கு வழி வகுக்க வேண்டும்.

அதேபோன்று நல்லாட்சிக்கான அரசும் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். காணாமற்போனவர்கள் தொடர்பான விசாரணைகள் நியாயமாக – நீதியாக நடத்தப்படுவதை அரசு உறுதிசெய்ய வேண்டும் என்றும் சண்.குகவரதன் தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம்,செப்.1
வவுனியா லீக்கின் முதற் தர அணிகளுக்கு இடையிலான பண்டாரவன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மருதநிலா அணியை எதிர்த்து அல்ஜிரா அணி மோதவுள்ளது. (த-23-422)

* * *

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலையங்ஹென்றிஸ்அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன்அணிமோதவுள்ளது. (த-23)

* * *

அராலி ஏ.எல்.விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ். உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை, தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. அதில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டுமகாத்மா அணியைஎதிர்த்து யாழ்.ஐக்கிய அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து அராலி அண்ணா அணி மோதவுள்ளது. (த-23)

* * *

## காலிறுதியாட்டத்துக்கு தகுதி

யாழ்ப்பாணம்,செப்.1
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்
நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் நேற்று திங்கட்கிழமை மாலை,இடம் பெற்ற ஆட்டங்களில் முதலில் இடம் பெற்ற ஆட்டத்தில்
மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து மாதகல் சென். தோமஸ் யுத் அணி மோதிக் கொண்டது.
இதில் மயிலங்காடு ஞானமுரு கன் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கொலின்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 7:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (23)

# ஞானமுருகன், மன்னார் கில்லரி

# அசத்தலாக ஆடி அடுத்த சுற்றுக்கு





வடமராட்சி, செப். 1
பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டப்போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுகழகமும், மன்னார் கில்லரி விளையாட்டுக் கழகமும் வெற்றிபெற்று சுப்பர் 8லீக் சுற்றுக்குத் தகுதிபெற்றன.
முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நெடியகாடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் மோதியது. ஆட்டம் ஆரம்பமாகி 4 ஆவது நிமிடத்தில் ஞானமுருகனின் முன்கள வீரர் பார்த்தீபன் கோல் அடித்து தமது கோல் கணக்கை ஆரம்பித்து வைக்க அதனைத் தொடர்ந்து ஐந்து,ஆறாவது நிமிடங்களிலும் கோல்கள் பெறப்பட 3:0 என்று ஞானமுருகன் முன்னிலை பெற ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது. இடைவேளையின் பின்னரும் தமது ஆதிக்கத்தை தக்க வைத்த ஞானமுருகன் வீரர்களான சரதன், தவரூபன், சிமித், மற்றும் லஸ்ரின் ஆகியோர் மூலம் நான்கு கோல்களைப் பெற 7:0 என இலகுவாக வெற்றிபெற்றது. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக பார்த்தீபன் தெரிவு செய்யப்பட்டார்.
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மன்னார் கில்லறி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்தப் போட்டியின் ஆரம்பத்தில் இரு அணியினரும் அசத்தலாக ஆடியபோதும் நேரம் செல்லச் செல்ல கில்லரியின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது. கில்லரியின் வேகத்துக்குஈடுகொடுத்து அவர்களின் கோல் போடும் வியூகங்களைத் தடுப்பதற்கு உடுப்பிட்டி யுத் அணியினர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இந்தச் சூழ்நிலையில் ஆட்டத்தின் 19 ஆவது நிமிடத்தில் கில்லரி விளையாட்டுக் கழக வீரர் ரஞ்சன் ஒரு கோலைப் பெற ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. தொடர்ந்து 29 ஆவது நிமிடத்தில் அன்ரன் சொய்சா மேலும் ஒரு கோலைப் பெற்றதன் மூலம் முதல் பாதியில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. தொடர்ந்து இரண்டாம் பாதியாட்டத்திலும் கில்லரி அணியின் ஆதிக்கம் தொடரவே செய்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் கில்லரிக்கு தண்டனை உதை கிடைத்தது. அதனைத் தவறாமல் கோலாக்கினார் ரஞ்சா. இப்போது கில்லரியின்கோல்களின்எண்ணிக்கை 3:0 இருந்தாலும், கோல் போடும் முயற்சியை அவர்கள் விடுவதாக இல்லை. ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருக்கும் போது பாலதாஸ் மூலமாக மேலும் ஒரு கோலைப் பெற 4:0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாககில்லரி அணியைச் சேர்ந்த ரஞ்சா தெரிவு செய்யப்பட்டார். (த-108)

## போராடியது கோல்டன் பிரதேர்ஸ் சமநிலையாக்கியது வடதாரகை

மாங்குளம், செப்.1
பண்டார வன்னியன் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் கோல்டன் பிரதேர்ஸ் அணி கோலாக்கிய போதும் இறுதிக்கட்டத்தில் அதிரடியான கோலைப் போட தாரகை அணி ஆட்டத்தைச் சமநிலைப்படுத்தியது.
வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வவுனியா முன்னணி அணிகளுக்கிடையே நடத்தப்படும் உதை பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் கோல்டன் பிரதேர்ஸ் அணியை எதிர்த்து வடதாரகை அணி மோதியது. ஆட்டம் தொடங்கியதிலிருந்து இரு அணிகளும் மிகவும் பலமாக மோதிக்கொண்டன. இருந்தபோதும் வடதாரகை அணியின் வீரர் தாமரை 28வது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கோலாக்கினார். இதனால் இடைவேளைக்கு முன்னர் 1:0 என்ற கோல் கணக்கில் கோல்டன் பிரதேர்ஸ் அணி முன்னிலை வகித்தது. இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கியபோது இரு அணிகளும் தமது ஆட்ட வியூகங்களை மாற்றிக் களம் இறங்கின. இதனால் பிற்பாதியாட்டம் இரு கோல்காப்பாளர்களுக்கும் அச்சுறுத்தலாகவே அமைந்தது. இருந்தபோதும் 67 ஆவது நிமிடத்தில் வடதாரகைஅணிவீரர் குட்டிகோலைப் போட்டு சமப்படுத்தினார். இதனால் கோல்டன் பிரதேர்ஸ் அணியினர் தமது ஆட்டத்தை வேகப்படுத்தினர். இதனால் பலத்த போராட்டத்தின் மத்தியில் கோல்டன் பிரதேர்ஸ் அணி வீரர் டினேஸ் மேலும் ஒரு கோலைப் போட முனைப்புடன் ஆட்டத்தை துரிதப்படுத்திய வடதாரகை அணியினர் வீரர் ரூபன் 86வது நிமிடத்தில் கோல்களைப் போட்டு சமப்படுத்த நேர முடிவில் 2:2 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-422-23)

## யாழ். மத்திய கல்லூரி நடத்தும் உதைபந்தாட்டம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப்.1
யாழ்.மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின்முதல் சுற்று ஆட்டங்கள் இன்று செவ்வாய்க்கிழமை கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
காலை 9.30மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அருணோதயக் கல்லூரி அணி மோதவுள்ளது.
முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.
முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மகாஜனக் கல்லூரி அணி மோதவுள்ளது.
முற்பகல் 11மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி மோதவுள்ளது. (த-23)

## நவஜீவன்ஸை வீழ்த்தி வென்றது கலைமதி

யாழ்ப்பாணம்,செப்.1
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெறும் ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதிக் கொண்டது. இதில் நவிண்டில் கலைமதி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்குத்தகுதி பெற்றது. (த-23)

# ஊரெழு றோயல், சென். நியூஸ்ரார் அபாரமான ஆட்டங்களில் வெற்றி



யாழ்ப்பாணம்,செப்.1
அராலி ஏ.எல் விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ்.உதைபந்தாட்ட லீக் மற்றும் வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை, தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மூளாய்வளர்மதி அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஊரெழு றோயல் அணி 5:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் துணைவி சென் நியூஸ்ரார்அணியைஎதிர்த்துயங்ஹென்றிஸ் அணி மோதிக் கொண்டது.
இதில் துணைவி சென் நியூஸ்ரார் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தான் சுப்பர் லீக் 2016 பெப்ரவரி ஆரம்பம்

இரண்டு தடவைகள் பிற்போடப்பட்ட பாகிஸ்தான் சுப்பர் லீக் கிரிக்கெட் போட்டிகள் அடுத்த வருடம் கட்டாரில் நடத்தப்படவுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் நிறைவேற்றுக் குழுத் தலைவரும் முன்னாள் தலைவருமான நஜாம் சேதி தெரிவித்துள்ளார்.

இப் போட்டி எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளதுடன் 25 வெளிநாட்டு வீரர்கள் இதில் விளையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சுப்பர் இருபது- 20 லீக் போட்டிகளை நடத்துவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை 2013 இல் திட்டமிட்டது.

ஆனால் அனுசரணையாளர்கள் மற்றும் ஏற்பாடுகளில் சிக்கல்கள் நிலவியதால் 2014 இலும் 2015 இலும் பிற்போடப்பட்டது.

எனினும் இப் போட்டிகள் கட்டார் தலைநகர் டோகாவில் 2016 பெப்ரவரி 4ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடத்தப்படும் எனவும் மொத்தப் பணப் பரிசு ஒரு மில்லியன் டொலர் வழங்கப்படும் எனவும் சேதி குறிப்பிட்டார்.

பாகிஸ்தானில் 2009 முதல் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படாததன் காரணமாக வெளிநாடுகளின் அதி சிறந்த வீரர்களுடன் போட்டியிடும் சந்தர்ப்பத்தை பாகிஸ்தான் வீரர்களுக்கு உருவாக்கிக் கொடுப்பதே இப் போட்டியை கட்டாரில் நடத்துவதன் பிரதான நோக்கமாகும்.

இப்போட்டிகளில் நான்கு மேற்கிந்தியர்களும் இலங்கை, பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து, இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து தலா இரண்டு வீரர்களும் அழைக்கப்படுவர் என நஜாம் சேதி குறிப்பிட்டார். (த)



## ரியல் பெடிஸ் அணியை வீழ்த்தியது ரியல் மட்ரிட்

ஸ்பெயினில் நடைபெற்று வரும் ஸ்பானிஷ் லா லிகா கால்பந்துப் போட்டியின், நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ரியல் பெடிஸ் அணியை 0-5 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய ரியல் மட்ரிட் வெற்றியை தனதாக்கியது.

பரபரப்புடன் தொடங்கிய ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்திலேயே தனது அணிக்கான முதல் கோலை அடித்தார் கெரத் பேல். தங்களுக்கான கோல் கணக்கைத் தொடங்க ரியல் பெடிஸ் அணி போராடி வந்தது.

இந்த நிலையில், ஆட்டத்தின் 39 ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணியின் கோல் எண்ணிக்கை 2ஆக உயர்ந்தது.

அந்த அணியின் ஜேம்ஸ் ரொட்ரிக்ஸ் தனது முதல் கோலையும், அணிக்கான இரண்டாவது கோலையும் அடித்தார்.

அடுத்த 8 நிமிடங்களிலேயே அந்த அணியின் கரீம் பென்ஸமாவும் தனது பங்குக்கு ஒரு கோல் அடிக்க, மாட்ரிட் அணியின் கோல் எண்ணிக்கை 3ஆனது. தொடர்ந்து, ஆட்டத்தின் 50ஆவது நிமிடத்தில் தனது இரண்டாவது கோலை அடித்தார் ஜேம்ஸ் ரோட்ரிக்ஸ்.

மட்ரிட் அணி வீரர் ரபேல் வரானே, பெடிஸ் அணி வீரர் ஜார்ஜ் மோலினா மீது மோதியதை அடுத்து, பெடிஸ் அணிக்கு ஒரு பெனால்டி வாய்ப்பு கிடைத்தது.

எனினும், அந்த அணியின் ருபென் கேஸ்ட்ரோ அடித்த பந்தைக் கோலாக்க விடாமல் தடுத்தார் மட்ரிட் அணியின் காப்பாளர் கெய்லர் நவாஸ். இறுதியாக, ஆட்டத்தின் 88ஆவது நிமிடத்தில் தனது இரண்டாவது கோலை அடித்தார் கெரத் பேல்.

இறுதிவரை ரியல் பெடிஸ் அணி ஒரு கோல் கூட அடிக்க இயலாத காரணத்தால், 5-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது ரியல் மட்ரிட் அணி. (த)

## சாதனை பட்டியலில் இணைந்தார் புஜாரா

தொடக்க வீரராக களம் இறங்கி கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த 4ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை புஜாரா பெற்றுள்ளார்.

இந்தியா, இலங்கை அணிகளுக்கு இடையிலான 3ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி கொழும்பில் நடந்து வருகிறது. இதில் முதல் இன்னிங்சில் இந்தியா 312 ஓட்டங்கள் எடுத்தது.

இதில் தொடக்க வீரராக களமிறங்கிய புஜாரா நிதானமாக விளையாடி வந்த புஜாரா ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்கள் குவித்தார்.

இதன் மூலம் தொடக்க வீரராக களம் இறங்கி கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்த இந்திய வீரர்கள் வரிசையில் புஜாரா 4வது இடத்தை பிடித்துள்ளார்.

இதற்கு முன் கவாஸ்கர் (பாகிஸ்தானுக்கு எதிராக- 127 ஓட்டங்கள்), ஷேவாக் (இலங்கைக்கு எதிராக- 201 ஓட்டங்கள்), டிராவிட் (இங்கிலாந்துக்கு எதிராக- 146 ஓட்டங்கள்) ஆகியோர் இந்த சாதனையைப் படைத்துள்ளனர். (த)



## ஷரபோவா விலகல்



கிராண்சசிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், முன்னணி வீராங்கனையான மரியா ஷரபோவா காயம் காரணமாக விலகவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கிராண்ட்சலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயார்க்கில் நேற்று திங்கட்கிழமை தொடங்கியது.

இந்தப் போட்டியில் இருந்து முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான மரியா ஷரபோவா (ரஷ்யா) விலகியுள்ளார்.

வலது காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் விலகி உள்ளதாக போட்டி அமைப்பாளர் டேவிட் புருவர் தெரிவித்துள்ளார். ஷரபோவாவின் விலகல் செரீனாவுக்கு கூடுதல் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

உலக தரவரிசையில் 2ஆவது இடத்தில் இருக்கும் அவர் 2006ஆம் ஆண்டு அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்று இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## என்னை சுட்ட மேஜரை மன்னித்துவிட்டேன்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் அணிதலைவரும் அதிவேக- வேகப்பந்து வீச்சாளருமான வசிம் அக்ரம் தன்னை நோக்கி துப்பாக்கியால் சுட்ட ஓய்வுபெற்ற ராணுவ மேஜரை மன்னித்து விட்டதாக தெரிவித்துள்ளார்.

கராச்சி நகரில் உள்ள தேசிய ஸ்ரேடியத்தில் நடைபெற்ற பந்துவீச்சு பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்காக கடந்த 5ஆம் திகதி கர்சாஸ் பகுதி வழியாக வசிம் அக்ரம் தனது காரை ஓட்டிச் சென்றபோது, அவரது காரைத் தொடர்ந்துவந்த மற்றொரு கார் வசிமின் கார் மீது பக்கவாட்டில் மோதியது. அதில் இருந்த ஒருவர் வசிமை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார். இதில் சில குண்டுகள் வசிம் அக்ரமின் காரை துளைத்தது. இருப்பினும் இந்தச் சம்பவத்தில் வசிம் அக்ரம் மயிரிழையில் உயிர் தப்பினார்.

இந்தச் சம்பவம் தொடர்பான செய்திகள் வெளியானதையடுத்து, அப்பகுதியில் இருந்த கண்காணிப்பு கமராவில் பதிவாகியிருந்த காட்சிகளை ஆய்வு செய்து, ஓய்வு பெற்ற ராணுவ மேஜர் அமிர் ரெஹ்மான் என்பவரை கைது செய்து, அவர்மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர்.

இந்நிலையில், நடந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்தும், நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்டும் வசிம் அக்ரமுக்கு ஓய்வுபெற்ற ராணுவ மேஜரான அமிர் ரெஹ்மான் கடிதம் ஒன்றை எழுதியிருந்தார்.

நாட்டின் கௌரவமாக கருதப்படும் உங்களுடன் மோதவோ, உங்கள் மீது தாக்குதல் நடத்தவோ நான் ஒருபோதும் நினைத்ததில்லை. அசம்பாவிதமாக நிகழ்ந்துவிட்ட அந்தத் துப்பாக்கிச் சூட்டுக்காக என்னை மன்னித்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன் என அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த கடித்தைப் பார்த்த வசிம் அக்ரம், இரண்டு நிபந்தனைகளின் பேரில் அவரை மன்னிக்க சம்மதம் தெரிவித்தார்.

அமிர் ரெஹ்மானின் துப்பாக்கி உரிமம் ரத்து செய்யப்பட வேண்டும். அவரது ஓட்டுநர் உரிமமும் ரத்து செய்யப்பட வேண்டும். இதற்கு அவர் ஒப்புக்கொண்டால் அவரை மன்னித்து, அவர் மீதான பொலிஸ் நடவடிக்கையை கைவிடலாம் என அவர் நிபந்தனை விதித்திருந்தார்.

இதன்பேரில் ஆலோசனை நடத்திய பொலிஸார், அவரது துப்பாக்கி உரிமத்தை ரத்து செய்து விட்டதாக அறிவித்தனர்.

இதனையடுத்து, ஓய்வுபெற்ற ராணுவ மேஜர் அமிர் ரெஹ் மானை மன்னித்து விட்டதாக வசிம் அக்ரம் அறிவித்துள்ளதாக அவரது நிர்வாகி அர்சலான் ஹைடர் கூறியுள்ளார். (த)

## ரி 20 உலகக் கிண்ணம் வெல்வோம்- வோர்னர்

அடுத்த ஆண்டு (2016) இந்தியாவில் நடைப்பெறவிருக்கும் டி20 உலகக் கிண்ணத்தை வெல்வோம் என ஆஸ்திரேலியா அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான டேவிட் வார்ணர் தெரிவித்துள்ளார்.

20 ஓவர் உலகக் கிண்ணம் 2007 ஆம் ஆண்டு அறிமுகம் ஆனது. இதுவரை 5 உலகக்கிண்ண போட்டிகள் நடை பெற்றுள்ளன.

50 ஓவர் உலகக் கிண்ணத்தை 5 தடவை கைப்பற்றிய (1987, 1999, 2003, 2007, 2015) ஆஸ்திரேலிய அணி இதுவரை 20 ஓவர் உலகக் கிண்ணத்தை வென்றது இல்லை.

இது தொடர்பாக அவர் கூறுகையில்,

ஐ.பி.எல். போட்டியில் பெரும்பாலான ஆஸ்திரேலிய வீரர்கள் விளையாடுவதால் இந்திய ஆடுகள தன்மையை நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

இதனால் இந்தியாவில் நடைபெறும் 20 ஓவர் உலகக் கிண்ணத்தை வெல்ல எங்களுக்கு நல்ல வாய்ப்பு கிடைத்துள்ளது.

எங்களால் சிறப்பாக விளையாடி 20 ஓவர் உலகக் கிண்ணத்தை முதல் முறையாக வெல்ல முடியும். இந்தப்போட்டி சற்று சவாலாக இருந்தாலும் அபாரமாக விளையாட இயலும் என்ற நம்பிக்கை உள்ளது என தெரிவித்துள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செரீனா மீது நம்பிக்கை

ஆண்டின் கடைசி கிராண்ட்ஸ்லாம் போட்டியான அமெரிக்க ஓபன் ரென்னிஸ் போட்டி நியுயோர்க் நகரில் இன்றிலிருந்து தொடர்ந்து நடைபெறவுள்ளது.

நடப்பு சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ். இந்தப் போட்டியில் சம்பியன் பட்டம் வெல்லும் பட்சத்தில் கலண்டர் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர் (ஒரே ஆண்டில் 4 கிராண்ட்ஸ்லாமில் சம்பியனாவது) என்ற பெருமையைப் பெறுவார்.

இறுதியாக 1988 இல் ஜேர்மனியின் ஸ்டெபி கிராப், கலண்டர் கிராண்ட்ஸ்லாமை வென்றார். இந்நிலையிலே தற்பொழுது செரீனா அந்த வாய்ப்புக்காக காத்திருக்கின்றார்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பயிற்சிகள் யாவும் "திரு.ஷாம்சன்" ஆசிரியரினால் நேரடியாக வழங்கப்படும்!
சனி, ஞாயிறு பிரிவுகளுக்கான பதிவுகள் 05.09.2015 வரைமட்டும்!
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவின் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
"உரையாடற்பயிற்சியின் மூலம் ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஒரேயொரு பயிற்சிமையம்."
SAMSON
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 621 4567

IIS கணனி கற்கை நெறிகள்
புதிய பிரிவு ஆரம்பம்
09/09/2015
கற்கை நெறிகள்
- Microsoft Office
- Multimedia
- Web Designing
- DeskTop Publishing
- Hardware Technology
- Java Programming
- Networking
- Computerized Accounting
- Eng. Drawing & AutoCAD
- Visual Programming (C# /.NET)
- Android Apps
- Ethical Hacking
மேலதிக விபரங்களுக்கு 071 777 4 555
IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 209 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4 555



பாராட்டி வாழ்த்துகின்றோம்
இன்று (01.09.2015) செவ்வாய்க்கிழமை BMICH இல் கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டம் (BIT) பெறும்
ராமச்சந்திரன் மணிவண்ணன்
சிவராசா சசிதரன்
சுப்பிரமணியம் தெய்வமைந்தன்
இராஜ தகிரிசன் சிதம்பரநாதன்
ராஜஸ்வரன் நிரோசினி
துரைசிங்கம் கௌசிகா
சபாரட்ணம் ஜனனி
ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
(62754) வாழ்த்துவோர்: ஆசிரியர்கள்

வேலையாள்கள் தேவை
யாழில் பிரபல்யமான புத்தகசாலைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 077 699 2917

வேலையாள்கள் தேவை
ஹோட்டல் ஒன்றுக்கு றொட்டி, கொத்து றொட்டி தயாரிக்கத் தெரிந்த ஒருவரும் உதவியாளர் ஒருவரும் தேவை.
தொடர்பு: 077 125 8072

ஏசியன் தளபாடத்தின் 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு
மாபெரும் விலைத்தள்ளுபடியும் பரிசுக் குவியலும்
இன்று முதல் 15நாள்களுக்கு மட்டுமே




230, நாவலர் வீதி, (இலுப்பையடி ஆனைப்பந்தி சந்திக்கு இடையில்)
T.P: 0773583879, 0217916911
0778314261

# இந்திய அணி முன்னிலையில்



இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கிடையில் நடை பெற்று வரும் 3ஆவது மற்றும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இலங்கை அணிக்கு 386 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது இந்திய அணி.

இதனடிப்படையில் களமிறங்கிய இலங்கை அணி இன் றைய ஆட்டநேர முடிவில் 3 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது.

இந்திய அணி, இலங்கைக்கு வருகை தந்து 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இதில் 3 போட்டிகள் முடிவடைந்துள்ள நிலையில், 1–1 கணக்கில் போட்டி சம நிலையில் உள்ளது.

இதில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய இந்திய அணி, முதல் இன்னிங்சில், 312 ஓட்டங்களைக் குவித்தது. அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, புஜாரா ஆட்டமிழக்காது 145 ஓட்டங்களையும், மிஸ்ரா 59 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில் பிரசாத் 4 இலக்குகளையும், ஹேரத் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இதையடுத்து முதலாவது இன்னிங்சை தொடங் கிய, இலங்கை அணி 201 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்து 111 ஓட்டங்கள் பின் னிலையில் உள்ளது.


அணியின் அதிகபட்ச ஓட்டமாக, குசல் பெரேரா 55 ஓட்டங்களையும், ஹேரத் 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண் டனர். பந்து வீச்சில், இசாந் சர்மா 5 இலக்குகளையும், பின்னி, மிஸ்ரா தலா 2இலக்குகளையும் வீழ்த்தினர்.

69 ஓட்டங்கள் முன்னிலையில் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய, இந்திய அணி அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, அஸ்வின் 58 ஓட்டங்களையும், ரோஹித் சர்மா 50 ஓட்டங்களையும், ஸ்டுவர்ட் பின்னி 49 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

பந்து வீச்சில், பிரசாத், பிரதீப் தலா 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இன்றுடன் ஒரு நாள் மட்டும் மீத முள்ள நிலையில், இலங்கை அணிக்கு 386 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி 18.1 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடை நிறுத்தியது. இதனடிப்படையில் இலங்கை அணிக்கு இன்னமும் 319 ஓட்டங்கள் தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வினோத் காம்ளி மீது வழக்கு



வீட்டு வேலை செய்த பெண்ணை மூன்று நாள்களாக ஒரு அறைக்குள் அடைத்துவைத்து கொடுமைப்படுத்தியாக இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் வினோத் காம்ளி மீது மும்பை பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

தனது வேலைக்கு தகுந்த சம்பளத்தை அளிக்குமாறு சோனி கேட்டதையடுத்தே, வினோத் காம்ளியும் அவரது மனைவி ஆண்ட்ரியாவும் 3 நாட்களாக அங்கேயே அடைத்து வைத்ததாக சோனி கடந்த சனிக்கிழமை மும்பை பந்த்ரா பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

அவரது புகாரின் பேரில் பொலிஸார் நேற்று வழக்குப்பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர். (த)

# ரி 20 போட்டிகளின் தலைவராவாரா சிமித்?

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள ரி 20 போட்டியின் அணி தலைவரான இருந்த ஆரோன் பின்ச் காயமடைந்துள்ள நிலையில் ரி 20 தொடரிலும் ஸ்ரீபன் சிமித் அணி தலைவராக கடமையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆஸ்திரேலியா அணி, இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆஷஸ் தொடரில் விளையாடி முடிந்துள்ள நிலையில், நேற்றுத் திங்கட்கிழமை தொடக்கம் ரி 20 போட்டியிலும், ஒருநாள் தொடரிலும் விளையாடவுள்ளது.


சமீபத்தில் முடிந்த உலகக்கிண்ணப் போட்டிக்குப் பிறகு ஒரு நாள் போட்டியில் இருந்து மைக்கல் கிளார்க் ஓய்வு பெற்றார். அதனால் ஸ்ரிவன் சிமித் ஒருநாள் அணியின் தலைவராக பொறுப்பை ஏற்றார். தற்போது ஆஷஸ் தொடரில் அவுஸ்திரேலியா படுதோல்வியடைந்ததால் கிளார்க் டெஸ்ட் போட்டியில் இருந்து ஓய்வு பெற்றார்.

இதனால் டெஸ்ட் போட்டியிலும் சிமித் அணி தலைவராக நியமிக்கப்பட்டார்.

ஆஸ்திரேலியா ரி–20 அணியின் தலைவராக ஆரோன் பிஞ்ச் இருந்து வருகிறார். அவருக்கு இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியின்போது காயம் ஏற்பட்டது. இந்த காயம் குணமாகி இங்கிலாந்தில் கவுன்டி போட்டிகளில் விளையாடி வந்தார். அப்போதும் அவருக்கு காயம் ஏற்பட்டது.

ஆகையால் நேற்று நடைபெற்ற ரி 20 போட்டிக்கும் சிமித் தான் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதனால் அவரிடம் மூன்று வகை கிரிக்கெட்டுக்கும் நீங்கள்தான் அணி தலைவரா? என்ற வினா எழுப்பப்பட்டது.

அப்போது ரி 20 போட்டிக்கு ஆரோன் பிஞ்ச்தான் அணி தலைவர். அவர் அணிக்கு திரும்பிய பின்னர் பதவியை ஏற்பார் என்று உறுதிபடக் கூறினார். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை. நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.09.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.